# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர் : சா. குருசாமி







ஊசி 2 குத்து 2

★ நவம்பர் 1963 ★


இதனுள் :


ஒருமைப்பாட்டுக்கு ஓரே வ

அன்னி பெசன்ட் வரலாறு

மதச்சார்பற்ற அரசு

பொருளாதார மந்தம்

வானியலின் வரலாறு

டி. கே. சி.

குழந்தைக்குப் புத்தகம்

ஒற்றுமையும் வேற்றுமையு

கவிதைப் பகுதி

இலக்கியப் பகுதி

மதிப்புரை

இன்னும் பல

TELEGRAMS : "SWITCHES"

PHONE : 51436

MACHINE TOOLS MADE TO Gr. I. LIMITS

# KASIMARI

ADDS ONE MORE LINE

**WATCH FOR THE PRODUCTS SHORTLY APPEARING IN THE MARKET**

(1) $\frac{3}{4}''$ CAPACITY H. DUTY DRILL PRESS BENCH MODEL

(2) 6"x10" TOOL & CUTTER GRINDER BENCH MODEL

**KASIMARI MACHINE TOOLS CO.,**

KASIMARI BUILDINGS

295 THIRUVOTTIYUR HIGH ROAD

MADRAS 21

# எமது புதிய வெளியீடுகள்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| காலநிலை இயல்<br>இர. இராதா, M.A., L.T., M.A. | 10 | 00 |
| பகவதி எம். எல். ஏ.<br>"துமிலன்" | 8 | 00 |
| முதன்மைபெற்ற அமெரிக்கப் பெண்மணிகள்<br>தமிழில்: ஏ. ஆர். இந்திரா | 6 | 00 |
| இனி நாம் செய்ய வேண்டுவது யாது?<br>—டால்ஸ்டாய்<br>ரா. விசுவநாதன் | 3 | 50 |
| பாய் பரமானந்தன்<br>தென்காசி ச. சொக்கலிங்கம் | 3 | 25 |
| யார் அவர்?<br>மகரம் | 2 | 50 |
| இமயத்தில் நூறு மைல்<br>எஸ். அருண் | 1 | 50 |

*பழனியப்பா பிரதர்ஸ்*

சேப்பாக்கம்; . . . தெப்பக்குளம்;
சென்னை - 5 . . திருச்சி - 2

# தமிழ் நூல் நிலையம்

84, ஷெஞய் நகர் : : சென்னை-30

| | | ரூ. காசு |
|---|---|---|
| 1. | பிச்சைக்காரி (சிறு கதைகள்)<br>சா. குருசாமி. | 2·00 |
| 2. | பன்னீர்ச்செல்வம் (நாடகம்)<br>சா. குருசாமி. | 0·40 |
| 3. | குத்தூசி (12 இதழ்கள்)<br>பைண்டு செய்யப்பட்டது. | 8·00 |
| ★ 4. | குத்தூசி (கிண்டல்)-கட்டுரைகள்<br>புதிய தொகுப்பு | அச்சில் |
| ★ 5. | கட்டுரைக் கொத்து<br>சா. குருசாமி. | அச்சில் |

★ இவை இரண்டும் இதுவரையில் புத்தக உருவில் இல்லாதவை; திருத்தியும், பெருக்கியும், தனிச் சுவையுடன் எழுதப்பட்டவை. டிசம்பர் இறுதியில் கிடைக்கும்.

---

குறிப்பு:—மேற்கண்டவைகளுக்கு அஞ்சல் செலவு தனி.

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்
## மதுரை.

---

நம் நாட்டிலும் மற்றும் உலக முழுவதும் தேவை யான சகலவிதமான பருத்தி நூல்களும் தொழிற் துறைகளுக்கான விசேஷ ரக துணிகளும் உற்பத்தி செய்து விநியோகிப்பவர்கள்.

---

*மானேஜிங் ஏஜண்டுகள்:—*

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

பாண்டியன் பில்டிங்

ம து ரை

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன்: 82026) சென்னை-34.

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | $4\frac{1}{2}$% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $4\frac{3}{4}$% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $5\frac{1}{4}$% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | $5\frac{1}{2}$% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

எஸ். இராஜரத்தினம்

*காரியதரிசி.*

## கட்டுரையாளருக்கு வேண்டுகோள் :

1. நல்ல வெள்ளைத் தாளில், நெருக்கமில்லாமல், ஓரே பக்கத்தில்,
2. ஒரு படி (நகல்-காப்பி) வைத்துக்கொண்டு,
3. கூடுமானவரையில் பிறமொழிக் கலப்பின்றி எளிய, இனிய நடையில், கூறியது கூறாமல், சுருக்கி, சொல் சிக்கனத்துடன்,
4. கூடுமான வரையில் 5 பக்கங்களுக்கு மேல் இராமல்,

எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

"குத்தூசி"

# "குத்தூசி"

## இரண்டாவது ஆண்டுக்கு...

## தேவை! விற்பனையாளர்!!

குத்தூசிக்கு, முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தேவை :

| | |
|---|---|
| சிதம்பரம் | தூத்துக்குடி |
| திண்டுக்கல் | சீர்காழி |
| லால்குடி | காஞ்சீபுரம் |
| கரூர் | விருதுநகர் |
| மதுரை | ஆத்தூர் |
| திண்டிவனம் | புதுக்கோட்டை |
| உடுமலைப்பேட்டை | தர்மபுரி |

ஒரத்தநாடு

# MEENAKSHI GROUP OF MILLS


MADUR ... h India).

Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc..**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.


2.
: 'பால்'ன்னா என்னம்மா?
: 'அதோ ஊத்தராங்களே அதுதான்'

''மெய்ப்பொருள் காண்பது அறிவு''

குத்தூசி

ஊசி 2 நவம்பர் 1963 குத்து 2

# ஒருமைப்பாட்டுக்கு ஒரே வழி

> ''என்னுடைய தாய்நாட்டின் சுதந்தரத்தையும் ஒருமைப்பாட்டையும் எப்பாடுபட்டாயினும், என்ன தியாகம் செய்தாயினும், காக்க மக்கள் மேற்கொண்டுள்ள சங்கற்பத்தில் எனது உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.
>
> ''நாடு நலம் பெறவும் ஒற்றுமை வலுப்பெறவும் திடசித்தத்துடன் பாடுபட உறுதிமொழி கூறுகிறேன்.''

சென்ற மாதம் 20-ந் தேதியன்று இந்தியாவெங்கும் கொண்டாடப் பெற்ற தேசீய ஒருமைப்பாடு விழாவில் அரசாங்க ஊழியர்களும், மாணவர்களும், தொழிலாளர்களும், ஆசிரியர்களும் மற்றும் பல கோடிக்கணக்கான பொதுமக்களும் ஆங்காங்கு சேர்ந்து கூடி எடுத்துக்கொண்ட வாக்குறுதி தான் மேலே காணப்படுவது.

''உறுதி கூறுவது எளிது; அதன்படி நடப்பதுதான் அரிது'', என்று இந்திய முதலமைச்சரே கூறிவிட்டார்.

இந்தியாவுக்கு வடக்கிலும், மேற்கிலும் நிலையான இரு எதிரி நாடுகள் வாய் திறந்தபடியே காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, இனி இந்தியா 24 மணி நேரமும் விழிப்பாக இருந்தே தீர வேண்டும். இருதலைக் கொள்ளியின் இடையில் அகப்பட்ட எறும்பின் நிலைதான் இன்று இந்நாட்டின் நிலை.

இந்நிலையில் வெறும் ஒருமைப்பாடு உறுதிமொழி மட்டும் போதுமா? ஒருமைப்பாட்டுக்கு இடையூறாக உள்ளவை எவை?

> "மக்களுக்கிடையே தடுப்புச் சுவர்களாக உள்ள சாதி, மதம், மொழி, மாநிலம்—போன்ற வேற்றுமைகளைத் தகர்த்து எறிய வேண்டும்,"

என்று முதலமைச்சரே சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வுணர்ச்சிகளை மறந்துவிட வேண்டுமென்று கூறிவிட்டால் போதுமா? நோயுள்ளவன் அந்நோயை மறந்துவிட முடியுமா? ஒரு நேரம் மறந்தாலும், மற்ற நேரத்தில் நோயின் தொல்லை இருந்து கொண்டு தானே இருக்கும்?

இந்நாட்டில் பல மொழிகள் இருப்பது போல், பல ஜாதிகளும், பல மதங்களும் இருந்துதான் தீரும்; இவற்றை ஒன்றும் செய்ய முடியாது, என்று ஆளும் கட்சியார் கூறுவார்களேயானால், தேசீய ஒருமைப்பாடும் உருவாகவே ஆகாது. இது உறுதி.

படிப்பினாலோ, பணத்தினாலோ, சாதி உயர்வு-தாழ்வு ஒழிந்திருக்கிறதா? கோவில்களிலும் "உயர்சாதியார்" உண்டிச்சாலைகளிலும் சமைப்பதற்கும், அர்ச்சனைக்கும் தனி சாதி இருந்து கொண்டு தானே இருக்கிறது? சாதிச் சின்னங்களும், பட்டங்களும், மதச் சின்னங்களும், மதப் பட்டங்களும் குண்டூசி முனையளவு கூடக் குறையவில்லையே! சாதி நோய் கிருஸ்துவர்களையும், முஸ்லிம்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும்கூடப் பற்றிக் கொண்டிருக்கிறதே! சுடுகாட்டிலும் கூட சாதி இருக்கிறதே!

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு மதவெறியும், சாதிவெறியும் துளிர்விட்டல்லவோ, செழித்துக்கொழுத்து வளர்ந்திருக்கின்றன? "ஜனநாயகம்" என்ற போலிப் பெயரினால் நடைபெறுகின்ற தேர்தலில் (Election) மத நாயகமும், சாதி நாயகமும் அல்லவோ தலைவிரித்தாடுகின்றன?

இவற்றை அடியோடு ஒழிப்பதற்கோ, குறைப்பதற்கோ, கடந்த 16 ஆண்டுகளில் இன்றைய ஆட்சி செய்துள்ள முயற்சி என்ன?

இவ்வேற்றுமை உணர்ச்சிகளையும், வெறித்தனத்தையும், வைத்துக்கொண்டே (இவற்றிற்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்பும் இருக்கும் போது) வேற்றுமைச் சுவர்கள் இடிபட வேண்டும் என்று கூறுவதில் பொருள் உண்டா?

ஒன்று மட்டும் ஒப்புக்கொள்ளலாம்; அதுவும் அரசாங்க முயற்சியினால் அல்ல; எதிரியின் படையெடுப்பினால் விளைந்த விளைவு!

நாட்டைப் பிரிக்க வேண்டும் என்பவர்கள் அந்த எண்ணத்தை இன்று அடியோடு கைவிட்டு விட்டனர். "தமிழ்நாட்டைத் தனி நாடா

கப் பிரிப்பதற்காகக் கிளர்ச்சி செய்வோம்", என்று வரிந்து கட்டிய பெருந்தலைவர்கள்கூட, "அதோ சீனன்! அவன் போகட்டும்! பார்க்கிறேன், ஒரு கை!" என்று நொண்டிக் குதிரைக்கு சருக்கினதே போதும், என்று சருக்கி விழுந்து விட்டார்கள்!

இனி, நாட்டுப் பிரிவினை பற்றி எந்தத் தலைவரும், எந்தக் காலத்திலும் பேசமாட்டார்கள். ஏனெனில், இதற்கான திட்டமோ, உறுதியோ, எவரிடமும் இல்லை. பொது மக்களை ஏமாற்றிய வரையில் லாபம்! அவரவருக்குப் புகழும் பணமும் கிடைத்த வரையில் லாபம்!

ஆனால் ஆளும் கட்சியாரின் கடமை என்ன? தேசீய ஒருமைப்பாட்டுக்கு இன்றியமையாத சாதி-மத ஒழிப்புச் சட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டாமா?

ஊரில் 'காலரா' நோய் கண்டு சிலர் மடிந்து கொண்டேயிருக்கும் போது, "அதை மறந்து விடுங்கள்; ஊரார் எல்லோரும் ஒற்றுமையாக இருங்கள்!" என்று அறிவுரை கூறினால் போதுமா? 'கால்ரா'வை விட ஆபத்தாக அல்லவோ இருக்கிறது, மதம்? கால்ராவைவிடப் பயங்கரமாக அல்லவோ இருக்கிறது சாதி?

இவ்விரண்டு நோய்களைப் பற்றியும் எதிர்க் கட்சிகளுக்குத்தான் கவலையில்லை; பொறுப்பில்லை—என்றால் ஆளும் கட்சியும் அவைகளின் அண்ணனாகத் தானே இருக்கிறது?

பிள்ளையைக் கிள்ளி விட்டுக் கொண்டே தொட்டிலை ஆட்டித் தாலாட்டுப் பாடினால், பிள்ளை எப்படித் தூங்கும்?

மதப் பண்டிகைகளுக்குப் பொது விடுமுறை! அரசாங்கப் பணிமனைகளில் இந்து மதப் படங்கள்! பள்ளிகளில் மதப் படிப்பு! அரசாங்க மருத்துவ நிலையங்களில் மதக் கோவில்கள்! இவை ஒருபுறம்!

"மத வேற்றுமைச் சுவர்களை இடித்துத் தள்ளுங்கள்!"

இது இன்னொரு புறம்!

சமுதாயத்துறை நோயை அடியோடு மறந்துவிட்டு, (அல்லது பொருட்படுத்தாதபடி) பொருளாதார—கலாசார—அரசியல் மேல்பூச்சு மருந்துகளைத் தடவிக் கொண்டிருக்கிறது, இன்றைய அரசாங்கம்.

ஆதலால்தான் ஒரு சாண் ஏறினால் ஒரு முழம் வழுக்குகிறது. அடிப்படையே யில்லாதபடி, "ஒருமைப்பாடு" மேல் மாடி கட்டும் முயற்சி முழு மூச்சாக நடந்து கொண்டிருக்கிறது!

பகுத்தறிவு "மதம்!" மனித "சாதி!" இந்த இரண்டும் இந்நாட்டில் மலருமானால் தேசீய ஒருமைப்பாடு என்ற கனி தானாகவே காட்சி தரும்!

பழைய வேற்றுமைச் சுவர்களுக்கு சிமெண்ட் பூசி, வர்ணம் அடித்துக் கொண்டிருக்கின்ற சட்ட திட்டங்கள் உள்ள வரையில் ஒருமைப்பாடு என்ற நன்முயற்சி வெறும் காட்டுக் கூச்சலாகப் போய் விடுமென அஞ்சுகிறோம்.

மக்களை நல்வழிப் படுத்தும் பொறுப்பு யாருக்கு? ஆட்சி புரிவோர்க்கல்லவா? கையில் கத்தி (அதிகாரம்) இருக்கும் போது காயைப் பல்லால் கடித்துக் கொண்டிருப்பது அறிவுடைமையல்ல.

# "முருகா! முருகா!!"

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தடைச் சட்டம் வருவதற்கு முன், மத பக்தர்கள் உடம்பில் சின்னஞ்சிறு வேல்களைக் குத்துவார்கள். முதுகுத் தோலை இழுத்து அதில் வளையத்தை மாட்டி அதிலிருந்து கயிறு கட்டி ஒரு சிறு தேருடன் பிணைத்திருப்பார்கள். நாக்கை நீட்டி அதில் ஒரு வேலைச் சொருகுவார்கள். இப்படியெல்லாம் சித்திரவதை செய்யும்போது, தாங்க முடியாத வலியினால், "அய்யோ, அப்பா!" என்று கதறாமலிருப்பதற்காக "முருகா! முருகா!!" என்று சொல்லிக் கொண்டே யிருக்கச் செய்வார்கள்!

சிறு குழந்தைகளுக்குக் காது குத்தும்போது, வலியினால் கத்தாமலிருப்பதற்காக வாய் நிறைய வாழைப்பழத்தைத் திணித்து விட்டுக் காதில் ஓட்டை போடுவார்கள்.

அறுவை மருத்துவர்கள் நோயாளியின் உடல் உறுப்புக்களை அறுக்கும்போது, வலி தெரியாமலிருக்கும் பொருட்டு மயக்க மருந்து கொடுத்து விடுவார்கள்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும் இம்மாதிரி முறையைக் கையாண்டு வருவது பாராட்டத்தக்கது தான்!

நாட்டிலே விலைவாசி ஏற்றம்! வேலையில்லாத் திண்டாட்டம்! வீடில்லாக் கொடுமை! பாதிப் பேருக்குமேல் படிக்கத் தெரியாத அக்கிரமம்! பணம் படைத்தவரின் சுரண்டல்! எங்கு நோக்கினும் லஞ்சம்! நோய்களின் கொடுமை! இன்னும் பல.

இவற்றையெல்லாம் நினைத்து நினைத்துப் பாமர மக்கள் மனமொடிந்து விடாமலிருப்பதற்காகவே நாடெங்கும் கேளிக்கைகள்! சினிமாக்கள்! திருவிழாக்கள்! பண்டிகைகள்!

1964-ஆம் ஆண்டுக்கான பண்டிகை விடுமுறைப் பட்டியல் வெளி வந்து விட்டது! போகி, பொங்கல், ரம்சான், தூய வெள்ளிக் கிழமை, பக்ரீத், தமிழ் ஆண்டுப் பிறப்பு, முகரம், விநாயகசதுர்த்தி, ஆயுதபூஜை, தீபாவளி, கிருஸ்ட்மஸ்—ஆகிய பண்டிகைகளுக்காக எல்லோருக்கும் பொதுவிடுமுறையாம்!

ஆம்! மக்களுக்கு அபின்! மதம்! அபின் மயக்கமிருந்தால் தான் வாழ்க்கைத் துயரத்தை மயக்க நேரம் வரையிலாவது மறந்திருக்க முடியும்!

மதம் என்ற "பேய்" பிடித்தால்தான் மனிதன் தன்னை மறந்து ஆடிக் கொண்டே யிருப்பான்!

மதச்சார்பற்ற ஆட்சி அல்ல, இது! மதப் பிரசார ஆதரவு ஆட்சி. சுதந்திரம் வந்த பிறகு இந்திய யானைக்கு நல்ல மதம் பிடித்திருக்கிறது! நேருவைவிட சங்கராச்சாரிக்கும், காமராசரைவிட சாயிபாபாவுக்கும் மரியாதை வளர்ந்து கொண்டே யிருக்கிறது. திருப்பதி உண்டியல் வருமானம் பல மடங்கு பெருகிக் கொண்டே யிருக்கிறது. இதற்குக் காரணம், "மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு" என்கிறார் ஒரு பெரியார்! அல்ல, அல்ல! பகுத்தறிவுப் பிரசாரத் தேய்வு, என்பதே உண்மை.

ஆள்வோர் கேட்கலாம், "நாங்கள் மதத்தில் எப்படித் தலையிடுவது?" என்று. தலையிட வேண்டாம் என்று தானே கூறுகிறோம்?

எந்த மதப் பண்டிகைக்குமே பொது விடுமுறை கிடையாது; அவரவர் 'காஷுவல் லீவ்' எடுத்துக் கொள்ளலாம், என்று ஒரு வரி உத்தரவுதானே தேவை? ஒவ்வொரு மாதமும் 7, 14, 21, 28 ஆகிய தேதிகள் வார விடுமுறைகளாக இருக்கலாமே!

இப்படிச் செய்தால் மதப் பண்டிகைகளுக்கு விளம்பரம் இருக்காது என்று அரசாங்கம் வருந்துமேயானால், மருத்துவ மனை, பள்ளிக் கூடம், தொழிற்சாலை—போன்றவைகளை மூடி விட்டு, இப்பொறுப்புக்களை விநாயகர், சரஸ்வதி போன்ற இந்து மதக் கடவுள்களிடமும், கிருஸ்து–இஸ்லாம் மதக் கடவுள்களிடமும் கடவுள் தூதர்கள், அவதாரங்கள், கடவுளின் மனைவிமார்கள், பிள்ளைகள் முதலியோரிடமும் ஒப்படைத்து விடலாமே!

மார்பில் நூல் அணிதல், கிருஷ்ணன்—ராமன் "பிறந்த" நாட்கள் போன்ற இரண்டொரு பண்டிகைகள் மட்டுமே விடுமுறைப் பட்டியலில் இடம் பெறவில்லை. ஏனோ தெரியவில்லை.

மதமும் கடவுளும், மதப் பண்டிகையும், கடவுள் வணக்கமும்—இல்லாதபடி இந்த ஆட்சியும் நடக்காது, மக்களும் உயிர் வாழ முடியாது என்ற "உண்மையை" ஆட்சியாளர் ஒருக்கால் கண்டு பிடித்திருந்தால், அதையாவது மேலும் சீரும் சிறப்புமாகச் செய்யலாமே! போலீஸ்காரர்—நீதிபதிகள்—டாக்டர்கள்—பள்ளி ஆசிரியர்—எஞ்சினியர்—தொழிலாளிகள்—ஆகியோரை நீக்கி விட்டு, மக்களின் ஒழுக்கத்தையும் வாழ்க்கை வளர்ச்சியையும் புரோகிதக் கூட்டத்தாரிடமே ஒப்படைத்துவிடலாமே!

எதற்காக இந்த இரட்டை வாழ்க்கை? ❖

பள்ளியில் கற்பிக்கும் பூகோள ஆசிரியர் சூரிய கிரகணத்தின் காரணத்தை ஒரு விதமாகக் கற்பித்து விட்டு, அன்று மாலையிலேயே கிரகணத் தீட்டுப் போவதற்காகத் தலை முழுக்குப் போடுவது போன்ற போலி வாழ்க்கை ஏன்?

கசடறக் கற்று அதற்குத் தக நிற்கவேண்டுமென்ற அறிவுரை, தனிப்பட்டவருக்கு மட்டுந்தானா? ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளவர்கள், கசடறக் கற்று அதற்கு மாறாக நடக்க வேண்டியவர்களா?

"அரசியல் என்றால் அப்படித்தான்" என்ற விடை வருமானால், "அப்படியானால் சரி; மன்னிக்கவும்" என்றுதான் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம்! ★

## கரப்பான் பூச்சி

உலகெங்கும் பரவியுள்ள பூச்சிகளில் கரப்பான் பூச்சி முக்கியமானது. இதில் 3500 வகைகள் உண்டு. இது தின்னாத பொருள் இல்லை. சோப்பு முதல் தோல் வரை; துணி முதல் மனித உணவுப் பொருள் வரை; எதையும் தின்னும். எங்கும் இருக்கும். அடித்தாலும் எளிதில் சாகாது. பாலைவனம் முதல் சாக்கடை வரையில், எந்தவித சூழ்நிலையிலும் உயிர் வாழும்.

இதன் வாழ்நாள், சுமார் 13 மாதங்கள்; உணவும் தண்ணீரும் இல்லாமல் ஒரு மாதம் உயிருடனிருக்கும்; தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டு இரண்டு மாதமிருக்கும்; தண்ணீரே இன்றி வரண்ட உணவுடன் அய்ந்து மாதம் வாழ்ந்திருக்கும்.

இதன் அருவருப்பான நாற்றம் காரணமாகவே வேறு பூச்சிகள் இதைத் தின்பதில்லை; இதன் கெட்ட வாடை ஒரு தற்காப்பு!

மாப்பண்டங்களிலும் இனிப்பிலும் இதற்குப் பெரு விருப்பம். ஆதலால் மா அரைக்கும் ஆலைகளிலும், ரொட்டிக் கிடங்குகளிலும், உண்டிச்சாலைகளிலும் ஏராளமாக இருக்கும். அடுப்பங்கரையிலும், குளியல் அறையிலும் மிகுதியாக இருக்கும்.

ஆனால், இது உண்பதைக் காட்டிலும் உணவுப் பொருள்களில் எச்சமிட்டுக் கெடுத்து, அழுக்காக்கிப் பாழாக்குவது தான் அதிகம்.

இப்பூச்சி மூலம் காசம், வாந்திபேதி, குஷ்டம், சீதபேதி, டைஃபாயிடு போன்ற நோய்கள் பரவுவதாகக்கூடக் கூறப்படுகிறது.

மிக விரைவாகப் பெருகுவதாலும், எளிதில் கொல்ல முடியாததாலும் மருத்துவ ஆராய்ச்சிக்கு இதைப் பயன்படுத்துகின்றனர். இதை அடியோடு ஒழிக்கவே முடியாது; பெருகுவதைக் குறைக்கலாம். எத்தகைய சாவு மருந்தைப் பயன்படுத்தினாலும், நாளடைவில் அதையும் எதிர்த்து நின்று வாழப் பழகி விடுகிறது. வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்வது ஒன்றுதான் வழி.

K. S. மகாதேவன் B. SC., M. A.

குழந்தைக்குப் புத்தகம் :

# 4. வேறுபடும் குழந்தைகள்

*[குழந்தைகளின் படிப்பார்வத்தைப் பெருக்குவதில் ஆசிரியர்களைவிடப் பெற்றோர்களுக்குத்தான் மிகுதியான வாய்ப்பும், பொறுப்பும், நேரமும் உண்டு என்று கட்டுரையாளர் கூறுவதை மறுக்க முடியாது. குழந்தைகள் எல்லோருமே ஒரே திறமை வாய்ந்தவர்களாயிருக்க முடியாது; பிறப்பு, சூழ்நிலை, வளர்ப்பு முறை ஆகியவற்றைப் பொறுத்தே குழந்தைகளின் படிப்பு ஆர்வமும் கூடுதலாகவும் குறைவாகவும் இருக்கும். இதுபற்றிய இத்தொடர் கட்டுரைகள் பெற்றோருக்கு நன்கு பயன்படும்.]*

குறிப்பிட்ட வயதைச் சேர்ந்த குழந்தைகள் குறிப்பிட்ட வகைப் புத்தகங்களை விரும்புகின்றன என்று கூறுவது ஒரு பொதுவான உண்மையேயாகும். அதனை வைத்துக்கொண்டு ஒத்த வயதினையுடைய குழந்தைகள் எல்லாம் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டன என்று கொண்டுவிடுதல் தவறான ஒரு முடிவாகும்! தோற்றம், எண்ணம், செயல் முதலிய பல்வற்றிலும் குழந்தைக்குக் குழந்தை வேறுபடுவதைக் காண்கின்றோம். துணிக்கடையில் பத்து வயதுக் குழந்தைக்கு என்று தைத்து விற்கும் ஒரு சட்டை நமது குழந்தைக்கும்—அது பத்து வயதுக் குழந்தையாக இருக்கும் காரணத்தாலேயே—சரியாக இருக்கும் என்று முடிவு செய்துவிட முடியாது! புத்தகங்களும் அப்படியே. ஒரு குழந்தைக்குப் பிடிக்கும் ஒரு புத்தகம் அதே வயதுடைய மற்றொரு குழந்தைக்குப் பிடிக்காமலும் போய்விடலாம்! குழந்தைகளிடம் வயதாலும், உடல் வளர்ச்சியாலும், உள வளர்ச்சியாலும், சூழ்நிலையாலும், பிறவற்றாலும் ஏற்படும் வேறுபாடுகளைத் தனியாள் வேற்றுமை (Individual Differences) என்று அழைக்கின்றோம்.

## பொது நூல்கள்

ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள தனித் தன்மையைப் பெற்றோரும் ஆசிரியரும் உணர்ந்து கொண்டு அதனதன் மனத்திற்கு ஏற்ற புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் துணைசெய்ய வேண்டும். குழந்தைகளை ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த புத்தகங்களையே—அது எவ்வளவு சிறந்த துறையாக இருந்தாலும் சரியே-படிக்கும்படி கட்டுப்படுத்துவது பெருந்தவறாகும். ஒரு பையன் கற்பனைக் கதைகள் இருக்கும் பேழையின் பக்கமே செல்லாமல், அறிவியல் பற்றிக்

கூறும் ஏடுகளிலே ஆழ்ந்து விடுகிறுன். மற்றொரு பையன் எந்திரங்களையும் தொழில் நுட்பங்களையும் விளக்கும் புத்தகங்களை விரும்பிப் படிப்பதோடு மாதிரிக் கருவிகள் செய்வதிலும், வானொலிப் பெட்டி செய்வதிலும் காலத்தைச் செலவழிக்கிறுன். மூன்ருவது பையன் ஒருவன் இவ்வகைப் புத்தகங்களில் எதனையும் தொடாமல் வீரச் செயல்பற்றிய கதைகளிலே ஆழ்ந்து உலகையே மறக்கின்ருன்.

அவ்வாறே, பெண்களை எடுத்துக்கொண்டாலும், வரலாற்றுப் புதினங்கள் படிப்பதிலே சிலர் சிறப்பான ஆர்வத்தைக் காட்டுகின்றனர். சிலர் கவிதை, கலை ஆகியவற்றில் கருத்தைச் செலுத்துகின்றனர். ஆனுல், சிலரோ, பள்ளி வாழ்க்கைபற்றிய கதைப் புத்தகங்களைத் தவிர வேறு எதனையும்படியாமல் இருக்கின்றனர். குழந்தைகளின் படிப்புப்பற்றி அறிவியல் முறையில் ஆராய ஆராய அவர்களிடம் காணப்படும் தனித்தன்மையின் சிறப்பு நமக்கு நன்கு புலனுகிக்கொண்டு வருகிறது. இந்நிலையில், எல்லாக் குழந்தைகளும் படிக்க வேண்டிய புத்தகங்கள் என்று சில புத்தகங்களையே நாம் குறிப்பிட முடியும். பெரும்பாலான புத்தகங்கள், அவ்வத்துறையில் ஆர்வமுடைய குழந்தைகள் மட்டுமே விரும்பிப்படிக்கக் கூடியவையாகவே இருக்கும்.

## பாப்பாப் புத்தகம்!

குழந்தைகள் பொதுவாகப் பல திறப்பட்ட செய்திகளையும் படித்தறிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். ஆனுலும், அவர்களின் படிப்பின் பரப்பெல்லை (Range of Reading) அவர்களின் தனித்தன்மைச் சிறப்பை ஒட்டியே அமைகின்றது. எல்லாக் குழந்தைகளும் ஒரே அளவில் உடல் வளர்ச்சியினைப் பெறுவதில்லை. பையன்களைவிட இரண்டாண்டிற்கு முன்னதாகவே பெண்கள் முன்னிளமைப் பருவத்தைக் கடந்து இளமைப் பருவத்தை எய்தி விடுகின்றனர். பையன்களில் சிலர் 12 வயதிலேயே 16 வயது மதிக்கக் கூடிய நிலையில் தோற்றம் அளிக்கின்ருர்கள். அவ்வாறே பெண்களிலும் சிலர் 11 வயதிலேயே 15 வயதுப் பெண்கள் போலத் தோன்றுகிருர்கள். இத்தகைய காரணங்களால் ஒரு குழந்தைக்குப் பிடிக்கின்ற ஒரு புத்தகம் அதே வயதுடைய மற்றொரு குழந்தைக்கு வெறும் 'பாப்பாப் புத்தகமாக'த் தோன்றுகிறது!

## உடல் நலமும் படிப்பும்

உடல் நலத்திற்கும் புத்தகப் படிப்பிற்கும் நெருங்கியதொடர்பு இருப்பதையும் நாம் காண்கின்ருேம். உடல் நலம் குன்றிய நிலையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் குழந்தை இருந்த இடத்தை விட்டு அசையாமல் நிறைய புத்தகங்களைப் படித்து முடிக்கின்றது. ஆனுல், உடல் வளம் மிகுந்த குழந்தையோ நாளின் பெரும்பகுதிக் காலத்தை விளையாட்டரங்கில் ஓடியாடிக் கழித்தபடி இருக்கின்றது. அதிக அளவில் புத்தகங்களைப் படிப்பதில் அதற்கு ஆர்வம் செல்வதில்லை.

## சூழ்நிலையும் படிப்பும்

பள்ளி, வீடு, ஆகிய இடங்களில் நிலவும் சூழ்நிலை குழந்தையின் படிப்பார்வத்தைப் பெரிதும் மாற்றுகிறது என்பதையும் நாம் அறிதல் வேண்டும். நல்ல பொருள் வசதியையும், நற்பழக்க நற்பயிற்சிகளையும் வீட்டில் பெற்றிருக்கும் குழந்தைகள் அத்தகைய சூழ்நிலைகளைப் பெற்றிராத

குழந்தைகளைக் காட்டிலும் படிப்பார்வத்தில் பின்தங்கியே இருப்பார்கள். குழந்தைகள் வீட்டில் பெறுகின்ற பயிற்சியே சிறந்த பயிற்சியாகும். பள்ளி நேரம் தவிர்த்த மற்ற காலங்களிலும் குழந்தையின் படிப்பார்வத்தை ஊக்குவித்து வழிகாட்டும் வாய்ப்பினைப் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் மிகச் சிலரே இருப்பர். அதனால், பொறுப்பு முழுவதும் பெற்றோரையே சார்கின்றது. படிப்பைப்பற்றிக் கவலைப்படாமல் காலந்தள்ளிக் கொண்டு போகும் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் நல்ல இலக்கியங்களைப் படித்து அடிக்கடி உரையாடி மகிழும் குடும்பத்துக் குழந்தைகளைப் போல் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்பது நிறுவப்பட்ட ஓர் உண்மை!

## உணர்ச்சி நிலை

குழந்தையின் உணர்ச்சிநிலையும், உளப்பாங்கும் படிப்பார்வத்தைப் பெரிதும் கட்டுப்படுத்துகின்ற உண்மையினையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஒரு குழந்தையின் கண்களில் கண்ணீரைத் துளிக்கச் செய்யும் ஒரு கதை, மற்றொரு குழந்தையைச் சிறிதுகூட அசைக்க முடியாதும் போய்விடுகின்றது! பெரியவர்களிடம் காண்பது போன்ற 'மென்மை' உள்ளத்தையும் 'வன்மை' உள்ளத்தையும் குழந்தைகளிடமும் காண்கின்றோம். ஒரு குழந்தைக்கு நல்ல முறையில் நீதியைப் புகட்டும் ஒருகதை மற்றொரு குழந்தைக்கு எரிச்சல் ஊட்டுவதாக அமைகின்றது! உணர்ச்சிநிலை பற்றிய ஆராய்ச்சிகளில் இன்னும் அறிவியல் முன்னேறவில்லை. இருந்தாலும், படிப்பார்வத்தைத் தூண்டுவதில் இவ்வுணர்ச்சி நிலை பெரிதும் பங்கு கொள்கின்றது என்பது மட்டும் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.

## மூவகைக் குழந்தைகள்

குழந்தைகள் உணர்ச்சி நிலையில் வேறுபடுவது போன்றே அறிவு நுட்ப நிலையிலும் பெரிதும் வேறுபடுகின்றனர். குழந்தைகளில் பெரும்பான்மையோர் வயதிற்கேற்ற அறிவுத் திறத்தைப் (mental ability) பெற்றிருக்கின்றனர், இக்குழந்தைகளை நாம் இயல்பான குழந்தைகள் (average children) என்று சொல்கிறோம். ஆனால், சில குழந்தைகளோ வயதிற்கு மேற்பட்ட அறிவுத்திறத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் மீத்திறக் குழந்தைகள் (gifted children) என்று அழைக்கப்படுகிறார்கள். அவ்வாறே சில குழந்தைகள் தம் வயதுநிலைக்குக் கீழ்ப்பட்ட அறிவுத்திறத்தையே பெற்றிருக்கின்றனர். இவர்களைப் பின்தங்கிய குழந்தைகள் (backward children) என்று சொல்கிறோம். மீத்திறக் குழந்தைகள் இயல்பான குழந்தைகளைவிட அதிக எண்ணிக்கையில் புத்தகங்களைப் படிக்கின்றனர். இவர்கள் புத்தகங்களில் பக்கங்கள் அதிகமாக இருந்தால்கூட அவற்றைக் கண்டு மலைப்பதில்லை. அவர்கள் படிக்க விரும்பும் துறைகளும் பலவாகப் பறந்து கிடக்கின்றன. அவர்கள் தேர்ந்தெடுக்கும் புத்தகத்தின் தன்மையும் உயர்வுடையதாக இருக்கின்றது. பின்தங்கிய குழந்தைகளோ இயல்பான திறமுடைய குழந்தைகள் படிப்பதைவிட எண்ணிக்கையில் குறைந்த அளவே புத்தகங்களைப் படிக்கின்றனர். அவர்கள் தேர்ந்தெடுக்கும் துறைகளும் மிகவும் சிலவாகவே இருக்கும். இயல்பான திறமுடைய குழந்தைகளை ஓரளவு ஊக்குவித்தால் பல துறைகளிலும் தம் நாட்டத்தைச்

செலுத்தத் தொடங்கிவிடுவார்கள். ஆனால், பின்தங்கிய குழந்தைகளின் நிலை முற்றிலும் வேறானது. ஆயுட்காலம் முழுவதிலும் அவர்கள் பல்வேறு துறைபற்றி அறிந்து கொள்ள முடிவதேயில்லை! சிலர் தம் வேலையில் திறமையுடையவர்களாகவும் மற்றவை பற்றி ஒன்றும் தெரியாதவர்களாகவும் இருப்பதைப் பார்க்கின்றோம்.

பின்தங்கிய குழந்தைகளும் அப்படிப்பட்டவர்களே! அவர்களுக்குச் சுவை தருவதாகத் தோன்றும் சில துறைகள் பற்றிய புத்தகங்களைக் கொண்டே அவர்களின் படிக்கும் பழக்கத்தை நீடித்துக் கொண்டு செல்லலாம்! மேலும், இடை இடையே பொருள் விளக்கம் எவரேனும் தந்தால்தான் பின்தங்கிய குழந்தைகளால் புத்தகத்திலுள்ள செய்திகளைச் சுவைக்கமுடியும். ஆனால், இத்தகைய விளக்கம், இயல்பான குழந்தைகளுக்கு எரிச்சலூட்டுவதாக அமையும்! பின்தங்கிய குழந்தைகள் தாமாக ஒரு துறையைத் தேர்ந்தெடுக்கவும் மாட்டார்கள். யாரேனும் ஒருவர் வழிகாட்டினால் தான் பின்சென்று ஒரு துறையிலே ஈடுபாடு கொள்வர்! எனவே, தவறான புத்தகங்களைப் படித்துக் கெட்டு விடுவார்கள் என்ற அச்சத்திற்குப் பின்தங்கிய குழந்தைகளைப் பொறுத்தவரையில் இடமேயில்லை!

## பால் வேறுபாடு

படிப்பார்வத்தில் ஆண்களிலிருந்து பெண்கள் ஒருவகையில் வேறுபடுகின்றனர்கள். ஆண்களின் ஆர்வம் பல துறையிலும் பரவிச்செல்வது போன்று பெண்களின் ஆர்வம் செல்வதில்லை. ஆண்கள் எல்லாவற்றையும் பொதுவாகப் படிக்கின்றனர். ஒருமுறை படித்த புத்தகத்தை இருமுறைக்குமேல் படிப்பது அருமை. ஆனால், பெண்கள் தேர்ந்தெடுத்த சிலவகைப் புத்தகங்களையே திரும்பத் திரும்பப் பன்முறையும் படிக்கின்றனர், ஒரு மாணவியின் கையில் ஒரு புத்தகம் இருக்கிறதென்றால், அதே புத்தகத்தை நாம் பல மாணவியர் கைகளிலும் காணலாம். ஆனால், ஆண்களைப் பொறுத்தவரையில் அத்தகைய ஒருமைப்பாட்டினை (homogeneity) நாம் காணமுடியாது. அவர்கள் விருப்பம் பல துறைகளிலும் சிதறிப் பரந்துவிடுகிறது!

"என் நண்பனுடன் கோபமாயிருந்தேன்; என் ஆத்திரத்தை அவனிடம் கூறினேன்; அது ஒழிந்து போயிற்று. என் எதிரியிடம் கோபமாயிருந்தேன், அதைப்பற்றிக் கூறவேயில்லை; ஆத்திரம் வளர்ந்து விட்டது."

—வில்லியம் ப்ளேக்

*    *    *

"ஒருவனுக்கு ஆயிரம் நண்பர்கள் இருந்தாலும் ஒருவரையும் இழக்க விரும்பமாட்டான்; ஒருவனுக்கு ஒரே ஒரு எதிரியிருந்தாலும் அவனை எல்லா இடங்களிலும் சந்திப்பான்."

—ஓமர் கயூம்

சா. கு.

# பெசண்ட் அம்மையார்

## I

1933 செப்டம்பர் 23. மாலை 4 மணியிருக்கும். அடையாறு (சென்னை) பிரம்ம ஞான சங்கக் கட்டடத்தில் ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும், கையில் பூ மாலையுடன், கண்களில் நீர் மாலை வழிய, கைகூப்பி கும்பிட்ட படியே சாரைசாரையாக, வரிசையில் நின்று ஊர்ந்து கொண்டேயிருக்கின்றனர். நானும் துணைவியாரும்வரிசையில் நகர்கின்ரேம்!

இனம்-சாதி-மதம்-கட்சி பணம்-வயது, வேற்றுமையில்லாமல், ஆண்களும் பெண்களும் இவ்வளவு பொறுமையாக ஊர்ந்து செல்வது ஏன்?

மாண்டு மறைந்த பெசண்ட் அம்மையாரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்த! கடைசியாகப் பார்க்க!

அப்படி என்ன, அற்பாயுளிலா மறைந்தார்? வயது 86. முழுதும் பழுத்து நைந்து போன கனி! மரத்திலிருந்து விழுந்தே தீர வேண்டிய பழம்!

ஏதாவது விபத்தினல் இறந்தாரா? இல்லை. இயற்கையான முதுமையினல் தான் இறந்தார்.

காந்தியாரைப் போல், பிறரின் வெறிச் செயலால் இறந்தாரா? அதுவுமில்லை.

இந்நாட்டில் பிறந்த-பெரும் பதவியில் இருந்த-மாதரசி என்பதற்காக இத்தனை ஆயிரம் பேர் இறுதி வணக்கம் செலுத்துகிருர்களா? அல்ல. இங்கிலாந்தில் பிறந்த ஐரிஷ்மாது. பட்டம் பதவிகளைத் துறந்த பெண் துறவி.

பின் ஏன் பாட்டாளிகளும் பணக்காரரும், நாத்திகரும் ஆத்திகரும், ஆண்களும் பெண்களுமாக இப்படி அலை அலையாக வந்து கொண்டேயிருக்கிருர்கள்?

இதோ, உலகில் அடிக்கடி தோன்ற முடியாத ஒரு பெண் பிறவி! பல கோடிப் பெண்களில் ஒருவர்! ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை! ஆதலால் தான்.

பேச்சிலும் எழுத்திலும் இணையற்ற அம்மையார்! பிறரால் தூக்கி விடப்படாமல், தாமாகவே, தம் முயற்சியினலேயே, உலகப் புகழ் ஏணியின் உச்சியை எட்டிய அம்மையார்! "இந்த நூற்ருண்டின் இணையற்ற பெண் பேச்சாளர்," என்று பர்ஞர்ட்ஷாவினலேயே புகழப்பட்ட ஒரு அம்மையார்.

### பல துறைப் பணி

பகுத்தறிவு வாதியாயிருந்தவர்; பெண் உரிமைக்காகப் போராடியவர்; சோஷயலிசத்தைப் பிரசாரம் செய்தவர்; விஞ்ஞான ஆசிரியர்; நூலாசிரியர்; பத்திரிகாசிரியர்; கல்வித்துறை நிபுணர்; இந்திய சுதந்தரக் கிளர்ச்சியின் தாயார்; பல மதங்களின் கதம்பமான பிரம்ம ஞான சங்கத்தின் தலைவி; அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டின் முதலாவது பெண் தலைவி.

இத்தனைக்கும் மேலாக, ஆயிரக் கணக்கான ஆண் வீரர்களை எதிர்த்து, மறுத்து, இடைவிடாது சொற் போர்-எழுத்துப் போர் நடத்திக் கொண்டிருந்த வீராங்கனை! தம்மீது தொடரப்பட்ட வழக்குகளிலெல்லாம் வழக்கறிஞர் உதவியை நாடாமல், தாமே நீதி மன்றங்களில் வாதாடிய சிறந்த தீரர்!

இப்படியும் ஒருவர் இருந்தார்; இறந்தார்; இனி இன்னொரு அம்மையார் எப்போது வருவார்? எந்த நாட்டில் வரப் போகிறார்?

அன்று அடையாறுக் கட்டடத்தில் கூடிய மனித வெள்ளத்தின் இரகசியம் இதுதான்.

அம்மையார் வாழ்க்கை பல திறப்பட்டது! ஒரு பெரிய சர்க்கஸ் காட்சியைப் போன்றது! எல்லாவிதக் காட்சிகளையும் காணலாம்! ஒவ்வொன்றுக்கும் மூக்கின் மேல் விரல் வைத்து வியப்படைய வேண்டும்.

தீவிரமான பகுத்தறிவு வாதியாகப் பொது வாழ்க்கையைத் துவங்கிய அம்மையார், இறுதியில் அதி தீவிர மதவாதியாக வாழ்க்கையை முடித்தமைக்கு இவரது மனப் போராட்டம் காரணமாயிருக்க வேண்டும்! அல்லது சூழ்நிலை காரணமாயிருக்கலாம். அல்லது பலருக்கு நிகழ்வது போல் புகழ் ஏணி ஆசை கூடக் காரணமாயிருக்கலாம்!

எதுவாயினுஞ் சரி! அம்மையாரின் நெஞ்சழுத்தமும், விடா முயற்சியும், பிரசார சக்தியும் இந்த உலகின் பல கோடி ஆண்களை வெட்கித் தலை குனியுமாறு செய்துவிட்டது, அன்று! வியப்பினால் பெரு மூச்சு விடும்படியாகச் செய்து விட்டது, இன்று!

அக்டோபர் 1ந் தேதியன்று— இந்திய அரசாங்கம் அன்னி பெசண்ட் அம்மையாரின் நினைவு ஸ்டாம்ப் (Stamp) வெளியிட்டுள்ளது மகிழ்ச்சி.

அன்னி (Annie) 1847 அக்டோபர் 1 இல் லண்டனில் டாக்டர் வில்லியம் பேஜ் உட் என்பாருக்கும் எமிலி ரோச் மாரிஸ் என்பாருக்கும் மகளாகப் பிறந்தாள். தந்தை அரை இங்கிலீஷ்-அரை அய்ரிஷ்; தாயார் முழு அய்ரிஷ்! ஆகவே அன்னி இங்கிலாந்தில் பிறந்த போதிலும் தன்னை அய்ரிஷ் பெண் (அயர்லாந்துக்காரி) என்றே கூறிக் கொள்வார்.

## குடும்ப வாழ்க்கை

இவரது வாழ்க்கை பல்வகையிலும் தனிச் சுவையுள்ளது. தன்னம்பிக்கையற்ற பெண் உலகத்துக்கு (ஆண் உலகத்துக்குங்கூட) ஒரு 'டானிக்' போன்றது.

அன்னிக்கு ஒரு அண்ணன், ஒரு தம்பி இருந்தனர்.

இளமையிலேயே இரு மரணக் காட்சிகள்; ஒன்று அருமைத் தந்தை; மற்றொன்று தம்பி!

குடும்பம் வறுமைக் குழியில் வீழ்ந்தது. வாழ்க்கை நடந்தாக வேண்டுமே! அன்னியின் தாயார் பிறர் குழந்தைகளுக்குத் தனிப் பாடம் சொல்லிக் கொடுத்து, ஊதியம் பெறலானார். அன்னியும் மற்றக் குழந்தைகளுடன் படித்தாள். ஆண்களைப் போலவே எட்டாவது வயதில் மரம் ஏறவும், கிரிக்கெட் விளையாடவும் பழகினாள். வில் பயிற்சியிலும் குதிரை ஏற்றத்திலும் தனித் திறமை பெற்றாள்.

படிப்பிலும் தேர்ச்சி பெற்று மதம், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் தனிக் கவர்ச்சி கொண்டாள்.

## குத்தூசி

கிருஸ்து மதப் பற்றுள்ள அன்னி, தன் இருபதாவது வயதில் ஃப்ராங் பெசன்ட் (Frank Besant) என்ற மத குருவை மணந்தார். இரண்டாண்டுகள் கழித்து இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கடுத்த ஆண்டில் ஒரு பெண் பிறந்தது. அன்னியும் பெசண்ட்டும் நீண்ட காலம் இல்லறம் நடத்த முடியவில்லை. மதத்துறையில் வர வர இருவருக்கும் பலமான கருத்து வேறுபாடு ஏற்பட்டு, வளர்ந்துகொண்டேயிருந்தது. திருமணம் நடந்த ஆருவது ஆண்டிலேயே நீதி மன்றம் மூலம் மண விலக்குப் பெற்ருள். ஏன்?

### பிரிந்த காரணம்

இல்லற வாழ்க்கைக்கே தகுதியற்றவள் அன்னி. குடும்பக் கவலையோ ஆசையோ இல்லாத ஒரு பெண், ஆண்–பெண் சேர்க்கை பற்றியே அச்சங் கொண்டிருந்த ஒரு பெண், குடும்பப் பெண்கள் கூடும் போதெல்லாம் சமையலைப் பற்றியும் பணியாட்களைப் பற்றியுமே பேசிக் கொண்டிருந்ததைக் கேட்கச் சகிக்காத ஒரு பெண், இல்லற வாழ்க்கையையே வெறுத்ததில் வியப்பில்லை. எந்நேரமும் படிப்பு! மீதி நேரத்தில் எழுத்து! படித்துக் கொண்டேயிருந்தாள்; எழுதிக் குவித்துக் கொண்டேயிருந்தாள். பெசண்ட் தம் மனைவி அன்னி மீது முதலில் அன்பாகத்தான் இருந்தார். ஆனல் அன்னியோ இல்லறப் பொறுப்பு வாழ்க்கைக்கே தகுதியற்றவள். தாயார் மனம் கோணக் கூடாது என்பதற்காக மணவாழ்க்கையை ஏற்றுக் கொண்டவள். எனவே இரு குழந்தைகட்குத் தாயான பிறகுங் கூட இல்லறத்தை வெறுக்க வேண்டியவளானள். கதைகள் எழுதினள்! பத்திரிகைக்கு கட்டுரை எழுதினள்! கதைகள் நூலாகவில்லை; எனவே பணமுமில்லை. கணவனுக்கும் வரும்படியில்லை.

கணவன்-மனைவிக்குள் அடிதடி ஏற்பட்ட பிறகு அன்னியின் நாத்திகப் போக்கு கணவனுக்குப் பிடிக்காதபிறகு, வீட்டைவிட்டே (கணவனல்) விரட்டியடிக்கப்பட்ட பிறகு, மண விலக்குத் தவிர வேறு வழி என்ன?

இல்லற வாழ்க்கையில் எந்த அளவுக்குத் துன்பப்பட்டாளென்ருல், ஒரு முறை நஞ்சை உண்டு விட்டுத் தற்கொலை செய்து கொள்வதற்கே தயாராகி, பிறகு துணிவில்லாமல் அதைக்கொட்டி விட்டாளாம்.

ஆகவே கணவனை விட்ட பிறகு தன் மகளை மட்டும் தன்னுடன் வைத்துக் கொண்டாள்.

### நாத்திகத் தொடர்பு

அரை குறைப் பகுத்தறிவு வாதியான அன்னி பெசண்ட்க்கு இச் சமயம் மனச் சோர்வு குறையும் படியான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அதுதான் பச்சை நாத்திகரான சார்லஸ் ப்ராட்லாவின் தொடர்பு.

பல ஆண்டுகள் இருவரும் சேர்ந்து தீவிரமான பகுத்தறிவுப் பிரசாரம் செய்து கொண்டிருந்தனர். அழுத்தமாகவும் அழகாகவும் பொது மேடையில் சொல் அம்பு தொடுக்கக் கூடிய ஒரு பெண்! அதுவும் மதச் சடங்குகளையும் மூட நம்பிக்கைகளையும் தாக்கித் தவிடு பொடியாக்கி! வைதீக(பழமை)க் கூட்டம் சும்மாயிருக்குமா? கணவனை விலக்கிய பெண் மீது கண்-மூக்கு வைத்துக் கதை கட்டிவிட்டனர். எஃகு உள்ளம் கொண்ட

பெசண்ட் அம்மையா இதற்கு அஞ்சுவாள்?

பிராட்லாவின் முதல் சந்திப்பு எப்படித் தெரியுமா? பகுத்தறிவு மண்டபத்தில் பிராட்லா பேச இருந்த ஒரு கூட்டத்துக்கு பெசண்ட் சென்ருள், பகுத்தறிவு உறுப்பினர் அட்டையை அவ் இயக்கத் தலைவரிடமிருந்து நேரில் பெறுவதற்காக. அன்றைய சொற்பொழிவு, "கிருஷ்ணன்–கிருஸ்து கட்டுக் கதைகள்" என்பது பற்றி. ப்ராட்லாவின் ஆதாரம் நிறைந்த வீரச் சொற்பொழிவைக் கேட்டு மண்டபமே அதிர்ந்தது. இறுதியில் மற்றவரைப் போலவே பெசண்ட் இடமும் உறுப்பினர் அட்டை தரப்பட்டது. "நீதாஞ திருமதி பெசண்ட்?" என்று கேட்டார், சார்லஸ் பிராட்லா.

இரண்டு நாள் கழித்து ப்ராட்லாவின் வீட்டிற்குச் சென்ருள், பெசண்ட்.

நாத்திகஞகவே இரு முறை பார்லிமெண்ட் தேர்தலுக்கு நின்று தோல்வியுற்ற ப்ராட்லா! அய்ரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்று நாத்திகப் பிரசாரம் செய்து இங்கிலீஷ் உலகத்தையே கலக்கிய ப்ராட்லா! 46 வயதிலேயே பகுத்தறிவுப் பெரும் புகழ் பெற்ற ப்ராட்லா! கடஞளியான ப்ராட்லா! எதிர்ப்பிலே மூழ்கிய ப்ராட்லா! சின்னஞ் சிறு அறையில் புத்தகங்கள் குவிந்து கிடந்த அறையில் அமர்ந்திருக்கிருர்! எதிரில் திருமதி பெசண்ட்!

"கடவுளைப் பற்றி நீங்கள் எழுதியுள்ள இக் கட்டுரையைப் பார்த்தேன். இதில் ஒரே ஒரு தவறு. நாத்திகன் கடவுள் இல்லை என்று சொல்பவனல்ல. கடவுள் இருப்பதாகக் கூறப்படுவதை ஒப்புக் கொள்வதற்குப் போதுமான ஆதாரத்தைக்காண முடியாதவனே நாத்திகன்," என்ருர், ப்ராட்லா! ஏற்றுக் கொண்டார், பெசண்ட்.

அதற்குப் பிறகு இவ் இருவரின் நட்பும் அன்பும், ஒரே கொள்கை காரணமாக-மூற்றிக் கொண்டே வந்தது.

இதற்கு முன்பே ப்ராட்லா தம் மனைவியை மண விலக்குச் செய்து விட்டுத் தம் இரு பெண்களுடன் வறுமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் தான் ப்ராட்லா-பெசண்ட் சந்திப்பு! எனவே இரு வறுமைக் குடும்பங்கள் கொள்கை அடிப்படையில் நட்புறவு கொண்டன.

பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் ப்ராட்லா நடத்தி வந்த "நேஷனல் ரிஃபார்மர்" பத்திரிகையில் அற்ப ஊதியத்தில், துணை ஆசிரியராஞர், பெசண்ட். அரசியல்–பொருளாதார நூல்களுக்கு மதிப்புரை எழுதிஞர், மதகுருமார்களைக் கண்டித்துக் கட்டுரை எழுதிஞர்.

பகுத்தறிவுப் பிரசாரத் தொண்டுக்கு ஒரு சிறந்த பெண் பேச்சாளரும் தலை சிறந்த எழுத்தாளரும் கிடைத்தாள் என்று ப்ராட்லா மகிழ்ச்சியடைந்தார்.

(தொடரும்)

**இந்தியா : மக்கட் பெருக்கம்**

| ஆண்டு | மக்கட் தொகை | கூடுதல் அல்லது குறைதல் |
|---|---|---|
| 1901 | 235,478,813 | |
| 1911 | 248,995,434 | + 5.8% |
| 1921 | 248,120,746 | — 0.3% |
| 1931 | 275,468,432 | + 11.0% |
| 1941 | 314,804,664 | + 14.3% |
| 1951 | 356,879,394 | + 13.4% |
| 1961 | 439,235,082 | + 21.5% |

"கோவை மாறன்"

# "நியூ ஸ்டேட்ஸ்மன்"

*[நல்ல பத்திரிகைகளின் கடமை என்ன? 'நியூ ஸ்டேட்ஸ்மென்' ஓர் எடுத்துக் காட்டு. இது போன்ற வாரத்தாள் பாரத புண்ணிய பூமியில் எந்த மொழியிலும் ஒன்று கூட இல்லை. மஞ்சள் ஏடுகள் இங்கு ஏராளம்! மடமை பரப்பும் ஏடுகள் மலைபோல! அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும், உண்மைக்கும் உரிமைக்கும் பாடுபடுகின்ற உயர்தர ஏடு ஏன் இல்லை? நல்ல ஏட்டின் இலக்கணத்தைச் சுட்டிக் காட்டுகிறது இக் கட்டுரை.]*

ஐம்பது ஆண்டுகளாக உலக அரங்கில் மக்களுடைய நலனுக்காக உழைக்கும் சிறந்த வார இதழ் 'நியூ ஸ்டேட்ஸ்மன்.' ஆங்கில மொழியில் சிறந்த எழுத்தாளருடைய கட்டுரைகளும், கவிதைகளும், உலக சிந்தனையாளருடைய கருத்துக்களும் இவ் இதழை அணி செய்கின்றன.

உலக சரித்திர ஆசிரியரான ஏச். ஜி. வெல்ஸ்—ஸ்டாலினைக் கண்ட பேட்டியும், இவ் இதழ் ஆசிரியர் கிங்ஸ்லீ மார்டின்—சர்ச்சிலைக் கண்ட பேட்டியும், கணித - விஞ்ஞான மேதை பெர்ட்ரான்ட் ரஸ்ஸல் குருஷேவ், ஐஸன்ஹோவர் இவர்களிடையே கடிதங்களும் 'நியூ ஸ்டேட்ஸ்மனில்' வெளியாகி உள்ளன.

பர்னார்ட்ஷா, ஸிட்னி வெப், மாக்ஸிம் கார்கி, ப்ரீஸ்ட்லீ போன்ற எழுத்தாளர் கட்டுரைகள், டி. எச். லாரன்ஸ், மைகேல் ஜோஷென் கோ, எச். ஈ. பேட்ஸ், இ. எம். பார்ஸ்டர் — சிறு கதைகள், ஆடன், ஸ்பென்டர், ஸாஜி டேரியஸ் இவர்களின் பாக்கள் இதில் மிளிர்கின்றன. இன்றைய தொழிற்கட்சித் தலைவர் திரு. வில்சன் தம் கட்சியின் நான் காண்டுத் திட்டத்தை இவ் வார இதழில் வெளியிட்டார்; இவ் ஐம்பது ஆண்டுகளில் இப்பத்திரிகைக்கு மூன்று ஆசிரியர்களே இருந்தனர். இவ் இதழின் ஆசிரியர் 50 ஆண்டுகளுக்குப் பிறகு தம் குறிக்கோள்களைப்பற்றிக் கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது. இவ் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்ததன் பயன் என்ன? அடுத்த ஐம்பது ஆண்டுகளில் சாதிக்க வேண்டுவது என்ன? என்பனவற்றை உள்ளூர ஆராய்கிறார். பத்திரிகையாளருக்கு இவ் ஆய்வு ஒரு எடுத்துக் காட்டு.

தனி மனிதன் தன் உரிமைகளையும் கடமைகளையும் உணருந்தோறும் அவனுடைய இயல்புகள் மேம்படுகின்றன; மறைந்து

கிடக்கும் பண்புகள் சுடர்விட்டு ஒளிர்கின்றன. ஆதலின், மனிதனுடைய உரிமைகளுக்காகப் போராடுவதும், மனிதனுடைய கடமைகளை உணர்த்துவதுமே மனித குலத்துக்குத் தொண்டு புரிவது ஆகும். அதுவே பத்திரிகைகளின் பணி.

**நாடுகளின் நாணயங்கள்**

| | |
|---|---|
| இந்தியா | ரூபாய் |
| இத்தாலி | லிரா (Lira) |
| அமெரிக்கா | டாலர் |
| இங்கிலாந்து | பவுன் |
| கிரீஸ் | டிராக்மா |
| ஜப்பான் | யென் (Yen) |
| சீனு | டாலர் |
| சுவிட்சர்லாந்து | ஃப்ராங்க் |
| ஃப்ரான்ஸ் | ஃப்ராங்க் |
| ஜெர்மனி | மார்க் |
| பர்மா | கியாத் (Kyat) |
| பாகிஸ்தான் | ரூபாய் |
| மலேயா | டாலர் |
| ருஷ்யா | ரூபிள் |
| வியட்நாம் | டோங் (Dong) |
| ஸ்பெயின் | பெசட்டா (Peseta) |
| கானடா | டாலர் |
| இலங்கை | ரூபாய் |
| செக்கோசுலோவேகியா | கொருனு (Koruna) |
| டென்மார்க் | குரோன் (Krone) |
| தாய்லாந்து | பாட் (Baht) |
| துருக்கி | பவுன் |
| இந்தோனேசியா | ரூபையா (Rupiah) |
| ஈஜிப்ட் | (பவுன்) |
| ஆஃப்கனிஸ்தான் | ஆஃப்கனி |
| ஆஸ்ட்ரேலியா | பவுன் |
| போர்ச்சுகல் | எஸ்குடா (Escuda) |

## சமூக நலன்

சமூக உணர்ச்சி வளருந்தோறும் தனி மனிதனுடைய உரிமைகள் வரையறுக்கப்படுகின்றன. கடமைகள் பெருகுகின்றன. தனி மனிதனுடைய உரிமை-கடமை உணர்ச்சியுடன் சமூக உணர்ச்சியை வளர்ப்பதும் பத்திரிகைகளின் பணியே. ஆனல் சமூகம் என்ற பெயரால் ஒரு சிலர் உயர்வதும், அச் சிலருடைய உயர்வுக்காகப் பலர் தாழ்வதும், தவிர்க்கப்பட வேண்டியன. சமூக வளர்ச்சி அனைவருடைய வளர்ச்சியாகத் திகழ வேண்டும். காரண நீதிக்கு உட்பட்டாதல் வேண்டும். சமூகம் என்ற அரக்கன், சிலர் பலரை ஒடுக்குவதற்குத் துணை ஆகக் கூடாது. பலருடைய ஆக்கத்துக்கு வழி தேட வேண்டும். அத்தகைய சமூக நலனும் தனி உரிமைகளும் தம்முள் இகல (போட்டியிட) பத்திரிகைகள் தனி உரிமைகளைப் பாதுகாப்பதா? சமூக நலனைப் பாதுகாப்பதா? என்ற கேள்வி எழக்கூடும். "சமூக நலன்" என உங்களில் பலர் விடை அளிக்கலாம்; ஆனல், எது சமூக நலன் என அறுதியிடுவது எளிதல்ல.

சமூகம் பல பிரிவுகளை உடையது. ஸ்டாலின்—எச். ஜி. வெல்ஸ்க்கு அளித்த பேட்டியில் முதலாளி வளர்க்கம் ஒழிந்தாலன்றி சமூக நலன் உண்டாகாது எனக் கூறினர். சமூகத்தில் ஒரு பிரிவு மற்றொரு பிரிவுக்கு எதிரி என்பது உண்மை ஆகில், பிரிவுகள் உள்ள சமூகம் முழுவதும் நலன் பெறுவது என்பது இயலாத காரியம். பிரிவுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பது குறிக்கோள் ஆகலாம். சமூகத்தின் செயலாட்சிக் குழு அரசாங்கம். அவ் அரசாங்கம் அவ் ஒற்று

-மைக்காக உழைக்க வேண்டும். அவ்வாறு உழைக்காவிடில், அவ் ஆட்சிக் குழுவைக் கண்டிப்பதும் மாற்றுவதும் பத்திரிகைகளுடைய கடமை.

பத்திரிகைகள் உரிமைகளைப் பாதுகாக்கப் போரிட முனையும் போது, "யாருடைய உரிமைகளை?" என்ற கேள்வி எழும். தனி மனிதனுடைய வரம்பு கடந்த உரிமைகளையா? சமூகத்தில் ஒரு பிரிவின் உரிமைகளையா? "சிறுபான்மையோருடைய உரிமைகள் புறக்கணிக்கத்தக்கன" என்ற மனப்பான்மை உண்டாகுமேல் அது பேயரசுக்கு அடிகோலுவதாகும். 30 ஆண்டுகளுக்குமுன் ஜர்மனியில் யூதர்களும், இன்று அமெரிக்காவில் நீக்ரோக்களும், இந்தியாவில் முஸ்லீம்களும் சிறுபான்மையோரே. அதற்காக, அவர்களுடைய உரிமைகளைப் புறக்கணிப்பது சரியா?

அவ்வாறே, பல சமயங்களில் காந்தியடிகளும், இன்று விநோபா பாவேயும் மிக மிகச் சிறுபான்மையோராகக் கருதப்பட்டனர். கருதப்படுகின்றனர். அறிவாளிகள் எப்போதும் சிறுபான்மையோரே.

பத்திரிகை உலகம்

'பூமி சூரியனைச் சுற்றி வருகிறது' என்ற கொள்கையைப் பரப்பிய கலிலேயோ ஒருவன், சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்ற பொது மக்கள் கொள்கைக்கு எதிரி. அதற்காக கலிலேயோவுக்குத் தவறிழைத்ததைப் பத்திரிகைகள் ஒப்புக்கொள்ளுவதா? பொது மக்களுடைய கருத்துக்கு மாறாக தனி மனிதன் கருதுவதும் தன் கருத்துக்களைப் பரப்புவதும் ஒருவனுடைய அடிப்படை உரிமை. அதைப் பத்திரிகை உலகம் பேணற வேண்டும்.

"நீ நினைப்பது முற்றிலும் தவறு; உன் செயல்களில் இம்மி அளவும் நான் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும், நீ உன் கருத்தை வெளியிட உரிமை அற்றவன், என்று எவரேனும் கூறினால், அவரை எதிர்க்க என் கடைசித் துளி இரத்தத்தையும் சிந்த முற்படுவேன்" என்று அமெரிக்க மக்கள் தலைவர் ஜெஃபர்ஸன் முழங்கியது குடியாட்சியின் அடிப்படைக் கொள்கை.

மார்க்ஸ் கூறினார்: "அரசாங்கம் சில காலத்துக்கு மட்டும் வேண்டிய கருவி. சோஷலிஸம் முதிர்ந்து கம்யூனிஸம் வரும் போது சமூகத்தின் ஆட்சிக் குழுவாகிய அரசாங்கம் உதிர்ந்து போகும். மக்கள் தம் சுயநலனும் பொது நலனும் மாறுபட்டன அன்று, ஒன்றே என்பதை பேதமற உணர்வார்கள்."

இந்த நிலைமை பண்பாடு உயர்வால் உண்டாகக் கூடியது. கொடுமையால் உண்டாகாது; அதிகாரத்தால் உண்டாகாது: பத்திரிகைகள் அதற்குரிய சூழ்நிலையை உண்டாக்கி மனித குலத்தை உயர்விக்க வேண்டும்.

இதுவே 'நியூஸ்டேட்ஸ்மன்.' சென்ற ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தது, இத்தனி, பொது உரிமைகளைப்பாதுகாப்பதற்காக. அப்பணி முற்றுப் பெறவில்லை. மக்கள் தம் உரிமைகளையும் கடமைகளையும் தாமே உணர்ந்து அதற்கேற்றவாறு இயங்கவல்ல சமூக அமைப்பை உண்டாக்குவது அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குத் தான் செய்யப் போகும் பணி என்று எடுத்து அறைகுவது அதன் குரல். ★

டி. கே. சி.

# தெரிந்ததும் தெரியாததும்

[பகீரதன்]

*[எழுத்தாளர் பகீரதன் பல ஆண்டுகள் 'கல்கி'யில் துணை ஆசிரியராயிருந்து பணியாற்றியபோது திரு. ரா. கி. (கல்கி) அவர்களுடனும் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுடனும் மிக நெருங்கிப் பழகியவர். டி. கே. சி. பற்றி ஆங்காங்கு இரண்டொருவருக்குமட்டுமே தெரிந்துள்ள பல சங்கதிகளை இங்கு காணலாம். சுவை மிக்க சில நிகழ்ச்சிகளை, வியக்கத் தக்க சில குறிப்புகளை, இங்கு தருகிறார். டி. கே. சி. பற்றிய தவறான சில கருத்துக்களையும் எடுத்துக் காட்டுகிறார்.]*

தமிழ் மக்களும் தமிழும் வாழ வேண்டும் என்பதில் ரசிகமணி டி. கே. சி.க்கு இருந்த ஆர்வமும், அதற்காக அவர் பாடுபட்டுக்கொண்டிருந்த திடசித்தமும் என்னை அவரிடம் இழுத்தது.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் கலந்து போன மூடக் கொள்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் அவருக்கு இருந்துவந்த அழுத்தமான வெறுப்பு எனக்கு அவர் மீது ஒரு அன்பையும் மதிப்பையும் உண்டாக்கியது.

அவர் செய்து கொண்டிருந்த ஒவ்வொரு செயலிலும் துள்ளிய வாலிபத் துடிப்பும் தெளிவும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவருடைய நடமாட்டத்தில் ஒரு மென்மையும் துருதுருப்பும் நிறைந்திருக்கும். அவருடைய பேச்சும் அங்க அசைவுகளும் ஒரே சுருதியில் இயங்கி வந்தன.

குறைந்த வார்த்தைகளில் ஆழ்ந்த கருத்துடன் பேசுவார். வாழ்க்கையில் காணும் பொய்களையும் துயரங்களையும் எதிர்த்து அலுப்பு சலிப்பில்லாமல், ஒரு கவிஞனின் கலை உணர்வுடன் போராடிய கூரிய விழிகள் அவருடைய முகத்தில் சுடர்விட்டு மின்னிக்கொண்டிருந்தன.

அந்தக் கண்கள் ஒருசமயம் குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்; ஒரு சமயம் ஒளிவிட்டு மிளிரும். ஒருசமயம் உருட்டி விழிக்கும். ஒரு சமயம் கனல் கக்கும். பெரும்பாலான சமயங்களில் ஆழ்ந்த சிந்தனையுடன் புன்னகை புரியும். அவருடைய கண்களில் மின்னிய ஒளி, அவர் சொற்களின் கருத்துக்கு அதிக சக்தியை அளித்து வந்

தது. சில சமயங்களில் அவருடைய கட்டுக்கடங்காத தன் நம்பிக்கை கண்களின் வழியாகவும், வார்த்தைகளின் வழியாகவும் திரும்பத் திரும்பத் தீப்பொறிகளாக வந்து கொட்டும். மறுக்க முடியாத உண்மைகள் சக்தி வாய்ந்த மனித உருவில் வந்து அழுத்துவது போல, அவருடைய கருத்துக்கள் அமைந்திருக்கும்.

குற்றலம் ஐந்தருவிச் சாலையிலிருக்கும் எட்டு அறைகளில் ஒரு சிறு அறையில் டி. கே. சி. அமைந்திருக்கும் காட்சி தனித் தன்மையுடன் யாரும் பார்த்து வியக்கும்படியாக இருக்கும். அவரை நினைக்கும்பொழுது தமிழ் மக்கள் எல்லோரும் தலை நிமிர்ந்து, ஆரியப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாமல் வாழ வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் தமிழ் முனிவரின் தோற்றம்தான் வருகிறது. கூட்டம் மிகுந்த இடத்தில் கவனத்துடன் கார் ஓட்டும் டிரைவரின் உணர்வுடன் கடமை துள்ளும் பார்வையும் மகிழ்ச்சி கொப்பளிக்கும் நிலையில் இருக்கும் அவர் கம்பீர உருவம் தான் காட்சி அளிக்கிறது.

உண்மையை மறைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வாழ்ந்து வந்த பார்ப்பனர் கூட்டத்தின் மத்தியில், பார்ப்பனர்கள் போல வாழ்வதுதான் வாழ்க்கை என்று எண்ணி வந்த தமிழ் மக்களின் ஒரு பிரிவினரிடையில். அது அல்ல தமிழ்ப் பண்பாடு என்று தெள்ளத் தெளிவான, அழுத்தம் திருத்தமான, சொற்களில் பேசும் அவருடைய உருவம்தான் நினைவுக்கு வருகிறது.

அவருடைய சொற்களில் ஆச்சரியப்படத் தக்க எளிமையும் எளிதில் எதிரிகளைத் தாக்கும் ஆழ்ந்த கருத்துள்ள வார்த்தைகளும் உண்மையை எடுத்து வழக்காடும் ஆற்றல் நிறைந்த சிற்பம் போல மிளிரும்.

நகைச்சுவை

டி. கே. சிக்கு, நகைச்சுவை என்றால் உயிர். அவர் சிரிக்கும் போது சிறு குழந்தைபோல உடல் குலுங்கக் குலுங்க சிரிப்பார். சிரிப்பு வெள்ளத்தில் பரிபூரணமாக மூழ்கித் திளைப்பார். சிரிக்கும்போது அவருடைய குரலில் ஏற்படும் ஒலி பல உணர்ச்சிகளைக் கொட்டும். 'வாழ்க்கையின் முட்டாள்தனங்களை அலசிப் பார்க்கும் தீரனின் கூரிய பார்வையில் துள்ளும் நுட்பமான நகைச்சுவை உணர்வே அவருடைய சிரிப்பொலியில் நிறைந்திருக்கும்.

தளர்ந்து போன உடல். பகுத்தறிவு நிறைந்த ஒரு ஞானியைப் போன்ற வெண்முடி நிறைந்த தலை. தமிழ் வீரம் நிறைந்த மீசை. ஒளிபடைத்த கண்கள். தீமை நிறைந்த இந்த நாட்டில் அவர் வயது முதிர்ந்த குழந்தை போலவே வாழ்ந்தார். தமிழ் மக்களின் வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காக விரோதத்துக்கும் குரோதத்துக்கும் மத்தியில் போராடிக்கொண்டே வாழ்ந்த மிகச் சிறந்த மனிதர் டி. கே. சி.

அவர் குற்றலத்தில் இருந்தாலும் சரி, வெளியூர்களில் இருந்தாலும் சரி, அவர் தங்கியிருக்கும் இடம் ஒரே மாதிரியான சூழ்நிலையுடன் புனிதமாகக் காட்சிதரும். அவரைச் சுற்றிலும் எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். அதுபோலவே அவர் இருக்கும் இடத்தில் ஒரு சிறு நூல் நிலையமும் இருக்கும் அந்த நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களில் டி. கே. சிக்குப் பிடிக்காத பகுதிகள் எல்லாம் கிழித்து எடுக்கப்

யட்டிருக்கும்; பிடிக்காத வரிகள் மீதெல்லாம் வெள்ளைத் தாள் ஒட்டப்பட்டிருக்கும். பக்கங்களில் ஆங்காங்கு குறிப்புகள் எழுதி யிருப்பார். அவரைப் பார்க்க வரும் தமிழ் மக்களுக்கு செவிக் கும் வயிற்றுக்கும் விருந்து இடை விடாமல் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

அவருடைய 'சந்நிதானத்தில்' ஏற்றத் தாழ்வே கிடையாது! படித்தவன்–பாமரன்!, பட்டதாரி, பாட்டாளி, பதவியிலிருப்போர்-பாவலர், பணக்காரர்-ஏழை எல் லாரும் ஒன்றுதான். பவநகர் ராஜா, பாமரத்தமிழன், ராஜாஜீ, ஊர் பேர் தெரியாத ஒரு தமிழர், கல்கி, கல்கியைப் பிடிக்காத புலவர், எம். எஸ். சுப்புலட்சுமி, ஒரு சாதாரண தமிழ்ப் பெண் மணி, என் போன்ற இளைஞர் கூட்டம், பணம் படைத்த பெரிய பெரிய வணிகர்கள் எல்லோரும் சரிநிகர் சமானமாக வீற்றிருப் பார்கள். எல்லாருக்கும் ஒரே விதமான சாப்பாடுதான். ஒரே விதமான உபசரிப்புதான். இந்த அற்புதக் காட்சியை தமிழ் நாட் டில் வாழ்ந்து வந்த, வாழ்ந்து வரும், எந்தப் பெரிய தலைவர்கள் வீட்டிலும் நான் கண்டதில்லை.

## மடமையின் எதிரி

டி. கே. சி.யைப்பற்றி ஒரு தப் பான கருத்து பல தமிழ் அன்பர்களிடம் உண்டு என் பதை நான் அறிவேன்; அவர் ஒரு பார்ப்பன பக்தர் என்பது தான்! ஆனால், உண்மையில் அவர் ஒரு பகுத்தறிவு வாதி. பார்ப்பனரின் பழக்க வழக்கங் களுக்கு எதிரி. சொல்லப் போனால் வைதீகப் பார்ப்பனர் களையே அவருக்குப் பிடிக்காது.

அவர் சைவ சமயப் பற்றுள்ள வர். ஆனால் அதில் படிந்து கிடக் கும் மூடக் கொள்கைகளை எதிர்த்து வந்தவர். அவருக்கு நாள் பார்த்தல், ராகுகாலம், சோதி டம், தெவசம் கொடுத்தல் முத லிய ஒன்றிலும் நம்பிக்கை கிடை யாது. இவற்றை நம்பக்கூடாது. என்று தமிழ் வாலிபர்களுக்கு இடைவிடாமல் போதித்து வந் தவர். பேச்சில் சீர்திருத்தமும் வாழ்க்கையில் வைதீகத்தையும் கடைப்பிடித்துவரும் பகுத்தறி வுக் கொள்கை வியாபாரி அல்ல, அவர்.

காலையில் எழுந்தவுடன் குளி த்து முழுகிவிட்டு வெள்ளை ஆடை உடுத்தி விபூதியும் சந்த னப் பொட்டும் இட்டு அவர் அமர்ந்திருக்கும் காட்சியைப் பார்த்தால் மத பக்தியும் பழமைப் பற்றும் உள்ளவரோ என்று தோன்றும். இது அவரிடம் நெருங்கிப் பழகாதவர்கள் கொண்டுள்ள மிகத் தவறான கருத்து. அவர் சாதிப்பற்றுள் ளவராக இருந்தால் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகராக இருந்திருக்க முடியுமா? சென்னை மாகாணத் தில் ஏற்பட்ட முதல் சட்ட சபை யில் ஜஸ்டிஸ்கட்சியின் பிரதிநிதி யாக அமர்ந்து தமிழ் மக்கள் வாழ்க்கை வளம் பெறுவதற் காகப் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியிருக்க முடி யுமா? பார்ப்பனர்களை அரசியல் வாழ்வில் மட்டும் அவர் எதிர்க்க வில்லை. அன்றாட வாழ்க்கை யிலும் எதிர்த்து வந்தார். தம் வாழ்நாளில் கடைசி வரையில் இதே லட்சியத்துடன் வாழ்ந்து வந்தார்.

## ஒரு நிகழ்ச்சி

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு இரவு. கல்கிப் பணிமனைப் பூங்காவில் அவர் அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் பல பார்ப்பனர்கள், செல்வந்தர்கள், தமிழாசிரியர்

கள் உட்கார்ந்திருக்கின்றனர். கல்கி, ராஜாஜி, சதாசிவம் (எம். எஸ்.ஸின் கணவர்) ஆகியோரும் இந்தக் கூட்டத்திலிருக்கின் றனர். கம்பன் கவிதையிலிருந்து அணுகுண்டு வரையில் பல்வேறு சங்கதிகளைப்பற்றி டி. கே. சி. பேசிக் கொண்டிருக்கிறார்.

எப்படியோ கோயில் வழி பாட்டைப்பற்றி பேச்சு வந்தது. கோயில் வழிபாட்டில் தமிழ் மக் கள் பார்ப்பனர்களிடம் எப்படி ஏமாந்துபோனார்கள், பார்ப்பனர் எவ்வளவு அழகாக நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்கள். என்பதை தமக்கே உரிய நகைச் சுவையுடன் சொல்கிறார் :

''கோயில் ஒரு தத்துவம். கோயிலில் இருக்கும் தெய்வ தத்துவத்தைப் புரிந்து கொள் வது ஒரு தனியான அறிவு. கோயில் சிலைவரம் கொடுக்கும் நீதிபதியோ, வைத்தியம் பார்க் கும் டாக்டரோ, சதாவதானம் புரியும் புலவரோ அல்ல; இந்த உண்மையை நன்கு உணர்ந் தவர்கள் ஆதித் தமிழர்கள்.

''அந்த நாளில் கோயில் சிலைக்குப் பூசைசெய்து வந்த வர்கள் சைவ வேளாளர்க ளான பட்டர்கள். பார்ப்பனர் கள் மடப்பள்ளியில் சமையல் உத்தியோகம் செய்து வந்தவர் கள்.

''ஒரு கோயிலில் அதன் சிலைக்குப் பூசை செய்து வந்த பட்டருக்குத் திடீரென்று உடல் நிலை கெட்டு விட்டது. அவர் மடப்பள்ளியி லிருந்த பார்ப்பன சமையற்காரரைப் பார்த்து, ''ஐயா சமையற்கா ரரே! எனக்குத் திடீர் என்று உடல்நிலை சரியில்லை. நாளைக் குக் கோயிலுக்கு வர முடியாது என்று நினைக்கிறேன். சமை யல் வேலையுடன் கோயில் சிலைக்குப் பூசையையும் கொஞ் சம் கவனித்துக் கொள்ளும்'' என்று கேட்டுக் கொண்டார். 'ஆகட்டும்! என்று பலமாகத் தலையை ஆட்டி வைத்தார் சமையற்காரர்.

''அன்று கோயில் சிலைக்கு அருகில் சென்ற பார்ப்பனர் இன்னும் வெளி வரவில்லை. அத்துடன் தமிழ் மக்களையும் உள்ளே விடவில்லை. அவர் களைப் பல வழிகளில் அடிமை யர்க்கியும் விட்டார்கள்''

என்று டி. கே. சி. சொன்ன போது அங்கு கூடியிருந்த பார்ப் பனர்களும் சேர்ந்து சிரித்த காட் சியை இப்பொழுது நினைத்தா

## செயற்கை மழை

மழையை நிறுத்தவும் முடி யும்; உண்டாக்கவும் முடியும்– என்பது உலக விஞ்ஞானிகள் கருத்து. பல படிகங்கள் நிறை ந்த அடர்த்தியான புகையை மேகத்தின் ஊடே செலுத்து கிறார்கள். சில சமயங்களில் மேகத்துக்கு மேலே பறந்து சென்று உலர்ந்த ஐஸ் தூளை மேகத்தின்மேல் தூவுகிறார்கள். ராக்கட் மூலம் சில ரசாயனப் பொருள்களை மேகத்திடையே பரப்புவதுமுண்டு.

இவ்வாறு தூவப்படும் பொருள்கள் மேகங்களிலுள்ள மிகச் சிறிய நீர்த் திவலைகளைப் படிகங்களாக மாற்றுகின்றன. இப்படிகங்கள் வளர்ந்து, அள வில் பெரிதாகி, குளிர்காலத்தில் பனியாகவும் கோடை காலத் தில் மழையாகவும் பெய்கின் றன். எந்தச் சமயத்தில், எந்த உயரத்தில் இச்சோதனை செய் தால் வெற்றிகரமான முடிவு கிடைக்கும் என்பதே இன்று மேல்நாடுகளில் தீவிரமாக ஆரா யப்பட்டு வருகிறது.

லும் அவர் துணிவை எண்ணி வியக்கத்தான் வேண்டியிருக் கிறது.

சென்னைக்கு வந்தால் ...

டி. கே. சி. சென்னைக்கு வரும் போதெல்லாம் கல்கியின் வீட்டில்தான் தங்குவார்.

டி. கே. சி. கல்கி வீட்டுக்கு வரும்போது பார்த்தால் ஒரு வீட்டுக்கு வேண்டிய எல்லா சாமான்களுடனும் சமையற்காரனுடனும் தான் வருவார்.

எத்தனை நாள் டி.கே.சி. கல்கி வீட்டில் தங்குகிறரோ அத்தனை நாட்களுக்கும் வேண்டிய சாமான்களும் இருக்கும்.

காலையில் டி. கே. சி.யின் சமையற்காரரே கல்கி வீட்டுக்கும் சேர்த்துக் காய்கறிகள் வாங்கி வந்து விடுவார். எல்லோருக்குமாக சமைத்தும் விடுவார்.

டி. கே. சி. வீட்டுச் சொந்தக்காரராகவும், கல்கி அவர் விருந்தினராகவும் மாறிவிடுவார்.

சாப்பாட்டு வேளையில் பதினைந்து இருபது பேருக்குக் குறையாமல் டி. கே. சி.யின் ரசிகர்கள் புடைசூழ டி. கே. சி. சாப்பிடுவார். வந்தவர்கள் எல்லாம் கல்கியைப் புகழுவார்கள். டி கே சி.யின் எண்ணற்ற நண்பர் குழாத்துக்கு தினம் தினம் கல்கி விருந்தளிப்பதாக டி. கே. சி. யிடமே பலர் சொல்லி மகிழ்வார்கள். தம் நண்பருக்கு இப்படியெல்லாம் புகழ்சேர்த்துக் கொடுத்து வந்தார் டி. கே சி.

உண்மையை யார் அறிவார்கள் ?

இன்னொரு சமயம்.

கல்கி வீட்டு மாடியில் டி.கே. சி. வழக்கம்போல எண்ணற்ற தம்முடைய ரசிகர் குழாத்துடன் அமர்ந்து கம்பன் கவிதை இன்பத்தை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறர். அந்தச் சமயத்தில் நானும் கல்கியும் இருந்தோம்.

கவிதையைப்பற்றிய விரிவுரை முடிந்தவுடன் பேச்சு அங்கு இருந்தவர்களைப் பற்றித் திரும்பியது.

'டாக்டர் திருமூர்த்தி என்னைப் பாராட்டுவதாக எண்ணி, ''பகீரதனின் கதை, கட்டுரைகளையெல்லாம் படித்துவிட்டு அவருடன் பழகியபோது அவரைப் பிராமணப் பையன் என்றே நினைத்திருந்தேன்,'' என்றார்

இதைக் கேட்ட டி. கே. சி. மீசையைத் தடவிக் கொண்டு மெதுவாகப்புன்னகை செய்தார். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து கம்பீரமாகச் சொன்னர்:

''உங்களைப் போலத்தான் பகீரதனை எல்லாரும் புரிந்துகொண்டிருக்கிறர்கள். பிராமணப் பிள்ளைக்குத் தனிப்பட்ட முறையில் இவ்வளவு அறிவும் திறமையும் இருக்க முடியுமா? அவர் நல்ல தமிழர். அதனால்தான் இந்தக் கூட்டத்திலும் அறிவுத் தெளிவுடன் இருக்கிறர்."

இதைச் சொன்னவுடன் அங்கு அசாதாரண அமைதி நிலவியது. அடுத்த கணம் அது நகைச்சுவையாக மிளிர்ந்து அடங்கியது.

இப்படி அவர் பார்ப்பனர்கள் மத்தியில் அமர்ந்து அவர்களுடன் வாதிட்டு அவர்களை எதிர்த்துப் போர் புரிந்துவந்த நிகழ்ச்சிகளை நினைக்கும்போதெல்லாம் மெய்சிலிர்க்கிறது.

என்னிடமே அவர் பலமுறை கூறியிருக்கிறர் :

''இந்தப் பார்ப்பனர்களை முழுக்க முழுக்க நம்பி விடாதீர்கள். நான் அவர்களை நன்கு புரிந்து கொண்டவன். அவர்க

ளுடைய போலி அன்பில் நான் மயங்குவதே இல்லே. எனக்குப் பின்னல் என்னே இவர்கள் பாராட்டுவார்கள் என்று நம் பிக்கை கிடையாது. ஆனலும் இவர்களேக்கொண்டுதான் தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். தமிழ் நாடு இன்று அந்த சூழ்நிலேயில் இருக்கிறது. கவனமாக இருங்கள்," என்று சொல்லிக்கொண்டே இருப்பார்.

இது எவ்வளவு உண்மை என்பதை அவர் மறைந்தவுடன் நன்கு உணர்ந்து டி. கே. சி. அறிவுத் தெளிவை எண்ணி வியந்து போனேன்.

## தமிழர் பற்றும் தமிழ்ப் பற்றும்

இன்று கல்கி பத்திரிகை செல்வாக்குடன் இருக்கிறது என்ருல் அதற்கு டி. கே. சி.தான் காரணம். அவருக்கு தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் இருந்த பற்று காரணமாக அவர்கள் வளர்ச்சிக்கு கல்கியின் எழுத்தைப் பயன்படுத்த விரும்பினர்.

அது காரணமாக தம்முடைய செல்வம், செல்வாக்கு, எழுத்து, பேச்சு எல்லாவற்றையும் கல்கியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திஞர். கல்கி ஸ்தாபனத்தின் டைரக்டர்களில் ஒருவர் டி.கே.சி. என்பதைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள்.

அரசியலில், நீதிமன்றத்தில், கலேக்கூடத்தில், கோயில்களில் எல்லாம் தமிழ்தான் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் ஆற்றிவந்த பணி மகத்தானது. அதற்குக் கல்கியின் எழுத்து, ராஜாஜியின் செல்வாக்கு எல்லாவற்றையும் பயன்படுத்தி வந்தார்.

டி. கே. சி.யின் சக்தியினல் தான் ராஜாஜி, கல்கி எல்லோரும் தமிழிசை இயக்கத்தை ஆதரித்து வந்தனர். எம். எஸ். தமிழிசை இயக்கத்தில் கலந்து கொண்டு வளர்ந்தார். டி. கே. சி. மறைந்த பிறகு இவர்களும் தமிழை மறந்துவிட்டார்கள்.

திருமதி எம் எஸ். சுப்புலட்சுமி ஒருமுறை மியூசிக் அகாடமியில் கச்சேரி செய்தார் அப்பொழுது தியாகய்யரின் தெலுங்கு கீர்த்தனேகளேயே பாடினர். கடைசியில் ஒரு சில தமிழ்ப் பாட்டுக்களே மட்டும் பாடினர்.

இந்தக் கச்சேரியில் டி.கே.சி. யும் இருந்தார். எம்.எஸ். தெலுங்குப் பாட்டுகளேப் பாடும்போது அவர் பட்ட வேதனேயை அவரை அறிந்தவர்கள்தான் அறிய முடியும்.

கச்சேரி முடிந்து வீடு திரும்பியவுடன் எம். எஸ். வீட்டில் அன்றைய கச்சேரியைப்பற்றி விமரிசித்து மகிழ்வது வழக்கம்.

வழக்கம்போல அன்றும் டி. கே. சி., எம். எஸ். ஸின் கச்சேரியை விமரிசித்தார். அதில்தான் எவ்வளவு குத்தல்! எவ்வளவு எகத்தாளம்! நகைச்சுவை துள்ளி விளேயாடியது! எம்.எஸ். தெலுங்குப் பாட்டுப் பாடியதுஎவ்வளவு கேவலமானது என்பதை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறினர்! அவரைப்போல அழுத்தமாகவும் ஆழமாகவும் எதிரியின் மனத்தில் படும்படியும் நகைச்சுவையுடனும் அவர்கள் மனதைத் தொட்டு உலுக்கும் ஆற்றலுடனும் வேறு யாராலும் கூறமுடியாது. இந்த ஆற்றலே வேறு யாரிடமும் நான் கண்டதில்லே

டி. கே. சி. கச்சேரியை விமரிசிக்க ஆரம்பித்துவிட்டார். எம். எஸ்., ராஜாஜி, கல்கி, இன்னும் ஏராளமான பேர் அவர் என்ன சொல்லப் போகிருர் என்பதை ஆவலுடன் கேட்கக் காத்திருக்கின்றனர்.

"எம். எஸ். ஸின் குரல் இனிமைக்கு எதையுமே ஒப்பிட முடியாது. எம். எஸ். பாட்டைக் கேட்பதற்காக ஐந்நூறு மைல்களுக்கு அப்பால் குற்றாலத்திலிருந்து வருவதில் வியப்பில்லை. ஆயிரம் மைல்களானாலும் பிரயாணம் செய்து வரலாம். எம்.எஸ் ஸின் தமிழ்ப் பாடல்களைக் கேட்கும் போது ஏற்பட்ட இன்பத்தை வார்த்தைகளில் சொல்லிக் காட்ட முடியாது. வார்த்தைக்கு வார்த்தை அனுபவித்தேன். அவ்வளவு அற்புதம்! தியாகய்யர் பாடல்களுக்கு அவர் பாடிய கல்யாணி, தோடி ராகங்கள் தனித் தனி உருவம் பெற்று வந்து நர்த்தனம் புரிந்தன! துள்ளி விளையாடின! கொஞ்சிக் குலாவின! அபாரம்!! இந்த ராகங்களில் தியாகய்யரின் பாடல் என்ன, பெருக்கல் வாய்ப்பாட்டைப் படித்தால்கூட கேட்டு மகிழ்வார்கள்!" என்றார்.

அவர் சொல்லில் இருந்த ஆழ்ந்த கருத்தை அவர்கள் புரிந்துகொண்டு பட்ட வேதனையை இப்பொழுது நினைத்தால் கூடச் சிரிப்பு வருகிறது. தியாகய்யர் பாடலை பெருக்கல் வாய்ப்பாட்டுடன் ஒப்பிட்ட டி. கே. சி யின் நகைச்சுவையை நினைக்கும்போதெல்லாம் என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

டி. கே. சி. மறைந்தவுடன், எம் எஸ்., கல்கி, ராஜாஜி எல்லாரும் தமிழையும் தமிழ் இசையையும் மறந்துவிட்டனர்.

கல்கி பணிமனைக்குள் ராஜாஜிக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. ஆனால் டி.கே.சி. வந்துவிட்டால் அவர்தான் சூரியனைப்போல் ஒளி விடுவார். டி. கே.சி.யும் ராஜாஜியும் சேர்ந்து இருக்கும்போது ராஜாஜியின் உருவமே மங்கி மறைந்து போகும். அப்படிப் பட்ட தனிச் சிறப்புடையவர் டி. கே. சி.

ராஜாஜியும், டி. கே. சி.யும் பேசிக் கொண்டிருப்பதைப்பார்த்தால் டி. கே சி.யிடம் பாடம் கேட்கும் மாணவனைப் போல இருப்பார், ராஜாஜி. இந்த உண்மையை ராஜாஜியும் மறைக்கவில்லை. "என் குருநாதர்" என்று டி.கே.சி.யைப்பற்றி ராஜாஜியே எழுதியிருக்கிறார்.

ராஜாஜிக்கு எந்தச் சங்கதியிலாவது குழப்பம் இருந்தால் அதைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் டி. கே.சிக்குத்தான் உண்டு. அரசியல், கலை, இலக்கியம், விஞ்ஞானம் எல்லாவற்றிலும் டி. கே. சி.க்கு இருந்த அறிவுத் தெளிவை நன்கு பயன்படுத்தி வந்தவர் ராஜாஜியும் கல்கியும் தான்!

ராஜாஜிக்கு நல்ல தமிழ் சொல்லிக் கொடுத்தவரே அவர்தான்! ராஜாஜியின் முகத்துக்கு நேராக "உங்களுக்குத் தமிழைப்பற்றி என்ன தெரியும்? நான் சொல்வ

---

### கற்பதும் விடுவதும்

"எல்லாவித அறிவும் திறனும், நல்ல வழக்கங்களும் தீயவையும், மக்களுடனும் பொருள்களுடனும் பழகுவதும், இவற்றுடன் பழகுவதனால் ஏற்படும் மன உணர்ச்சிகளும்,-இத்தனையும் நம்மால் கற்றுக் கொள்ளப்பட்டவைகளேயாகும்.

ஆதலால் விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க பழக்கங்கள் எவைகளைக் கற்றிருந்தாலும், அவற்றைக் கைவிட்டு விட்டு, இனிமையான பண்புகளையும் வழக்கங்களையும் நம்மால் கற்றுக் கொள்ள முடியும்."

—Robert S. Woodward

தைக் கேட்டுக் கொள்ளுங்கள்,'' என்று அவருக்குப் பாடம் கற்பித்த மேதை டி. கே. சி.

டி. கே. சி.க்குப் பின்னுல் எல்லாவற்றிலும் தெளிவில்லாமல் ராஜாஜி திசை தடுமாறி இருப்பதை இப்போது எல்லாரும் பார்த்துத்தானே வருகிருர்கள்?

இப்படி எத்தனையோ நிகழ்ச்சி டி.கே.சியைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

டி. கே. சி. தமிழ் நாட்டையும், தமிழையும், தமிழ் மக்களையும் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தவர். தாம் பி.ஏ. பி.எல். பட்டம் பெற்ற ஆங்கிலப் பட்டதாரி என்ற கர்வம் ஒரு சிறிதும் இல்லாமல் தமிழுக்குத் தொண்டாற்றி வந்தார். அவர் தம் பெயருக்குப் பின்னுல் தம் பட்டத்தை எப்பொழுதும் போட்டதே இல்லை. அவருடைய முகவரி அச்சிட்ட கடிதத்திலும் இருந்ததில்லை.

ஆங்கில மொழியின் மூலமாகப் பல்வேறு மொழிகளின் இலக்கியங்களையெல்லாம் படித்துவிட்டு அதைவிடத் தமிழ் இலக்கியம் அதிக அழகுடன் மாறிவருவதை ஆங்கில வெறிபிடித்த மயிலாப்பூர் கூட்டத்துக்கு உணர்த்தியவர் டி. கே. சி. ''கீதையில் என்ன இருக்கிறது?" என்று கேட்டு அவர்களைக் கேலி செய்தவர் ரசிகமணி.

தமிழ் இலக்கியத்தின் மூல சக்தியையும், அதைத் தமிழன் தான் தனித் திறமையுடன் கையாள முடியும் என்பதையும் அவர் சரியாக மதிப்பிட்டிருந்தார். ஆனுல் அந்தச் சக்திகளும் திறமைகளும் இன்னும் வெளிப்படவில்லை. எந்த மாறுதலுமின்றி தமிழ் மக்களும் தமிழ் மொழியும் தமிழ் மக்களின் வரலாற்று சரித்திரமும் ஆரியப் பண்பாட்டில் நசுங்கி அமுங்கிக் கொண்டிருப்பதை உணர்த்தி இன்னும் யாரும் சரியான முறையில் தமிழனைத் தட்டி எழுப்பவில்லை என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

வாழ்நாளெல்லாம் பார்ப்பனர் மத்தியில் நின்று, அவர்கள் தமிழ் மக்களை ஓங்கவிடாமல் செய்து வரும் முயற்சிகளை எதிர்த்து அவர்களுடன் போராடி வந்தார். சிங்கத்தை அதன் குகையிலேயே தன்னந்தனியாக நின்று எதிர்த்து அதன் பற்களை ஒவ்வொன்ருகப் பிடுங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தீரர்!

டி. கே. சி. தமிழ் மண்ணில் தோன்றிய மிகப் பெரிய மனிதர்.

சாதி, சமயம், அதை யொட்டிய கொடுமைகள் என்ற இருண்ட மேகங்கள் இப்பொழுது இருப்பதைவிட அதிகமாக இருண்டுவிட்டாலும் டி.கே.சி. ஏற்றி வைத்த ஒளி அதற்கு வழிகாட்டும்

தமிழ் மக்கள் நிரந்தரமாக நினைவில் வைத்துப் பெருமைப்பட வேண்டியவர், டி. கே. சி. அந்தத் தகுதி அவரைப்போல் வேறு யாரிடத்திலும் அவ்வளவு அதிகமாக இருந்ததை நான் கண்டதில்லை.

சோ. இலட்சுமிரதன் பாரதி, எம்.ஏ., பி.எல்.

# மதச்சார்பற்ற அரசு

## (The Secular State)

[இது மதச் சார்பற்ற அரசுதானா? அப்படியானால் மதத்துறையில் எப்படி எப்படி நடக்கவேண்டும்? மதமும் அரசும் குழம்பினால் அதன் விளைவு என்னவாகும்? ஆட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றாதபடி காந்தீயப் பிரசார வழியினால் மத ஒற்றுமையை வளர்க்க முடியுமா?—இவை பற்றி ஆராய்கிறார், நீண்ட காலப் பகுத்தறிவாளரும் காந்தீய வாதியும், வழக்கறிஞரும், சமுதாயப் புரட்சி லட்சியங் கொண்டவருமான கட்டுரையாளர், திரு. லட்சுமிரதன் பாரதி.]

குடி அரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன் மதுரையில் நடந்த கோவில் பெருவிழாச் சடங்கிற்கு வரவிருந்தார். "குத்தூசி" அதைக் கண்டித்தது. அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கும் தொடரப்பட்டது. உடல் நலக் குறைவால் அவரது பயணம் நிறுத்தப்பட்ட அறிக்கை வெளிவந்தது. ஏன் இந்த எதிர்ப்பு?

இந்திய மக்களுக்காக நிறுவப்பட்டதோ ஒரு "மதச் சார்பற்ற அரசாங்கம்." வேறு விதமாக நிறுவியிருக்கவும் முடியாது.

பரந்த பாரத கண்டத்தில், தம்முள் பொதுவியல்புகளும் நெருங்கிய உறவுகளுமுடைய ஓர் சமூகம் என மக்களைச் சொல்வதற்கில்லை. உயரிய மனோவியல் புகளையும், மனிதப் பண்புகளையும் போற்றி வளர்க்கும் உலகில், தலைகீழாகத் தோன்றும் பல திறப்பட்ட நிகழ்ச்சிகளைக் காணலாம். திறமையான அரசுக்கு ஆதாரமான "தேசீய இனம்" (Nation) என்பதற்குத் தகுதியான பொதுவியல்பும் பற்றுகளும் ஏற்படுமுன்னரே, யாவர்க்கும் பொதுவானதொரு சர்வாதிகார, சர்வ வியாபக அரசை நிறுவி, பின்னர் அதன்மூலம் அத்தகைய பொதுவியல்புகளையும் பற்றுதல்களையும் உண்டாக்கி, ஒரு 'தேசீய இனத்தை' உருவாக்க முனைந்திருக்கிறோம். இந்திய மக்கள் அனைவர்க்கும் பொதுவான மதம் ஒன்று என்றுவது இருந்திருப்பதாகக் கூற முடியாது. பயத்தாலும், ஆச்சரியத்தாலும், இயற்கையின் சக்திகளை எல்லாம் எண்ணற்ற தெய்வங்களாகக் கற்பனை செய்து அவற்றை வழிபட்ட காலத்திலிருந்து, அவற்றைத் திருப்தி செய்து, வேண்டிய வரங்களைப் பெறுவதற்காக மந்திர தந்திர வேள்விகளாலாகிய சடங்குகள் அனைத்தையும் வகுத்து முதன்மை பெற்ற பிராமணீய மதமும், பிரமன், மாலவன்,

சிவன் காளி முதலிய பல்வேறு தெய்வங்களைப் பூசனை செய்யும் கோவில் வழிபாடுகளும், அவற்றின் கொடுமைகளில் இருந்து விடுபட எழுந்த சமண, பௌத்த, பிரமசமாஜ, ஆரியசமாஜ, மதங்களும், இன்னும் அவைகளுக்குள்ளே ஏற்பட்ட போட்டி, பூசல்கள் ஆகியவற்றை எல்லாம் சமாளித்துத் தன்னுள்ளடக்கிய இந்து மதமும் தோன்றின். பொருத்தமில்லாத பலதிறப்பட்ட கொள்கைகளை ஏககாலத்தில் ஏற்றுக்கொண்டு, வேறுபட்டுக் கிடந்த இந்திய மக்கள் தங்களை 'இந்துக்கள்' என்று பொதுப்படச் சொல்லிக்கொள்வதன்றி எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதும், திட்டமாக வரையறை செய்யப்பட்டதும் ஆன ஒரு சிலவற்றையேனும் அடிப்படையாகக் கொண்ட மதத்தை வளர்த்து அதற்கு ஆதிக்கம் அளிக்க இயலாது போயிற்று; உலோகாயதமும், நாஸ்திகமும் கூட இந்து மதமே. அதுவும் ஒரு நன்மையே ஆயிற்று; பிற நாடுகளைப் போன்று மதத்தின் பெயரால் சண்டைகளையும், கொடுமைகளையும் மக்கள் தங்களுக்குள் விளைவித்துக்கொள்ளாதது மட்டுமல்ல. மதக்கொள்கைகள் பற்றி ஒருவருக்கொருவர் வாதாடிவிட்டுக்கொடுத்து, மாறவும், உதவி செய்யவும் வழி துறைகள் ஏற்பட்டு, தாராள மனப்பான்மை (Tolerance) வளர்வதற்குப் பெருவாய்ப்பும் கிட்டியது.*

## மதவெறி அரசு

இந்திய நாட்டிற்குள் பின்னல் புகுந்தவை கிறித்தவமும் இஸ்லாமியமும் ஆகும். மேலை நாடுகளில் இருந்து வாணிகமும் அதன் வழியே கொடியும் கோலும், அவற்றின் சார்பொடு பாதிரிகளும் நுழைந்து, இந்நாட்டில் சில சில சல சலப்புக்களை உண்டு பண்ணினலும், மத உலகின் அமைதியைக் குலைத்து அதிகமான கேடுகளை விளைவியாததுடன், மக்களிடையே விஞ்ஞான அறிவிற்கு இடமளித்து, செய்நேர்த்திக் கலைகளை வளர்த்து, நோய்களைக் களையும் பல முயற்சிகளைப் பரப்புவதற்கு அவை உதவின. ஆனல் இந்தியாவில் வாளுடன் தோன்றிய இஸ்லாமிய அரசுகளைப் பற்றி அவ்விதம் சொல்வதற்கில்லை; அவற்றில் பல மதவுலகில் கத்தி கொண்டு இரத்தம் சிந்தி இஸ்லாமியத்திற்கு ஆதிக்கம் தேடின. இந்திய மண்ணின் சமயச் சுதந்திர நறுமணத்தை நுகர்ந்து அனுபவித்த அக்பர் போன்ற மக்கட் பண்புடைய பல அரசர்களைப் போலல்லாது, மகமது கஜனி, ஔரங்கசீபு, போன்ற மதவெறியர்கள், பிற மதங்களை அழிப்பதே தங்கள் மதக் கடனுகக் கொண்டனர். இந்து தேவாலயங்களைத் தவிடு பொடியாக்கி அவற்றின்மேல் மசூதிகளை எழுப்பினர். ஔரங்கசீபுக்குப் பயந்து விசுவநாதர் விக்ரகத்தைப் போட்டு மறைத்த கிணற்றை இன்றும் காசியில் காட்டுகின்றனர்.

இதுபோன்ற வரலாற்றுக் கதைகள் இந்நாட்டில் பலபல; மதத்தில் அரசாங்கம் புகுவதினல் ஏற்பட்ட கற்பிளவோடொத்த கயமையையே இந்து—முஸ்லீம் பிளவு, சிறப்பாக வட நாட்டில் விளக்கியது. இந்திய மக்கள் பிரிந்து, 'இந்து,' 'முஸ்லீம்' என்ற இருவேறு தேசீய இனங்களாகி, தனியாக ஒரு இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்டது சரித்திரத்திலேயே வருந்

---

* உதாரணம்—மணிமேகலை—27. சமயக் கணக்கர்—தம் திறம் கேட்ட காதை.

தக்கூடிய ஒரு நிகழ்ச்சி. அதற்குக் காரணமாகிய பொய்மைக் கொள்கைகள் இருவரிடையேயும் இருந்தன. பழகுமிடத்து, உண்டு, உடுத்தி, கொண்டு, கொடுத்து, நெருங்கி உறவாடுவதை மதத்தின் காரணத்தினுல் தடுத்துத் தள்ளிவைக்கும் சாதியும் தீண்டாமையும் மக்களிடையே பரப்பிய சனுதன ஆரியப் பிராமணீயமும், தங்கள் மதத்தை வாளொடு வலிந்து புகுத்திய இஸ்லாமியமும் மோதிக்கொண்டதனுல் ஏற்பட்ட விளேவே இதுவாகும். அதனுல்தான் காந்தி அடிகள் சாதியையும், தீண்டாமையையும், பலாத்காரத்தையும் பாவமென ஒதுக்கி, அவற்றை அறவே ஒழிக்கவேண்டிய திட்டங்களே வகுத்து, இந்திய மக்களே நடத்திச் சென்ருர். இன்னும் ஒவ்வொரு மதத்தினரும் தம் மதத்தைப்போலவே பிறமதங்களேயும் பாராட்டி மதிக்க வேண்டிய, "சர்வதர்மீக சமானத்துவ"க் கொள்கையைப் பரப்பினுர். பலாத்காரத்திற்கு உறைவிடமான அரசாங்கமும், மக்களிடையே எழுகின்ற பலாத்காரச் செயல்களேத் தடுத்து அகற்றும் அளவிற்கும அவர்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அளவிற்கும், சுருக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினுர். ("That government is best which governs least").

## திரைப்படம் கண்டவர்

முதன் முதல் திரைப்படத்தை (சினிமா)க் கண்டு பிடித்தவர், எடிசன் என்ற அமெரிக்கர் என்றும், ஃப்ரான்சைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள் என்றும், பிரிட்டனேச் சேர்ந்த ராபர்ட் பால் என்றும் கூறுவதுண்டு. ஆனுல் உண்மையில் அப்பெருமைக்குரியவர் வில்லியம் ஃப்ரீஸ் க்ரீன் என்ற இங்கிலீஷ்காரராம். துன்பத்திலும் வறுமையிலும் ஆழ்ந்து கிடந்த இவர் தமக்குரிய புகழைக் காணுமலே மறைந்து விட்டாராம். இவரது வரலாற்றைப் பற்றியே 1951-ல் பிரிட்டிஷ் திரைப் படக்காரர்கள் ஒரு படம் எடுத்தார்களாம். அதன் பெயர் 'மாஜிக் பாக்ஸ்' என்பது.

## மதச் சார்பற்றதா ?

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை யொருவர் விரட்டியடித்துக்கொல்லும் நிலேமையில் தோன்றிய இந்திய அரசியல் நிறுவனச் சபை, மதச் சார்பற்ற அரசை நிறுவியதில் அதிசயமொன்றுமில்லே. பெருமை பாராட்டுவதற்குமில்லே; அது, வேறு வழியற்ற ஒரு அவசியமாயிற்று.

அரசாங்கத்திற்கு தனக்கென ஒரு மதமோ, மதச்சார்போ இல்லாததுடன், எல்லா மதங்களினிடையேயும் நடுநிலேமை வகிக்கும் என்பதே இதன் பொருள்.

நடுநிலேமை வகிப்பதென்ருல் என்ன ? அரசாங்கத்திற்குத் தனக்கென ஒரு மதமும் கிடையாது; குடிகள் அனேவர்க்கும் தங்கள் மனச் சாட்சிக்கேற்ற மதத்தை அனுசரிக்க சுதந்திரமுண்டு; எவர்க்கும், மதக் கொள்கைகளே முன்னிட்ட எந்த விதமான தடைகளோ விலக்குகளோ இன்றி அரசியலில் எல்லாப் பதவிகளேயும் அதிகாரங்களேயும் அடையக்கூடிய சுதந்திரம்; ஆகியனபோன்ற உரிமைகள், அடிப்படையானவைகளாக

உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.*

என்றாலும் 'மதச் சார்பற்ற அரசாங்க' மென்பது மக்களிடையே நடைமுறையில் பலவிதமான ஐயப்பாடுகளையும் குழப்பங்களையும் உண்டு பண்ணத்தக்க முரண்பாடுகளுக்கு இடந்தருவதைக் காணுகிறோம்; இதைப் பற்றிய ஒரு நூல் "இந்தியா—ஒரு மதச் சார்பற்ற அரசு என்ற முறையில்" ("India-as a Secular State" by Donald Eugene Smith) என்ற தலைப்போடு வெளி வந்துள்ளது. அதன் ஆசிரியர், இந்திய சரித்திரம், அரசியல் நிறுவனம், சமூகப்பிரச்னைகள், அவை பற்றிய சட்டங்கள் முதலியவற்றை யெல்லாம் ஆராய்ந்து, சில முரண்பாடுகள் இருந்த பொழுதிலும், இந்தியாவைப்பற்றி, அது (அதாவது அதன் அரசு) ஒரு மதச் சார்பற்ற நாடு என்ற முறையில் பேசுவது பொருட்செறிவுடைத்து என்று கூறுகிறார்.

மதச் சார்பற்றது என்பதனால் அதை நாஸ்திக அரசு என்றோ, எந்த மதத்திற்கும் விரோதமானதென்றோ கொள்ளக்கூடாது என்று பல தலைவர்கள் வலியுறுத்துகிறார்கள். பார்க்கப் போனால் அதற்குப் பொருளோ, அவசியமோ இல்லை. மதம் பற்றிய எந்தக் காரியங்களையும் பொருள்படுத்தவோ, அவற்றில் தலையிடுவதோ இல்லையென்றாலும், அரசிற்கு எவ்வித மதச்சார்புமில்லை என்றாலும், இரண்டும் ஒன்றுதான். அவற்றில் அதற்கு விருப்போ, வெறுப்போ, செயல்பாடோ இல்லை என்பதாகும். நிரீசுவரவாதிகளும், அத்வைதிகளும் கூட அப்படித்தான். ஆனால் இவ்விதம் அவர்கள் கூறுவது சில அசம்பாவிதங்களுக்கு இடமளிக்கின்றன. அரசாங்கப் பதவிகளை வகிக்கும் சிறிய அலுவலாளர் முதல் குடிஅரசுத் தலைவர் வரை, அரசாங்க நிதி, சௌகரியங்கள் முதலியவற்றைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட மதக் காரியங்களில் கலந்து கொள்ளுகிறார்கள். அரசாங்க அலுவலங்களிலும், காரியாலயங்களிலும் கூடத் தங்களது தனித்த மதவழிபாடுகளை நுழைத்து விடுகிறார்கள். வேறுபட்ட யாரும் தைரியமாகத் தட்டிக் கேட்டாலும் அவர்களும் அப்படிச் செய்துகொள்ளலாமென விடையளிப்பார்கள். இத்தகைய செயல்கள், சிறப்பாகச் சிறுபான்மையினரான பிற சமயத்தவர்களிடம் பொறாமையையும் குரோதத்தையும் உண்டு பண்ணுமென்பதை இவர்கள் நினைப்பதில்லை அரசாங்கச் சார்பு எதுவுமற்ற தங்களது பிரத்யேக முறையில், தங்கள் செலவில் அவர்கள் அவற்றில் கலந்து கொள்வதில் ஆட்சேபணை இருக்காது.

## பொருத்தமற்ற செயல்

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் போன்றவர்கள் தங்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்த பிரத்தியேகமான சட்டங்களின் (Private Laws) ஆளுகைக்குள் இருக்கின்றனர். எனினும், மத்திய, பிரதேச அரசுகள், மதச்சார்பற்றவை என்று சொல்லிக்கொண்டே, 'பிள்ளை கூட்டுதல்' (Adoption) 'மணம் செய்தல்' 'மண விலக்கு' (Divorce) 'குழந்தைகள்,' 'வயது வராதவர்கள்' (Minors) பொதுக் குடும்பம், பிரிவினை போன்ற, நீதிமன்ற வழக்குகளில் தங்கள் தங்கள் தனிச் சட்டங்களுக் குட்பட்ட

* Vide: The Constitution of India. Preamble & Articles 14-17; and 25-30.

சகல காரியங்களிலும்; தர்ம சொத்துக்கள், தர்மகர்த்தாக்கள், மடங்கள், தேவஸ்தானங்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றிலும், சட்ட மியற்றவும், அதன்மூலம் ஆட்சி செய்யவும் அதிகாரம் பெற்றிருப்பது எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது.

மதச் சுதந்திர உரிமை பற்றிய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 25வது பிரிவில், பொருளாதாரம், பணம், அரசியல், அல்லது இதர மதச் சார்பற்ற நடவடிக்கைகள், அவை மதாச் சாரங்களுடன் சேர்ந்திருப்பதைக் கொண்டு, நடைமுறையில் உள்ள அவைபற்றிய சட்டங்களில் அல்லது, அவை பற்றிச் சட்டமியற்றுவதில், அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட மாட்டா என்று விளக்கமாகக் கண்டிக்கிறது. எனவே இவைகளடங்கிய பெரிய வட்டத்திற்குப் புறம்பான மதக் காரியங்கள் இருந்தால் அவற்றில்தான், அரசாங்கம் தலையிடக்கூடாத உரிமைகள் மக்களுக்குண்டு என்று பொருள் கொள்ள வேண்டும்.

மக்களுடைய முழுமையான செயல்களையும், நடைமுறைகளையும் எடுத்து, அவற்றில் இந்த பாகம் பொருளாதாரத்தின் பாற்பட்டது, இது பணத்தின்பாற்பட்டது, இது அரசியலின்பாற்பட்டது, இது மதத்தின்பாற்பட்டது. இது ஒழுக்கத்தின்பாற்பட்டது என்று அக்குவேறு ஆணிவேருகப் பிய்த்துப்பிடுங்கி தனித்தனியாகப் பிரிக்க முடியாதபடி அவை கலந்து ஒன்றியவை. அப்படியானுல் இப்பிரிவிற் காணும் விளக்கம், எப்படி ஐயப்பாடுகளையும் முரண்பாடுகளையும் விளக்கி, மதச் சுதந்திர உரிமைகளுக்கு உரனும் வலிமையும் தரும்? மதப் பழக்க வழக்க, ஆசார அநுட்டானங்களில் இருந்து மேற்கண்ட சகல கூறுகளையும் எடுத்துவிட்டால் பின்னுல் மதச் சுதந்திர உரிமை என்று சொல்லக்கூடிய எந்தக் கூறு மிஞ்சும்? பர்வ புண்ணியங்கள் புகாத கருமங்கள் ஏது? எனவே அரசாங்கம் தலையிடாத மதச் சுதந்திர உரிமை என்பது மக்களை மயக்கும் ஒரு மாயவித்தை என்ற கண்டனம் எழுகின்றது.

அடுத்தபடி, இன்னும் கடுமையான ஒரு குற்றச்சாட்டும் உண்டு. இந்துக்கள், நெல்லிக்காய் மூட்டைபோன்று, ஒட்டாத பல பகுதிகள் சேர்ந்த ஒரு தொகுதி. ஒற்றுமையோ வலிமையோ அற்றவர்கள். எனவே சட்ட மன்றங்களும், ஆட்சியாளரும், அவர்களுடைய மதக் காரியங்களில், நினைத்தபடியெல்லாம் தலையிட்டு; அவர்களது உரிமைகளை எடுத்துக்கொள்கின்றனர்; அதுபோல் கிறித்துவ, இஸ்லாமிய மதக்காரியங்கள், ஏன், மற்றக் காரியங்களிலும் கூடப் பயந்துபோய் தலையிடுவதே இல்லை. பிற மதத்தினரையும் உறுப்பினராக உடைய அரசு நல்லதோ, பொல்லதோ, இந்துக்களின் காரியங்களில் மட்டுமே ஏன் தனி ஆட்சி நடத்துகிறது?

இந்நாட்டில் மக்கள் தொகுதிகள் பலவும் தத் தமக்குரிய பிரத்யேகமான தனிச் சட்டங்களின் ஆளுகையில் இருக்கின்றன. அதனுல் எல்லோரும் எல்லாவற்றிலும் பொதுவான உரிமைகள், கடமைகள் உடையவர்களாக இருக்கிருர்கள் என்று கூறமுடியாது. எனவே, அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 14வது பிரிவில், சட்டத்தின்

முன்னும், அதன் பாதுகாப்பிலும், இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் 'சமத்துவநிலை என்ற அடிப்படை உரிமை (Fundamental Right) வகுத்திருப்பதில் பொருள் வளமில்லை.

### மதமும் அரசும் மோதுதல்

வாழ்க்கையில் அரசியல் பகுதி வேறு, மதப்பகுதி வேறு என்று வகுக்க முயல்கிறோம். இரண்டும் இரு வேறு வட்டங்கள் அல்ல; ஆரம்பத்தில் எல்லா அதிகாரங்களும் ஆளுகையும் ஒரே தலைமையில்தான் ஒன்றியிருந்தன. மதத் தலைவனே அரசனுமானான். பின்னால் சரித்திரப் போக்கில் அவை இரண்டாகப் பிரிய வேண்டிய அவசியமேற்பட்டது. எனினும் இவை இரண்டின் எல்லை வரம்புகளை அரிதியிடுவதிலும், இரண்டின் அதிகாரங்களையும் அதற்கான சாதனங்களையும் முறைப்படுத்துவதிலும், சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டே இருந்துவருகிறது. ஐரோப்பாவில், கிறித்துவ மதத் தலைவரான போப்பிற்கும் அரசர்களுக்கும் ஊடே மக்கள்பால் உள்ள அதிகார ஆளுகைகள் பற்றி நடந்த நீடிய போராட்டம் இதற்குச் சான்று. இப்போட்டியும் போராட்டமும் தனிப்பட்டவர்களிலிருந்து மத, அரசியல் அமைப்புக்கள் வரை, எச்செயல்கள் மதத்தின் பாற்பட்டன, எச்செயல்கள் அரசியலின்பாற்பட்டன, என்று தீர்மானிப்பதில், இன்னும் பூசல் இருந்துகொண்டே தானிருக்கிறது. எட்டிப்பிடிக்க முடியாத வான எல்லையை (Horizon) நாடிச் செல்வதைப்போன்றிருப்பினும், நமது குறிக்கோளும், நமது செயல்களை அவ்விதமாகப் பிரித்து, தெளிவு காண்பதிலேயே சென்று கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு, அறிவும், விஞ்ஞானமும் வளர்ந்து மதப் பரப்பின் எல்லைகள் ஒருபுறம் குறையவும், மறுபுறம் மக்களுடைய நல்வாழ்விற்காக, இடம், பொருள், ஏவல்களுக்குச் சிகரமாக விளங்கும் அரசாங்கத்தை ஆக்கநல அரசாக்கி (Welfare State) அதன் எல்லைகளைச் சர்வ வியாபகமாகப் பெருக்கவும் காண்கிறோம். அதனால், முரண்பாடுகளும் விரோதமும் வலுக்கின்றன. இப்போட்டியில் மதமும், அரசும் ஒரு வகையில் தங்கள் தரங்குறைந்து மதிப்பை இழக்கின்றன. இன்று மதம், அரசு ஆகிய இரண்டின் கற்பனைகள், (Ideology) நிறுவனங்கள் (Institutions) என்பதற்குப் பதிலாக, விஞ்ஞானம் (Science) ஆத்மஞானம் (Spirituality) ஆகிய இரண்டும் அறிஞர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. மதமும் அரசும் அவசியமான கெடுதல்கள் (Necessary Evils) என்று சிலர் நினைக்கின்றார்கள்.

**இது இந்தியா:**
**(1961 கணக்கு)**

| | |
|---|---|
| மொத்த மக்கள் எண்ணிக்கை | 439,235,082 |
| பரப்பு: சதுர மைல் | 1,178,995 |
| ஆண்கள் | 226,293,620 |
| பெண்கள் | 212,941,462 |
| படித்தோர் மொத்தம் | 105,333,281 |
| படித்த ஆண்கள் | 77,828,163 |
| படித்த பெண்கள் | 27,505,118 |
| மொத்த நகரங்கள் | 2,690 |
| நகரங்களில் வாழ்வோர் | 78,835,939 |
| மொத்த கிராமங்கள் | 567,169 |
| கிராமங்களில் வாழ்வோர் | 359,772,165 |

## இந்தியாவின் சிக்கல்கள்

இந்தியாவில் சட்டசபைகள் எல்லாம் அரசியல் நிறுவனங்களேயாம். அதன் உறுப்பினர்களை எவ்வித மதப்பாகுபாடோ, பிரதிநிதித்துவமோ இன்றி இந்திய மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். வாக்கெடுப்புத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் இந்து மதத்தினரே பெரும்பான்மையினர். எனவே ஒரு சில தொகுதிகளைத் தவிர்த்து சட்டசபைகள் அனைத்திற்கும் தெரிந்தெடுக்கப்படும் உறுப்பினரில் மிகப் பெரும்பான்மையினர் இந்துக்களே. கிறித்துவ, இஸ்லாமிய உறுப்பினர் மிகச் சிலரே. அதனால் அவர்களுடைய சமவாக்குரிமை கொண்ட சட்டசபைகள், இந்துக்களுடைய பழக்க வழக்க மதாச்சாரங்களைப் பற்றிய சட்டங்களைச் செய்தாலும் அவற்றை இந்துக்கள் பெரும்பாலும் தாங்களே செய்துகொண்டதாகக் கருதுவதற்கு இடமிருக்கிறது. ஆனால் கிறித்தவர்களோ, மகமதியர்களோ, அதே காரணத்தைக் கொண்டு, தங்கள் தங்கள் மதாச்சாரங்களைப் பற்றிய சட்டங்களை அவ்விதம் கருதுவதற்கில்லை. இந்துக்கள் மதாச்சாரங்களைப் பற்றிய சட்டங்களைத் தீர்மானிப்பதை விரும்பாமல் எதிர்ப்பார்கள். இந்த நிலைமையில் அவர்கள் முன்னேற்றத்திற்கு அவசியமான திருத்தங்களோ, சட்டங்களோ செய்ய முடியாமல் தடைப்பட்டு அவதிப்படுவார்கள். அண்மையில் முஸ்லீம்கள் சம்பந்தமான ஒரு சட்டம் கைவிடப்பட்டது ஞாபக மிருக்கலாம். ஒரே மதத்தைச் சேராத பல்வேறு மதங்களைச் சேர்ந்த உறுப்பினர்களைக்கொண்ட அரசாங்கத்தில் இவ்விதக் குறைபாடுகள் இருந்தே தீரும். பழக்க வழக்க ஆசார விதிவிலக்கு முறைகளையெல்லாம், மக்கள் சிறிது சிறிதாக, மதத்தின் அதிகார ஆளுகையிலிருந்து விடுபடச் செய்து அறிவின் ஆணையின் கீழ் அமைப்பதொன்றே இதற்கு மருந்து. அத்தகைய போக்கே இத்தகைய சட்டசபைகளின் நடவடிக்கைகளுக்குப் பொருளும் வலிவும் தரும். அந்நிலை அடையும் வரைக்கும், அவரவர்களுக்குத் தனித் தனியான மதச் சார்புடைய காரியங்களில், தங்களுக்கு வேண்டிய சட்டங்களை (Personal Laws) அவரவர்களின் தனித்த பிரதிநிதிகளின் மூலமே நிறைவேற்றிக் கொள்ளும்படியான வழிமுறைகளை ஏற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். அம்முறையை ஒரு ஒப்புதல் வழக்காக (Convention) சட்ட சபைகள் அனுசரிக்கலாம். அவரவர்களுக்குப் பிரத்யேகமான தனிச் சட்டங்களை (Personal Laws) ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்வரை, அப்படிச் செய்வது நடைமுறையில், வெறுத்து ஒதுக்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதாகுமே என்று குறைபட்டுக்கொள்ள வேண்டியதில்லை.

## வழி என்ன ?

அரசியல் துறைகளிலும், நிறுவனங்களிலும், நிர்வாக முறைகளிலும், ஒரே தேசீய இனம் என்று சொல்ல முடியாமல் மதவாரியான மக்கட் தொகுதிகள் பிரிந்து செயல்படும். அறனிழுக்கான நிலைமையிலிருந்து விடுபட்டு இந்திய மக்கள் அனைவரும் ஒரே சமூகம், ஒரே சமுதாயம் என்று கொள்ளத்தக்கவாறு முன்னேற வழி என்ன ?

வண்டிக்குள் இருந்து கொண்டிருப்பவர்கள் உள்ளே இருந்தபடியே அந்த வண்டியைத் தள்ளி நகரச் செய்ய முடி

யாது. வெளியே வந்துதான் தள்ளவேண்டியிருக்கும். அது போல் அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு இந்நிலைமையை மாற்ற முடியாது. அதை விட்டு வெளியேறித்தான் அதை மாற்ற முடியும்.

வேறு வழிகள் உண்டு. அவ்வழிகளில் நாம் சென்று பழகி வெற்றியும் கண்டிருக்கிறோம். ஆனால் "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு'' என்பார்கள். பல நூற்றாண்டுகளாக வளராது தடைப்பட்டு குறையுற்ற நம் இன்னல்களையெல்லாம் உடனே தீர்த்துப் பெருவாழ்வு பெற ஆசைப்படுகிறோம். அதனால், ''அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த இராத்திரியில் குடை பிடிப்பான்", என்பதுபோல் சொந்த அரசைக்கொண்டு, புவிச் சுகமாண்புகளையெல்லாம் எளிதில் அடைய நினைக்கிறோம். அது, குறுக்குவழி என நினைத்துக் குருட்டுவழியில் போவதாகும்.

பலாத்காரப்படை வலிகளுக்கெல்லாம் உறைவிடம் அரசு; அவை திரண்டு உருண்ட சிகரமுமாகும்; என்றாலும் அவற்றின் சக்திகளுக்குஎட்டாதகாரியங்களுமுண்டு. மக்களுடைய சிந்தனைகளும், உணர்ச்சிகளும், அவற்றால் பிடித்து அடக்கி அடிமைப்படுத்த முடியாதவை. அத்தகையனவே சமூக சமுதாய உறவுகள். சமூக, சமுதாய, தேசீய இனங்கள் எல்லாம் அரசாங்க அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவை. படைபலம் கொண்டு எட்டிப்பிடிக்க முடியாதவை. எளிதில் அறியத்தகும் இந்த உண்மைகளை, நமது ஆத்திரத்திலும், அவசரத்திலும், அதிகார வெறியிலும் அடிக்கடி மறந்து தள்ளிவிடுகிறோம். இப்போக்கு இன்று ஆளும் கட்சியினர்க்கு அதிர்ச்சியை விளைத்ததில் ஆச்சரியமில்லை; அதிகாரப் பதவிகளுக்கு முன்னால் கட்சி; (Party before Post) கட்சி யென்றால் மக்களின் நலனுக்காக, மக்களின் பிரதிநிதித்துவத்தை அடைதல்; அப்படியென்றால் அரசாங்க பீடத்திலிருந்து வெளியே வந்து மக்கட் பணிகளை ஏற்றுக்கொள்ளுதல்; நாட்டின் ஊழியர்கள் ஆதல்; இந்த விழிப்படைந்திருப்பது நற்குறிதான்.

## காந்தீய வழி

இந்திய மக்களிடையே நல்லுறவுகளையும் பண்புகளையும், வளர்த்து, சாதி, வகுப்பு, வேற்றுமைகள் இல்லாத ஒரு நல்ல சமூகத்தையும், தேசீய இனத்தையும் உருவாக்குவதற்குத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் காந்தி அடிகள்; அவர் பின்பற்றிய வழிகள் என்ன? கொடி ஏற்றுவதுமுதல் சர்வ தார்மீக சமானத்துவப் பிரார்த்தனைகளை நடத்துவது வரை, சகல முயற்சிகளிலும், மக்களுடைய ஒப்புதலைத் திரட்டுவதொன்றையே தம் வழியாகக் கொண்டிருந்ததை நாம் மறப்பதற்கில்லை; அவரது தலைமைக்கும் செல்வாக்கிற்கும் சான்றான பெருங் கூட்டங்களிலும், ஒருவர் எதிர்த்தாலும், தமது செயல் முறையை நடத்தாமல் நிறுத்தி எதிர்ப்பவர்களுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணி, ஒற்றுமையை வளர்த்து வெற்றிகாணவில்லையா? மாற்றார்களின் மனதையும் மாற்ற வல்ல அவரது உண்ணா நோன்பு போன்ற—உண்மையை வெற்றி காணச் செய்யும்—முறைகளை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

அன்றொரு நாள் ஏசுநாதர், அவரை இடைமறித்து இடர்ப்படுத்த முயன்றவர்களுக்கு,

"சீசருக்கு (அரசனுக்கு) உரியதை சீசரிடம் கொடுங்கள்; ஆண்டவனுக்கு உரியதை அவருக்குச் செலுத்துங்கள்" என்று சொல்லிச் சமாளித்தார். இன்று உண்பது முதல் பிள்ளை பெறுவதுவரை உள்ள எல்லாக் காரியங்களிலும் அரசனும் ஆண்டவனும் தலையிடுகிறார்கள். என் செய்வது? இந்த வலுக்கட்டாயம் மக்களை. இரண்டையுமே இல்லையாகச் செய்யத் தூண்டும்; உயிரினு மினிய சுதந்திரமே அவர்களுக்குப் பெரிது.

எனவே ஆக்க நலன்களைத் தேடும் இந்திய அரசுகளில் இத்தகைய மீட்சியைக் காணமுடியுமா? தனது வலுவந்த ஆளுகையை மக்களுடைய சுதந்திரத்தைக் காக்குமளவிற்கு மட்டிலும் குறுக்கிக்கொள்ளுமா? மதத்தின் பெயராலும், மற்றெதன் ஆணையாலும், கொலை, களவு, சூது போன்ற ஒருவர் மற்றொருவர் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல்களைத் தடுத்து விலக்குவதற்கே அதன் பலாத்காரம் பயன்படவேண்டும். மதப் பழக்க வழக்க ஆசார அனுஷ்டானங்களின் பெயரால் எதையும், யாரும், யாரையும் கட்டாயப்படுத்துதலை அரசாங்கம் தடுப்பதுடன் அமைய வேண்டும்; சீர்திருத்தம், மாற்றம், முன்னேற்றம் ஆகியவற்றைக் கருதுகின்ற மக்களுக்கு அவர்களை அவ்விதம் செய்ய முடியாதபடி தடுப்பவற்றை அகற்றி, அனுமதியும் ஆற்றலும் அளிக்க வேண்டும்.

அதற்குமேற்பட்டு, அரசு தன்னுடைய படைபலத்தை எடுத்தெறிந்துவிட்டு, தன்னிடமுள்ள இதர சாதனங்களையெல்லாம் மக்களுடைய சிந்தனையைத் தூண்டி அவர்களுடைய அறிவு ஆற்றல்களை வளர்ப்பதற்கும், அதன் மூலம் உயர்நிலைகளையும், குறிக்கோள்களையும் அடைவதற்கும் உதவி, அவர்களுடைய சகல முயற்சிகளிலும் தாராளமாகப் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

காமராசருடைய திட்டம் அரசியல் போக்கில் இத்திருப்பத்தை உண்டு பண்ணுமா?

"எல்லா அதிகாரங்களையும் பலரிடம் கொடுத்தால் அவர்கள் சிலரையும், சிலரிடம் கொடுத்தால் அவர்கள் பலரையும் நசுக்குவார்கள். ஆதலால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படவேண்டும்."

—ஹாமில்டன்

* * *

"நம்மிடத்தில் உள்ள ஒன்றைக் கொண்டு இன்பம் அனுபவிக்கும்போது அதன் பெருமையை நாம் மதிப்பதில்லை; அது நம்மைவிட்டுப் பிரிந்தபிறகு அல்லது தொலைந்து போன பிறகு அதன் மதிப்பை உணர்ந்து வேதனைப்படுவோம். பிறகுதான் நம் உடைமைகளை மதிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து கொள்கிறோம்."

—ஷேக்ஸ்பியர்.

கவிதைப் பகுதி .

# திருவள்ளுவர்

— சிவா, எம். ஏ. —

## அன்னை

1. மன்னுயிர்மேல் கொண்டபெரும் அருளி னாலே
மன்பதையின் மக்களெல்லாம் உய்யு மாறும்
நன்னெறிபால் வையத்துள் வாழு மாங்கும்
நற்றாயின் மிகுபற்றும் பரிவும் கொண்டு
தன்னாடு மொழிமக்கள் மட்டும் மன்றித்
தரணியெல்லாம் இன்புறவே விழைந்த அன்பால்
பன்னலமும் பொதுளுமாறு பனுவல் யாத்த
பாவலராம் வள்ளுவனார் அன்னை யாவார் !

## தந்தை

2. திரிகின்ற சிற்றிளமைக் காலந் தன்னில்
தெளிகல்வி கேள்வியொடு ஒழுக்கம் நல்கி
உரியபுகழ்ச் சான்றோராய் மைந்தர் ஆக்கும்
ஒப்புரிய நெறிகூறி அவையம் எய்தித்
தெரிபொருளின் மொழிதிறனும் அறிவும் கேட்போர்
தேர்ந்தவரே எனப்புகழச் செய்தற் கேதாய்
அரிதாக் நாமடைந்த நல்ல தந்தை
அளப்பருஞ்சீர் வள்ளுவனார் என்று சொல்வேன்

## ஆசிரியர்

3. கல்லாமை அகற்றிநல்ல க்ல்வி ஈந்து
கேள்வியினால் செவிச்செல்வம் தந்து வாழ்வில்
கொள்ளுகின்ற வுடைமைகளாய் அடக்கம், அன்பு
கோதில்லாப் பேரொழுக்கம், ஊக்கம், பண்பு

நல்லறிவு மிகுந்தபொறை நாணும் கொண்டு
நாடுமருள் ஆள்வினையிற் பயிற்சி தந்து
வல்குடிமைப் பண்பாலே வையம் போற்றும்
வாழ்வுதரும் வள்ளுவர்ஆ சிரிய ராவார்

**மருத்துவர்**

4. மனக்கோட்டம் பேதைமை மடியு டைமை
மாசுடைய கூடாத ஒழுக்கம் நட்பே
இனநலமே இல்லாமை நன்றி யின்மை
இழிகயமை கல்லாமை மனந்துற வாமை
வினைத்தூய்மை இல்லாமை இன்னா சூது
கள்களவு கொடுங்கோன்மை நோய்கொண் டார்க்கு
மனநலத்தை உணர்வித்து மாச றுத்து
மனிதராக்கும் மருத்துவராய்த் தேவர் ஆவார்.

**உழவர்**

5. உளமென்னும் கழனிதன்னைப் பண்ப டுத்தி
உணர்வென்னும் செழித்தஎரு நிறைய இட்டு
வளந்தருநல் அறமென்னும் வித்துத் தன்னை
வாய்ப்பான இடம்நோக்கி நட்டுப் பின்னர்க்
கொளத்தக்க பொருளின்ப மழைநீர் பாய்ச்சிக்
குன்றாத ஒழுக்கமெனும் வேலி கோலி
வளமைநிறை பண்பென்னும் பயிர றுத்து
வாழ்வுயர்த்தும் வள்ளுவனார் உழவர் ஒப்பார்.

**நண்பர்**

6. உடுக்கையை இழந்தவேளை உதவி செய்தும்
உரியவழி இடித்துரைக்கும் நண்ப ராயும்
இடுக்கண்ணை அடுத்தடுத்து நேருங் காலை
இனியகூறி ஆற்றுவிக்கும் அன்ப ராயும்
ஒடுங்குமுளம் காதல்தனில் ஒன்றும் வேளை
உயிர்மயக்கி இன்பம்தரும் கேள்வ ராயும்
நடுங்குமூழின் வலிமாற்றும் ஞானி யாயும்
ஞாலத்தில் வள்ளுவனார் திகழ்தல் கண்டீர் !

# திருந்திடுவீர்!

—[ திருச்சி இராசன் ]—

1

பசுநெய்யும் பால்பழமும் கற்சிலைக்குப்
படைக்கின்றார் பக்திநெறி என்கிறார்கள்.
"பசி ஐயா! பிடிசோறு கொடுங்க"ளென்று
பரிதவிக்கும் ஏழைக்கொன் றீவதில்லை.
"அசைக்கவோ அழிக்கவோ முடிந்திடுமோ
ஆண்டவனே விதித்திட்ட தலைவிதியை?
அசையுமோ அவனன்றி ஓரணுவும்?
அவன்மாயை இவையெல்லாம்" என்கிறாரே!

2

கல்லுக்கும் மண்ணுக்கும் உருக்கொடுத்துக்
'கடவுளிது சாமியிது தெய்வமிது
எல்லார்க்கும் அருள்புரியும் தேவியிது'
எனப்பலவும் சொல்கின்ற 'பக்தர்'களின்
சொல்லுக்கு மறுப்பில்லை நம்புகின்றீர்
தொழுகின்றீர் அறிவிழந்து தாள்பணிந்தே!
அல்லல்து டைக்குமோ கற்சாமி?
அறிவெங்கே போயிற்று? சிந்தியுங்கள்!

3

நல்வாழ்வும் நல்லுயர்வும் நலம்யாவும்
நம்முடைய சளையாத உழைப்பினாலே
அல்லாமல் வேறெதனால் பெறமுடியும்?
ஆண்டவனா அருள்புரிவான்? துணிவுநெஞ்சில்
இல்லாத தாலவனை வேண்டுகிறீர்
இல்லாத ஆண்டவன்வந் தெங்கருள்வான்?
கல்லாது மூடர்களாய் இருந்திடினும்
கற்றபினும் மூடர்களாய் ஏனுள்ளீர்?

4

அந்தமிலா ஆதியிலா ஆண்டவனை
அன்றுமுதல் இன்றுவரை கண்டவர்கள்
எந்தஒரு நாட்டினிலும் இருந்ததிலை;
இருந்தார்கள், என்பதெலாம் உண்மையிலை;
சிந்தித்துப் பாருங்கள், தெய்வம்பல
செப்பித்திரிவதிலே என்னபயன்?
சிந்திப்பீர் எப்பொருளின் மெய்ப்பொருளும்
தெளிந்துணர்வீர் திருந்திடுவீர் திருந்திடுவீர்!

---

# விடியல் வேண்டாம்!

— தஞ்சை இளஞ்சித்திரன் —

1. ஒருதுணை இலார், முற்றும்
உழைத்திட இயலா நோயர்,
வருமிடி போக்க ஒல்லார்,
வறியவர், சோம்ப லுற்றோர்
பெருகிதா மேந்துங் காட்சிப்
பீழையை விடிந்தா லென்றன்
இருகணில் படவைக் கின்றாய்!
இரவே, நீ விடியல் வேண்டாம்!

2. வீணிறை யார வார
வினையொடு நிறைந்த கற்பாம்
பூணினை வீழ்த்தும், மென்மைப்
பொறுமையை இழந்தும், பெட்பு
நாணினை விடுத்தும் பெண்கள்
நடக்கின்ற நடையைக் கண்கள்
காணுதற் கில்லா நல்ல
இரவே, நீ விடியல் வேண்டாம்!

3. பொய்யுரை புகல்வார், சூதாற்
புறப்பொருள் கவர்வார், என்றும்
மெய்வருந் தாது மாற்றார்
மென்னியை நெறித்து வாழ்வார்.
வெய்வினை சூழ்ந்தன் பில்லா
வெந்தழ லுளத்தார் தந்தம்
செய்வினை மறந்து தூங்கும்
இரவே, நீ செல்லல் வேண்டாம்!

4. "ஊழ்பயன் எல்லாம்" என்றே
உலகினை ஏய்க்கும் புல்லர்,
சீழ்விடு புண்ணாய் நாட்டின்
சீர்மையைக் குலைப்பார், கள்ளக்
காழ்முளைத் துளமாட் கொண்டார்
கையுறை பெறுவார் தம்மின்
வாழ்முறை மறந்து தூங்கும்
இரவே, நீ வழுவல் வேண்டாம்!

5. குறியிலார் வாழ்வில்; மாற்றார்க்
குறைகாண் புராயி ருப்பார்,
நெறியிலா துழல்வார், நேர
நிலையின்றி, அளவு மின்றி
அறிவிலா துண்ட தாலே
அழகிலா துடல்உ ருட்டும்
வெறியரைக் காணற் கில்லா
இரவே, நீ விடியல் வேண்டாம்!

# பொருளாதார மந்தம்

[ டாக்டர் எம். ஜே கே. தவராஜ், M. A., Ph. D. ].

*[பிற மொழிகளில் பல கலைகளைப் படித்து இன்புறலாம்; பயன் பெறலாம். இது சுயநலம். இந்த இன்பத்தையும் பயனையும், அவரவர் தாய்மொழியில் உருவாக்கி, அம்மொழியை மட்டுமே உணர்ந்தவர்களும் பயன்பெறும்படி செய்வதே சிறந்த பொதுத்தொண்டு. கற்றவர் செய்யக் கூடிய பெருந் தொண்டு இது ஒன்றுதான். ஆனால் இதற்கு இருமொழித் திறம் வேண்டும். பொருளாதாரம் மனித சமுதாயத்தின் உயிர் நாடி. நாட்டுப் பொருளாதாரமும் மக்கள் வாழ்க்கையும் எப்படிப்பிரிக்க முடியாமல் பின்னிக்கிடக்கின்றன என்பதைத் தமிழ்மட்டும் படித்தவர்கள் உணரவேண்டாமா? இதற்கான நூல்கள், கட்டுரைகள் தமிழில்(கடலில் எறிந்த) கடுகு அளவுக்கே உண்டு. பொருளாதார மந்தம் என்றால் என்ன? அதற்கு ஆட்சியாளர் எந்த அளவுக்குப் பொறுப்பாளிகள்? குடிமக்கள் எந்த அளவுக்குப் பொறுப்பாளிகள்? — இவை போன்ற சிக்கல்களை எளிய தமிழில் ஆராய்கிறார், பொருளாதார நிபுணரான இக்கட்டுரையாளர். இருமுறை—மும்முறை படித்தால்தான் பலருக்குப் புரியும். ஆனால் படித்துத்தீர வேண்டியது.]*

பகுத்தறிவு பொங்கி வரும் காலமிது. விஞ்ஞானத்தின் ஒளிக் கதிர்கள் அறிவுத்துறையின் ஒவ்வொரு அங்கத்திலும் பட்டுப் படருவதைப் பார்க்கிறோம். வைத்தியத் துறை அதற்கு விதிவிலக்கல்ல. ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஒரு லூயி பாஸ்டர் தோன்றவில்லை. கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்துகளோ தடுப்புமுறைகளோ கண்டுபிடிக்கப் படவில்லை. எனவே மனித சமுதாயம் அப்போதைக்கப்போது அம்மை, வாந்திபேதி, பிளேக் போன்ற கொள்ளை நோய்களுக்கு இலக்காகி கோடிக் கணக்கில் மடிய நேர்ந்தது. நோய் தோன்றக் காரணமென்ன, எவ்வாறு அது பரவியது என்று அறியாத நிலையில் அதைத் தடுத்து நிறுத்தவோ வேரறுக்கவோ இயலாது தவித்தனர் மடமையில் மூழ்கியிருந்தோர் பலர் மாரியம்மனுக்குக் கொடை கொடுத்தனர். மாதா கோவிலில் மந்திரித்துக் கொண்டனர். முடிவில் விஞ்ஞானத்தின் துணைகொண்டே அவற்றை முறியடிக்க முடிந்தது. இன்றும் "அம்மை குத்திக் கொள்ள மாட்டேன். ஊசி போட விடமாட்டேன், இயற்கையிற் சிறந்த

வைத்தியன் இல்லை; பாவத்தின் பயனே பிணி!.........'' என்றெல்லாம்பலவாருகப்பிதற்றி விஞ்ஞானத்தின் மேன்மையை அவமதிக்கும் பலர் நம்மிடையே இருக்கத்தான் செய்கிருர்கள். இருப்பினும் கொள்ளை நோய்கள் பல நம்மைவிட்டு அடியோடு மறைந்து விட்டன. சில மறைந்து வருகின்றன. எஞ்சியனவும் ஆங்காங்கே தோன்றும் போதே பற்றிப் பரவாமல் தடுத்து நிறுத்தப்படுகின்றன. நோய்களை முற்றிலும் வேரறுத்து விட்டோம் என்று சொல்வதற்கில்லை. எனினும் அத்திக்கில் பெரிதும் முன்னேறியிருக்கிருேம் என்ருல் மிகையாகாது.

அதைப்போலவே முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பல பீடைகள் வாட்டி வருகின்றன. அவற்றுள் பொருளாதார மந்தமே மிகக்கொடியது. இது முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கே உரித்தானது. அப்பொருளாதாரத்தின் வளர்ச்சி எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. மேடு பள்ளம் நிறைந்தது. சில் லாண்டுகள் செல்வம் பொங்கும். அடுத்துச் சுணக்கம் ஏற்படும். இவ்வாறு சகடக்கால்போல் ஏறி இறங்கி வரும் வாணிபச் சுழலின் ஒரு பகுதியே "பொருளாதார மந்தம்" எனப்படுவது. மந்தத்துக்கும் செரிக்காமைக்கும் (அஜீரணத்துக்கும்) நெருங்கிய உறவு உண்டு. உண்ட உணவு செரிக்காமல் வயிற்றுக்குள் ஒதுங்கி நிற்பதையே "அஜீரணம்" என்கிருேம். உண்பதிலே ஒழுங்கீனம் இருந்தால், அல்லது கடின உணவை உட்கொண்டு குடலுக்கு அளவுக்கு மிஞ்சி வேலை கொடுத்தால், அல்லது உள்ளே உள்ள உறுப்புக்களும் சுரப்பிகளும் ஒழுங்காக வேலை செய்ய மறுத்தால், அஜீரணம் ஏற்படும். இத்தகைய ஒதுக்கத்தால் வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, அசதி, சோம்பல் போன்ற பல தொல்லைகள் விளைவதுண்டு. அதைப்போலவே முதலாளித்துவப் பொருளாதாரத்திலும் ஆக்கிய பண்டங்களைப் பணம் கொடுத்து வாங்கி அனுபவிக்கப் போதிய சக்தி இன்மையால் பொருளாதாரம் பொலிவிழந்து, சோர்வுற்று, அசதியாகப் படுத்து விடும். பொதுவாக, மந்தம் பிடித்த பொருளாதாரத்தில் வருவாய் குன்றும்; விலைவாசிகள் படுக்கும்; வேலை இன்மை பெருகும். பொருட்களிருக்கும்; ஆனுல் வாங்க ஆளிருக்காது. இயந்திரங்கள் சோம்பிக் கிடக்கும்; ஆனுல் உற்பத்தியைப் பெருக்குங்கள் என்ற ஆணை பிறக்காது. ஆக்கிய பண்டங்களை அழிப்பர் ஒரு சிலர்; உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி வாடுவார் வேறு சிலர்.

## மந்தம் ஏன்?

இத்தகைய மப்பும் மந்தமும் தோன்றக் காரணம் என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் பலர், நம்மிடையே உள்ள " நாட்டு வைத்தியர் "களைப் போன்றே பல வேடிக்கையான காரணங்களைக் கற்பிக்க முற்பட்டனர்.

"எட்டுக் கிரகங்களும் ஒன்று கூடுவதால் உலகமே அழியப் போகிறது" என்று பயமுறுத்திய பண்டிதர்களைப் போன்று பொருளியற் புலவர் சிலர் கதிரவனில் காணப்படும் கரும்புள்ளிகளுக்கும் வயலிலே வளரும் பயிர் பச்சைகளுக்கும் தொடர்பு உண்டு என்று சாதிக்க முற்பட்டனர். புள்ளிகளின் எண்ணிக்கை பெருகினுல் ஒளிக்கதிர்களின் வெம்மை குன்றும்; கார் முகில் கிளம்பாது; போதிய மழை

பொழியாது; பயிர் செழிக்காது; மக்களது உடல் வன்மை குன்றும்; ஆதலின் பொருளாதார மந்தம் உண்டாகும், என்பது அவர்களது வாதம்!

ஏனையோரும் யானை பார்க்கப் போன குருடர்களைப் போன்று அரை குறையான விளக்கங்கள் வழங்க முற்பட்டனர். அளவுக்கு மிஞ்சிய முதலீடுதான் மந்தத்துக்குக் காரணம் என்றனர் ஒரு சிலர். இலாப வேட்கைகொண்ட முதலாளிகள் பித்துப் பிடித்தவர்களைப் போன்று, இலகுவான தொழில், கனரகத் தொழில், போக்குவரத்து போன்ற ஏதாவது ஒரு துறையில் தங்கள் முதலைக்கொண்டு குவிப்பர்; அதன் விளைவாக வெளிவரும் பொருட்கள் தேவைக்கு மிஞ்சியதாகி விடும்; ''எனவேதான் மந்தம்'' என்பது அவர்களது வாதம். அதைப் போன்றே ஆக்கப்படும் பொருட்களை வாங்கி அனுபவிக்காமல் கஞ்சத்தனம் பண்ணுவதனால்தான் பொருட்கள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன என்று பலர் வலியுறுத்தி வந்தனர்.

மற்றொரு சாரார் தாராளமாகப் பணப்பெருக்கம் செய்துவரும் பாங்குகள் திடீரென கண்டிப்பான கடன் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினால் பண வறட்சி ஏற்படும்; முதலீடு தடைப்படும்; வாங்கும் சக்தி குன்றும்; அதன் பயனே பொருளாதார மந்தம் என்பர். அதையொட்டியே வேறு சிலர் பணத்தைப் பதுக்கி புழக்கத்திலிருந்து முடக்குவதனால்தான் பண வரட்சி ஏற்பட்டு விலைவாசிகள் சரிகின்றன; இலாபம் குறைகிறது; முதலீடு படுக்கின்றது; வேலையின்மை பெருகுகிறது; வருவாய் குன்றுகின்றது...என்று விளக்கலாயினர்.

வணிகரும், தொழிலதிபரும் வருங்காலம் விளக்கமானது என்று எண்ணினாலல்லவா தங்கள் தொழில்களில் துணிவு காட்டுவர்? அவ்வாறின்றி தெளிவற்ற எதிர்காலத்தைப்பற்றிய அச்சமோ சந்தேகமோ அவர்களுள்ளத்தில் குடிபுகுந்தால் தங்கள் தொழில்களில் முனைவது எப்படி? முனைப்பில்லாத முதலாளித்துவம் முன்னேற முடியுமா? எனவேதான் தத்தித் தயங்கி இயங்குகின்றது என்று உளநூல் வாயிலாக விளக்க முற்படுவர் வேறு சிலர். எதிர்காலப் போக்கைப்பற்றிய உறுதி இல்லாத நிலையில் மக்கள் பணத்தை முதலீடு செய்யவும் மனமில்லாமல், செலவிடவும் துணியாமல், ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர். அதனால் பணத்துக்கான தேவை பெருகுகின்றது. அத்தேவைக் கேற்ப பணத்தை உவந்து அளிப்பாரின்மையால் பணத்தின் மதிப்பு உயருகிறது. வட்டி விகிதம் சட்டென்று ஏறுகிறது. கடன் வாங்கி முதலீடு செய்பவர்கள் சோர்வுற்றுப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி போடுகின்றனர். அதன் விளைவாக வருவாயும் வேலையும் குன்றுகின்றன. பொருளாதாரம் கொஞ்சங் கொஞ்சமாக மந்தப்படுகுழிக்கு இழுத்துச் செல்லப்படுகின்றது என்பது அவர்கள் தரும் விளக்கம்.

## மார்க்ஸ் கருத்து

முதலாளித்துவ முறையைத் துருவி ஆராய்ந்த கார்ல் மார்க்ஸ் அதில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிக்கு மூன்று காரணங்கள் காட்டுகிறார். இலாபத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் முதலாளிகள். திரட்டிய முதலை மேன்மேலும் ஈடுபடுத்திக் கொழுக்க வைப்பதே முதலாளித்துவத்தின்

அடிப்படைச் சட்டம். அதன் பயனுக எந்திரங்களும் கருவி களும் பெருகுகின்றன. சுரண்டல் அதிகரிக்கின்றது. ஆனல் அதே சமயத்தில் மனித உழைப்புக்குப் பதிலாக எந்திரமும் புகுத்தப்படு கின்றது. சுரண்டும் வாய்ப்புச் சுருங்குகின்றது. எனவே சுரண் டிய உழைப்பு முதலீட்டின் ஒரு சிறு பகுதியாக ஒடுங்குகின்றது. இவ்வாறு இலாப விகிதம் குன்று வதால் முதலாளித்துவப் பொரு ளாதாரத்தை நெருக்கடி முற் றுகை யிடுகிறது, என்ருர் மார்க்ஸ்

உற்பத்தியில் ஏற்படும் முரண் பாடுகளாலும் நெருக்கடி உண் டாகலாம். தேவை இல்லாத ஒன்றை உற்பத்தி செய்தால், அல்லது தேவைக்கு மிஞ்சி உற் பத்தி செய்தால் எப்படி அவ ற்றை விற்க முடியும்? அத்துடன் முதற்கருவிப் பொருட்களை எக் கச்சக்கமாகப் பெருக்கினல் எச்ச வல்லமை மிஞ்சுவது எதிர்பார்க் கக் கூடியதுதானே? மேலும், முதலாளித்துவப் பொருளாதா ரத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வு, வாங்கும்சக்தியை வர்ட்டி விடும் என்பது அவரது துணிபு. முதலாளியோ முதலைப் பெருக்கு வதிலேயே கருத்தா யிருக்கிருன். தொழிலாளிக்கோ போதிய வரு வாய் இல்லை. பொருட்களை வாங் கத் தவிக்கிருன். ஆனல் வாங் கும் சக்தி இல்லை. இந்நிலையில் விற்பனை குன்றி மந்தம் ஏற்படா மல் என்ன செய்யும் என்பதும் அவரது கேள்வி.

மேலே குறிப்பிட்ட கோட்பாடு களுள் எவ்வெவை எத்துணைப் பொருத்தமானது என்ற ஆராய் ச்சியில் இங்கு ஈடுபட அவசிய மில்லை. இருப்பினும் மந்தம் ஏற் படுவதற்குரிய மூல காரணங் களைத் தொகுத்து அவற்றைக் களைவதற்கான வழி வகைகளை ஆராய்வது பயன் தருவதாகும்.

முதலாளித்துவத்தின் வரலாற் றைப்புரட்டினல் அதில் தோன்றி வளர்ந்து வந்துள்ள முரண்பாடு களின் முழுத் தன்மையையும் நன்கு உணர முடியும். ஆடம் ஸ்மிதத்தின் பரம்பரையில் வந்த தொன்மைப் பொருளாதாரத் துறையினர் அரசாங்கத் தலையீடு மட்டும் இல்லாம லிருந்தால் பொருளாதாரத்தில் நெருக்க டியே ஏற்படாது என்று புகட் டினர். அதை யொட்டித்தான் ஜே. பி. சே. என்பார் பொரு ளாக்கத்தில் அதன் தேவையும் அடங்கி யிருக்கிறது என்று வலி யுறுத்தினர். அதன்படி கூலியும் லாபமும் சேர்ந்ததே உற்பத்திச் செலவு. எனவே கூலியின் வாயி லாகவும் லாபத்தின் வாயிலாக வும் ஈட்டிய வருவாயைக் கொண்டு ஆக்கிய பொருட்கள் அனைத்தையும் வாங்கி விடலாம் என்பது அவரது கோட்பாடு. இக்கோட்பாட்டினுள் தங்கு தடையற்ற போட்டி, பதுக்கல் இன்மை, போன்ற பல அடிப் படை ஆதாரங்கள் அடங்கி யுள்ளன.

## சோவியத் யூனியன்

1963 ஜுலையில் ருஷ்யாவின் மக்கள் தொகை 22 கோடியே 50 லட்சம். இந்நாட்டில் கல்வி பயில்வோர் எண்ணிக்கை 610 லட்சம்; பல்கலைக் கழகங்களி லும், உயர்நிலைப் பள்ளிகளிலும் படிப்பவர் தொகை 30 லட்சம்; ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் பொறிஇயலாளர் கள்,(எஞ்சினியர்) எண்ணிக்கை 120,000. (இது அமெரிக்கா வைப் போல் மூன்று மடங்கு மிகுதி.)

ஆனால் காலப் போக்கில் கூலி உயர்வு வேண்டும், வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும், வேலை செய்வதற்குரிய சூழ்நிலையை மேம்படுத்த வேண்டும் என்ற பல கோரிக்கைகளின் அடிப்படையில் தொழிற்சங்கங்கள் தோன்றின. அச்சங்கங்களை முளையிலேயே கிள்ளி எறிவது, முடியாது போனால் அவற்றை உடைத்தெறிவதற்கான உபாயங்களைக் கண்டுபிடித்து முறியடிப்பது என முதலாளிகள் கங்கணங் கட்டினர். அரசாங்கமும் தொழிலாளரின் 'நியாயமான' நலன்களைப் பாதுகாத்து 'அக்கிரமங்களை' அடக்கி ஒடுக்கும் முறையில் பொருளாதாரத்தில் தலையிடத் தொடங்கியது. அத்துடன் போக்குவரத்து, பொது வசதிகள், கனரகத் தொழில்கள் ஆகியவற்றில் தலை தூக்கி வந்த சர்வாதீன சக்திகளை மட்டம் தட்ட வேண்டும் என்றும் பொது மக்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். இவ்வாறு தொன்மைப் பொருளாதாரத் துறையினர் கொண்டிருந்த அடிப்படை ஆதாரங்கள் ஒவ்வொன்றாகத் தகர்ந்து நொறுங்கி வந்தன.

## முதலாளித்துவத்தின் நற்பயன்

முதலாளித்துவப் பொருளாதாரம் அதற்கு முன்னாலிருந்த நிலப்பிரபுத்துவம், அடிமைத்தனம் ஆகிய பொருளாதார அமைப்புகளைக் காட்டிலும் முற்போக்கு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. முதலாளித்துவத்தின் கீழ் முதலீடு அதிகரித்தது; தொழிலறிவு பெருகியது; உழைப்பில் சிக்கனம் உண்டாக்கக் கூடிய தொழில் முறைகளும் நிர்வாக அமைப்புகளும் புகுந்தன; ஆக்க சக்தி அதிகரித்தது; நாட்டு வருவாயும் வளர்ந்தது. போக்குவரத்துப் பெருகியதால் சந்தைகளின் எல்லைகள் அகன்று விரிந்தன. அயல்நாட்டு வாணிபம் என்றுமிலா மிடுக்குடன் ஓங்கி வளர்ந்தது. அதன் பயனாகச் சுபிட்சமும் மந்தமும் நாடு விட்டு நாடு தொத்துவதற்கு வாய்ப்புப் பிறந்தது. லாப வேட்கையும் ஆதிக்க வெறியும் கொண்ட மூலதனம் இடம் பெயர்ந்து அண்டை அயல் நாடுகளுக்குள் புகுவதும் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

## விவசாயத்தின் நிலைமை

இவ்வாறு பொருள் வளம் பெற்றுவந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களில் பங்கீடு சீராக இல்லை. ஒருபுறம் விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையே முரண்பாடு வளர்ந்தது. விவசாயத்திலும் புதுக்கருவிகளும் புதுமுறைகளும் புகுந்தன. முதலீட்டுக்கென கடன்பட்ட விவசாயிகள் கடன் பளுவால் அழுந்தினர். முதல் திரட்ட இயலாத பலர் நிலத்தை விற்றுவிட்டுப் பாட்டாளிகளாயினர். எனவே நிலத்திலும் ஏற்றத் தாழ்வுகள் தோன்றின. அதே சமயத்தில், விவசாய உற்பத்தி நெகிழ்ச்சி உடையதாக இல்லை. அத்துடன், தொழில், போக்குவரத்து, வாணிபம் ஆகியவற்றில் வேரூன்றிவந்த சர்வாதீன சக்திகள் வாணிப மாற்றுவிகிதத்தை விவசாயத்துக்குப் பாதகமாகத் திருப்பிவிட்டன. எனவே நாட்டு வருவாயில் விவசாயத்துக்கு உரிய பங்கு கிட்டவில்லை. விவசாயத்தை நம்பி வாழ்ந்து வந்த பகுதிகள் பின்தங்கிப் போயின. தனி நபர் வருவாயில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வு அதை விடக் கணிசமாக இருந்தது.

தொழில்களின் ஆக்கமும் சீராகப் பகிரப்படவில்லை. தொழி

லாளியின் ஆக்க சக்தி உயர்ந்ததெனினும் அவனது மெய் வருவாய் அதற்கேற்ப அதிகரிக்கவில்லை. அதன்பயனுகத் தொழில்களின் மூலம் கிடைத்த வருவாயில் முதலாளிகளின் பங்கு அதிகரித்தது. தொழில்களின் சர்வாதீனப் போக்கும் தொழிலாளர் இயக்கத்தின் பலவீனமுமே இத்தகைய ஏற்றத் தாழ்வுக்கு மூல காரணம். அத்துடன் எந்திரங்களின் வரவால் வேலை இழந்தோரின் எண்ணிக்கை பெருகி வந்தது. ஆதலின் நாட்டு வருவாயில் தொழிலாளரின் பங்கு விகிதம் குறைந்து போயிற்று. வேறுவிதமாகக் கூற வேண்டுமாயின், வருவாயானது செலவிடத் துடிக்கும் தொழிலாளிகளின் கையிலிருந்து மீதம் பிடிக்கக் கூடிய முதலாளிகளின் கைக்கு மாறிவந்தது. அதன் விளைவால் நாட்டு வருவாயில் சேமிப்பின் விகிதம் அதிகரித்தது; நுகர்ச்சியின் பங்கு குறைந்து வந்தது.

சேமிப்பை முதலீடு செய்யக் கூடிய வாய்ப்புகளும் தேய்ந்து கொண்டே வந்தன. தொழிற் புரட்சியால் பிறந்த வேகம் கொஞ்சங் கொஞ்சமாகத் தணிந்தது. புதிய பல கண்டுபிடிப்புகள் அப்போதைக்கப்போது புத்துயிரூட்டி வந்தன வெனினும் மொத்தத்தில் திரண்டுவந்த மூலதனத்துக்கேற்ற வாய்ப்புகள் உருவாகவில்லை. அத்துடன் உழைப்பாளரின் மெய்வருவாயும் குன்றிவரவே மக்களின் வாங்கும் சக்தி குறைந்தது. தேவை யில்லாத போது மேன்மேலும் முதலீடு செய்வது எப்படி? முதலீடு செய்தாலும் இறுதி நிலைத்திறன் (Marginal efficiency of Capital) விளக்கமுறுமா? எனவே முதலீடு செய்யக் கூடாத சேமிப்பு சோம்பிக் கிடந்தது. முதலீடு செய்பவர்களும் உற்சாகமிழந்து வந்தனர்.

முதலாளித்துவ நாடுகள் பலவும் ஒன்ருேடொன்று கழுத்தறுப்புப் போட்டியில் ஈடுபட்டு வந்தன. ஒவ்வொரு நாடும், சுங்கச் சுவர் எழுப்பித் தன்னுட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது, நன்கொடை வழங்குவது, செலாவணிகளைத் தரமிழக்கச் செய்வது, நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளைப் புகுத்துவது, இறக்குமதியைத் தடுப்பது, விலைபேத முறைகளை மேற்கொள்ளுவது — போன்ற - உபாயங்களால் பிறரை வறியராக்கித் தான் மட்டும் கொழுக்க விரும்பியது. இச்சூழ் நிலையால் பொருட்களுக்கு இருந்து வந்த உலகத் தேவை போதிய அளவில் வளருவதாக இல்லை. இதிலிருந்து பொருளாதார அமைப்பில் தோன்றும் முரண்பாடுகளின் காரணமாக ஆக்கிய பண்டங்களை உட்கொள்ளுதற்குரிய தேவை இல்லாமல் போயிற்று.

## லாப வேட்கை

லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் எந்த முதலாளியும் முதலீடு செய்ய முன்வரமாட்டான் என்பது தெளிவு. உற்பத்தி தளராமல் வளருவது எதிர்காலத் தேவையைப்பற்றி முதலாளி என்ன நினைக்கிருன் என்பதையே பெரிதும் பொறுத்திருக்கிறது. இன்றுள்ள தேவை குன்றினுல், அல்லது செலவினங்கள் ஆக்க சக்தியைக் காட்டிலும் வேகமாக முன்னேறினுல், எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய லாபத்தைப்பற்றிய நம்பிக்கை தளரும். எனவே சேமிப்பு முதலீடு செய்யப்படாமல் ஆங்

காங்கே தேங்கி நிற்பதன் காரணமாக வாங்கும் சக்தி குன்றி வருகின்ற நிலையில் எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையும் தகர்ந்தால் பொருளாதாரம் மந்தப் படுகுழியை நோக்கி விரையும் என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான் போதாத் தேவையும், தளர்ந்த நம்பிக்கையுமே பொருளாதார மந்தத்துக்கான மூலகாரணங்கள் என்று கீன்ஸ் பிரபு "வேலை, வட்டி, பணம் பற்றி பொதுக்கோட்பாடு" என்ற தமது நூலில் வலியுறுத்தியுள்ளார்.

## மந்தத்துக்கு மருந்து

பொருளாதாரத்தில் ஒருவரது செலவு மற்றவரது வரவாக அமைவது கண்கூடு. வருவாயை நுகர்ச்சி, சேமிப்பு என்று இரு கூறாகப் பிரிக்கலாம். நுகர்ச்சியால் நேரடியாகப் பொருட்களுக்குத் தேவை ஏற்படுகிறது. ஆனால் சேமிப்பு எப்போதும் நேரடியாக முதலீடு செய்யப்படுவதில்லை. பெரும்பாலும் சேமிப்போர் ஒரு சாராராகவும் முதலீடு செய்பவர் மற்றொரு சாராராகவும் இருப்பர். அவர்கள் ஒரே விதமான காரணங்களால் உந்தப்படுவதுமில்லை. ஒரே குறிக்கோளை முன்வைத்து இயங்குவதுமில்லை. பொதுவாக வருவாய் உயர்ந்தால் சேமிப்பு அதிகரிக்கும். ஆனால் முதலீடு செய்பவன் லாபத்தையே எதிர்நோக்கியிருக்கிறான். முதலீட்டின் இறுதி நிலைத்திறன் வட்டி விகிதத்தைவிட அதிகமாக இருந்தால் லாபம் கிடைக்கும். முதலின் இறுதி நிலைத்திறனோ முதற்கருவிப் பொருட்களுக்கு உள்ள அருந்தல், அவற்றை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு, எதிர்காலத்தில் அவற்றுக்கு இருக்கக் கூடிய தேவை ஆகியவற்றைப் பொறுத்தது. 'ஆனால் நாளை நடப்பதை யாரறிவார்' என்ற வாசகம் எதிர்காலத்தைப்பற்றிய ஊகங்களுக்குமுற்றிலும் பொருந்தும். இதிலும் முதலீடு செய்பவனின் மனோபாவமே முக்கியத்துவம் வகிக்கிறது. பெரும்பாலான முதலாளிகள் நட்டம் வந்துவிடுமோ என்ற பயத்தால் நடுங்கத் தொடங்கினால் மேலும் முதலீடு செய்வதை நிறுத்திவிடுவர். தேய்ந்துவரும் எந்திரங்களைக்கூட பின்னால் புதுப்பித்துக்கொள்ளலாம் என்று ஒத்தி போடுவர்.

எனவே முதற்கருவிப் பொருட்களுக்குள்ள தேவை சட்டென்று கீழேவிழும். அதன் பயனாக ஆலைகள் பல மூடப்படும். தொழிலாளர் பலர் வேலை இழப்பர். அவர்

---

### மடமையால் மரணம்

"மூட பக்தியினால் பாமர மக்களுக்கு விளையும் கேடுகள் யாவும், மதவாதிகளாலும், மதத் தலைவர்களாலும் கட்டிவிடப் பட்ட பொய்க் கதைகளால் என அறிக. இக்கதைகளை நம்பியே பில்லி சூனியம், பேய் பிசாசு, திருஷ்டி முதலிய மூட நம்பிக்கைகளில் நம்பிக்கை வைத்து, நோய்களுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்யாமல் கடவுள் அல்லது தலைவிதி என்று சொல்லிக் கொண்டு சீதபேதி, வயிற்றுப்போக்கு, பாரிச வாய்வு, வயிற்றுவலி, இழுப்பு, மூளைக்கோளாறு, அம்மை, கால்ரா — போன்ற நோய்களுக்கு இரையாகி, கோடிக் கணக்கில் இறந்து போகின்றனர்."

—ம. சிங்காரவேலர்
("கடவுளும் பிரபஞ்சமும்" பக்கம்-55)

களது வருவாய் அடைத்துப் போகவே வாங்கும் சக்தி வறண்டு போகும். எனவே நுகர்வுப் பொருட்களுக்கு உள்ள தேவை சுண்டும். வணிகரும் தங்கள் கையிருப்பிலுள்ள சாமான்களைக் குறைத்துக் கொள்வர். வேலையில் ஒட்டிக் கொண்டிருப்பவரும் செலவைச் சுருக்க விரைவர். பணம் புரளாமல் பதுங்கி ஒதுங்கும். அதன் பயனாகத் தேவை மேலும் வற்றிப்போகும். விலைவாசிகள் தலை குப்புறச் சரியும்... இவ்வாறு வேலையின்மை, வருவாய் வரட்சி, போதாத் தேவை ஆகியன ஒன்றையொன்று பற்றியவாறு மந்தம் படுகுழியின் அடிமட்டத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கும். சுருங்கக் கூறின், ஒருபுறம் பணம் செலவு செய்ய இயலாதவர்களின் கையில் சிக்கிச் செயலற்றுக் கிடக்கிறது. மறுபுறம் வேலையிழந்து நிற்பவர்கள் வாங்கும் வசதியின்றி வாடுகின்றனர். எனவே, உள்ளவர்களிடமிருந்து இல்லாதவர்களின் கைக்குப் பணத்தை மாற்றினால் பிரச்சினை தீர வழியுண்டு என்பது தெளிவு.

## வருவாயும் செலவும்

ஒருவரது செல்வு மற்றவரது வரவாகும் என்று குறித்தோம். நாட்டிலுள்ள ஒவ்வொருவரது வருவாயும் இவ்வாறு பிறரது செலவையே சார்ந்திருக்கிறது. இதிலிருந்து நாட்டிலுள்ள மொத்தச் செலவும் நாட்டு வருவாயும் சமநிலையில் இருக்கும் என்பது புலனாகும். ஆதலின் நாட்டு வருவாய் குன்றாமல் பாதுகாக்க வேண்டுமாயின் நாட்டிலுள்ள செலவினங்கள் சுருங்காமல் தடுக்கவேண்டும். பொருளாதாரம் முழுவதையும் எடுத்துக்கொண்டால் செலவினங்களைத் தனியாரின் நுகர்ச்சி, தனியாரின் முதலீடு, அரசாங்க நுகர்ச்சி, அரசாங்க முதலீடு, அயல்நாட்டு முதலீடு என்று ஐந்து வகையாகப் பகுக்கலாம். மந்தத்தின் அறிகுறிகள் தென்படும்போது முதலாவது தனியாரின் முதலீடும் தனியாரின் நுகர்ச்சியும் குறைவுபடும். அதே சமயத்தில் தனியாரின் சேமிப்பும் பாங்குகளில் அவர்கள் வைப்பாகப் போட்டு வைத்திருக்கும் தொகையும் குவியும். இவ்வாறு தனியாரின் செலவினங்கள் குன்றிச் சேமிப்பு செம்முவதால் பலரது வருவாய் அடைபடும். இக்குறைவை ஈடுசெய்ய வேண்டுமானால் அரசாங்கச் செலவை அதிகரிக்க வேண்டும்; அல்லது அயல்நாட்டு முதலீட்டைப் பெருக்கவேண்டும்.

இறக்குமதியை மிஞ்சிய ஏற்றுமதி, இன்சூரன்ஸ், கடற்கடவு, கடனுக்கு வட்டி போன்ற சேவைகளின் வாயிலாகக் கிடைக்கும் நிகர வருவாய் ஆகிய வரவினங்களைக் கொண்டே அயல்நாட்டு முதலீட்டை அதிகரிக்க முடியும். இதைப்பற்றி இங்கு நாம் விவரிக்க அவசியமில்லை.

## வாங்கும் சக்தி வளர...

அரசாங்கச் செலவுகளை நடப்புச் செலவுகள், முதலினச் செலவுகள் என்று பகுக்கலாம். நடப்புச் செலவுகளில் நிர்வாகம், ராணுவம், கல்வி, சுகாதாரம், ஏனைய பொதுநலச் செலவுகள், கடனுக்கு வட்டி முதலியன அடங்கும். முதலினச் செலவுகளில் முதலீடும் கடன் வழங்குதலுமே முக்கியமானவை. மந்தத்தைப் போக்க வேண்டுமாயின் மக்களது வாங்கும் சக்தியைப் பெருக்கவேண்டும். வேலை இழந்தோருக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் அவர்களது வாங்கும் சக்தியை நேரடியாகப் பலப்

படுத்தலாம். அத்துடன் முதியோருக்கு உபகாரச் சம்பளம், சமூகப்பாதுகாப்பு, குழந்தைகள் தாய்மார் பராமரிப்பு, கட்டாய இலவசக் கல்வி, இலவச வைத்திய வசதி போன்ற பொதுநலச் சேவைகளிலும் அரசாங்கம் ஏராளமாகச் செலவிட வாய்ப்பு உண்டு. ரோடு போடுதல், வீடு கட்டுதல், ஆடுகளம் அமைத்தல், பூங்கா உருவாக்குதல், காடு வளர்த்தல், மண்ணரிவைத் தடுத்தல் போன்ற பொதுநலப் பணிகள் முதலினத்தைச் சாரும். பெரும்பாலும் அரசாங்க முதலீட்டை நேரடியாக இலாபம் கிடைக்கக்கூடாத துறைகளிலேயே செலுத்துவர். லாபகரமானவற்றைத் தனியாரிடம் விட்டுவிடுவதே பொருத்தமானது என்பது முதலாளித்துவ அரசாங்கங்களின் நம்பிக்கை.

''பொருளாதாரத்தை மந்தத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவுகள் கட்டாயம் லாபகரமானதாகவோ பொதுநலம் பற்றியதாகவோ இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. வெட்டிச் செலவானாலும் செலவிட்டால் போதுமானது. பிரமிடுகள், கோவில்கள், கோபுரங்கள், கோட்டை கொத்தளங்கள், பள்ளிவாசல்கள், பகோடாக்கள்...... எதுவாயினும் சரி பணத்தை அள்ளிவீசி மக்களது வாங்கும் சக்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருந்தால் போதுமானது; எனவேதான் நிலக்கரிச் சுரங்கங்களைப் போன்று ஆழமான பள்ளங்களைத் தோண்டி அதன் அடியில் பணத்தைப் புதைத்து மண்ணால் மூடிப் பின் அவற்றைத் தோண்டி எடுப்பதற்கு ஏற்பாடு செய்தாலும் பரவாயில்லை; வேலைக்கு வாய்ப்பும், வாங்கும் சக்தியும் வளர்ந்தால் போதுமானது — என்றெல்லாம் கீன்ஸ் பிரபு கூறினார் போலும்!! அதையொட்டியே சமீபகாலத்தில் அட்லாண்டிக் அரசாங்கங்கள் பல ராணுவச் செலவுகளை பெருத்த அளவுக்கு ஏற்றி வைப்பதன் மூலம் தங்கள் பொருளாதாரங்கள் சரிந்து விழாமல் முட்டுக்கொடுத்துப் பாதுகாத்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வரவும் செலவும்

இவ்வாறு பல்கிப் பெருகும் அரசாங்கச் செலவை சரிக்கட்டுவது எப்படி? என்ற கேள்வி எழுவது இயல்பு. நெடுங்காலமாக வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்வது ஊதாரித்தனம் என்ற எண்ணம் நாடாளுபவரிடையே குடிகொண்டிருந்தது. அதன்படி வரவையும் செலவையும் எப்போதும் சமநிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. இக்கொள்கையின் கீழ் பொருளாதார மந்தம் ஏற்படும்போது அரசாங்கச் செலவை அதிகரிப்பது என்பது இயலாத காரியம். மாறாக, அரசாங்கச்செலவை சுருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஏனெனில் மக்களது வருவாய் சுருங்கினால் அதைச் சார்ந்திருக்கும் அரசாங்க வரவினங்களும் சுருங்குவது தவிர்க்க முடியாதது. இந்நிலையில் வரவுக்கேற்ப செலவை மட்டுப்படுத்த வேண்டுமாயின், ஒன்று வரவைப் பெருக்குவதற்கான வகையில் புதுவரிகளைப் புகுத்த வேண்டும்; அல்லது பழைய வரிகளின் விகிதத்தை உயர்த்த வேண்டும். இன்றேல் வரவுக்கேற்ப செலவைச் சுருக்கியாக வேண்டும்.

அதே சமயத்தில் வரி விதிப்பினால் மக்களது வாங்கும் சக்தி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுவது அவசியம். எனவே

நுகர்ச்சியின் மீதுள்ள வரிகளைக் குறைப்பதும் சேமிப்பின் மீதுள்ள வரிகளை அதிகரிப்பதும் அவசிய மாகிறது. பொதுவாகப் பணம் படைத்தவர்களே அதிகம் சேமித்து வைத்திருப்பார்களாத லால் இத்தகைய வரிக்கொள்கை பணக்காரன்மீது வரிப்பளுவை ஏற்றி ஏழையின் மீதுள்ள சுமை யைக் குறைக்க முற்படுகிறது. வளர்வீத வருமான வரி, மரண வரி போன்ற முற்போக்கான வரி களின் துணைகொண்டு வருவா யிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முற்படுவதால் இக் கொள்கையைச் சமதர்மத்தின் சலசலப்பு என்று சிலர் அழைப்ப துண்டு.

ஆனல், இத்தகைய வரிவிதிப் பின் மூலமாகவே பொருளாதார நெருக்கடியைச் சமாளித்து விட லாம் என்று எண்ணுவது தவறு. முதலாவது, மிகத் தீவிரமாக ஏறிவரும் அரசாங்கச் செலவுகள் அனைத்தையும் வரிவிதிப்பின் மூலம் ஈடுசெய்வதென்பது இய லாத காரியம். மேலும் பணக் கார வர்க்கம் அதிகாரத்தில் இருக்குமாஞல் மனம்போனபடி வரிகளை உயர்த்தவிட மாட்டார் கள். அரசாங்கம் விரும்பினல் கூட அத்தகைய வரிக்கொள் கைக்கு ஏற்படும் எதிர்ப்பைச் சமாளிப்பது அவ்வளவு எளிதாக இருக்காது. எனவேதான் அர சாங்கச் செலவுகளை ஈடுசெய்ய வேறு வழிவகைகளைக் கையாள முற்படுகின்றனர். அவற்றுள் பற்ருக்குறை நிதியர்க்கம் முக்கிய இடம் வகிக்கிறது.

## பற்ருக்குறை நிதியாக்கம்

பொதுத் துறையைப் பொறுத்த அளவில் பொதுமக்க ளிடமும் பாங்குகளிடமும் கடன் வாங்குதல், செலாவணியைப் பெருக்குதல் ஆகியவையே பற் ருக்குறை நிதியாக்கம் எனப்படும் என்பதை முந்திய கட்டுரையில் விளக்கியுள்ளோம். இப்படித் திரட்டப்படும் பணம் தனியாரின் கையில் முடங்கிக்கிடக்கும் பணத் தை மிஞ்சாத நிலையில் பொருளா தாரம் முழுவதையும் பொறுத்த அளவில் பற்ருக்குறை நிதியாக் கம் எதுவும் நிகழுவதாகக் கொள்ளமுடியாது என்பது தெளிவு. இருப்பினும் அரசாங் கம் வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்கிறது. செலவில் ஏற்படும் பற்ருக்குறையைத் தனியாரின் துறையிலுள்ள சேமிப்பைக் கொண்டு நிரப்ப முயலுகின்றது.

குறிப்பாகக் கடன் வாங்கிச் செலவு செய்வதால் சோம்பிக் கிடக்கும் சேமிப்புச் செயல்படுத் தப்படுகின்றது. இதில் தனிப் பட்டவரின் சேமிப்பு அரசாங்கப் பற்ருக்குறையை நிவர்த்திசெய்ய உதவுகிறது. அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்கியவர்கள் பத்திரத்தில் குறித்த காலத்தில் வட்டியும் முதலுமாகத் தனது தொகையைத் திருப்பிப் பெற வாய்ப்பு உண்டு. அரசாங்கக் கடனைச் சுமக்கும் பொறுப்பு பெரும்பாலும் வருங்காலக் குடி களையே சாரும். அவர்கள் பணக்

### சாதியும் பார்ப்பனரும்

"சமூக சீர்திருத்தத்துக் கு பார்ப்பனர் என்றுமே முழு எதிரிகள். அரசியல், பொருளா தார—மாற்றங்களில் பார்ப்பனர் முன்னணியில் நிற்பார்கள்; ஆனல் ஜாதியை ஒழிப்பதற் கான இயக்கங்களில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். எதிர் காலத்திலாவது ஈடுபடுவார் களா என்ருல், அந்த நம்பிக் கையுமில்லை."

—டாக்டர் அம்பேத்கார்
(1936)

-க்காரரிடமிருந்து வசூலிக்கும் வரியைக் கொண்டு அக்கடனை அடைப்பார்கள் என்று சொல்லுவதற்கில்லை. விலைவாசிகள் உயர்ந்து பணத்தின் மதிப்புக் குன்றினால் மட்டுமே கடன் தொகையின் கனம் சற்றுக் குறையும். ஆதலின் கடன் வாங்கிச் செலவிடும் பழக்கத்தால் வருவாயிலோ, உடைமையிலோ உள்ள ஏற்றத்தாழ்வுகள் இலகுவில் மறைந்துவிடாது. செல்வினங்களில் பொதுநலச் செலவுகள் மிகுந்திருந்தால் மட்டுமே ஏழைகள் பயன்பெறுவதாகக் கருத முடியும்.

இருப்பினும் மேற்கத்திய அரசாங்கங்கள் பொருளாதார மந்தத்தின் போதும் போர்க்காலத்திலும் கண்ணை மூடிக்கொண்டு கடன் வாங்கத் தலைப்பட்டன. சான்றாக, அமெரிக்காவில் 1933ல் 22·5 பிலியன் டாலராக இருந்த அரசாங்கக் கடன் இன்று முந்நூறு பிலியனை எட்டிப்பிடித்து விட்டது. இத்தொகை நாட்டு வருவாயில் அறுபது சதவிகிதத்துக்கும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்டவரின் கையில் தேங்கிக் கிடக்கும் சேமிப்பைத் திரட்டுவதுடன் பாங்குகளின் பணப் பெட்டிகளில் தூங்கிக் கிடக்கும் பணத்தையும் அரசாங்கம் தட்டி எழுப்ப முடியும். பாங்குகளும் கடன் வாங்குவதால் அவை உடைந்து போகாமல் ஓரளவு பாதுகாக்க முடிகிறது. அத்துடன் அதிகப் பணம் புழக்கத்தில் புகுத்தப்படுகிறது. மேலும், மைய பாங்கின் துணை கொண்டோ, அல்லது தனது சொந்தப் பொறுப்பிலோ அரசாங்கம் செலாவணியையும் நாணயங்களையும் வெளியிட்டு அவற்றின் உதவியால் தனது செல்வுகளைச் சரிக்கட்ட முற்படலாம்.

## அளவுகோல் எது ?

இவ்வாறு பற்றுக்குறை நிதியாக்கத்தின் துணை கொண்டு மேற்கொள்ளப்படும் அரசாங்கச் செலவுகள் எந்த அளவில் இருக்க வேண்டும்? எவ்வளவு காலம் நீடித்திருக்க வேண்டும்? என்ற கேள்விகள் எழலாம். முதல் கேள்விக்குத் தனியாரின் துறையில் எவ்வளவு பணம் முடக்கப்படுகின்றதோ அதற்கு இணையாக அரசாங்கம் பற்றுக்குறை நிதியாக்கம் செய்ய வேண்டும் என்று விடை கூறலாம். பதுக்கல் அதிகமாக இருந்தால் அதற்கேற்ப அரசாங்கம் வரவுக்கு மிஞ்சிய செலவை மேற்கொள்ள வேண்டும். சிறிதளவே சோம்பிக் கிடந்தால் அதற்கேற்ப அரசாங்கம் தனது செலவில் ஏற்படும் துண்டையும் சுருக்கிக் கொள்ளலாம்.

ஒருமுறை முடுக்கி விட்டாலே, பொருளாதாரம், போதுமான பெட்ரோல் உள்ள மோட்டார் வண்டியைப் போலத் தானாகத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் என்று சிலர் கூறி வந்தனர். உண்மை அப்படி இல்லை. சாவியால் இயங்கும் விளையாட்டு மோட்டாரைப் போன்றது, மந்தம்பிடித்த பொருளாதாரம். தொடர்ந்து சாவி கொடுத்துக்கொண்டே இருக்காவிட்டால் சாவி முடிந்ததும் வேலை செய்யாது நின்றுவிடும் என்பது, மற்றொரு சாராரின் கருத்து. உண்மை இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்டது என்னலாம். அரசாங்கத்தின் தூண்டுதலின் காரணமாகத், தனியார் துறையில் எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை பலப்பட்டு அதன்பயனாக உற்பத்தியும் வருவாயும் வளரத் தொடங்கினால் அரசாங்கம் கொஞ்சங்

கொஞ்சமாகத் தனது செலவுகளைக் குறைத்துக்கொள்ள ஏதுவாகும்.

பொதுவாக அரசாங்கச் செலவினல் பிறக்கும் வருவாய் பரம ஏழைகளான பாட்டாளிகளின் கையில் புகுமாஞல் மறுகணமே அரிசி, புளி, துணி, மணி என்று அத்தனையும் பறந்துவிடும். இப்படி வருவாய் முழுவதும் தங்கு தடையின்றிச் செலவிடப்பட்டால் அதன் மூலம் பெருகக் கூடிய மொத்த வருவாய்க்கு அளவே இல்லை. ஆனல் நடுத்தர வகுப்பினரும் பணக்காரரும் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை மீதம் பிடிக்கக் கூடிய ஆற்றலும் ஆவலும் கொண்டவர்கள். எனவே வருவாய் செலவிடப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு பகுதி மீதமாகும். ஆயின் வறியோரும் வசதி படைத்தவர்களும் ஒருங்கே வாழும் சமுதாயத்தில் நாட்டு வருவாயில் எத்துணை பகுதி சேமிக்கப்படும் என்று கணக்கிடுவது கடினமல்ல. சேமிப்பு வருவாயில் பத்தில் ஒரு பகுதி என்ருல், பற்ருக்குறை நிதியாக்கத்தால் உருவாக்கப்படும் வருவாய் மொத்தத்தில் பத்து மடங்காகப் பெருகும். மாருக, சேமிப்பு வருவாயில் நாலில் ஒரு பகுதியாஞல் மொத்தத்தில் வருவாய் நாலு மடங்கே பெருக முடியும். இதிலிருந்து சேமிப்பு விகிதம் அதிகரித்தால் வருவாய் பெருக்கம் குறைவாக இருக்கும்; சேமிப்பு சிறுபகுதியாக இருந்தால் வருவாய் பெருக்கம் (Income Multiplier) பெரிதாக இருக்கும் என்பது விளங்கும்.

### உந்து வேகம்

மந்தத்திலிருந்து விடுபட்டு வரும் பொருளாதாரம், வேறு வகையிலும் தூண்டப்படும். சாதாரணமாக நுகர்வுப் பொருட்களுக்கு இருக்கும் தேவைக்கு ஏற்ப அவற்றை ஆக்கிப் படைக்கும் தொழில்கள் தங்கள் ஆலைகளுக்கு வேண்டிய எந்திரங்களையும் ஏனைய முதற் கருவிப் பொருள்களையும் தருவிக்கும். ஆண்டுதோறும் இவ்வாறு புதுப்பிக்கப்படும் எந்திரங்களின் மதிப்பு மொத்தத்தில் பத்து சதவிகிதம் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்நிலையில் நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்படும் தேவை, பத்து சதவிகிதம் அதிகரிக்கிறது என்றும் கொள்ளுவோம். ஆலைகளில் எச்ச வல்லமை இல்லாத நிலையில் தங்கள் சக்திக்கு மிஞ்சிய தேவையை ஈடுசெய்யத் தொழில்கள் ஆலைகளின் அளவைப் பெரிதாக்கியோ அல்லது புதியனவற்றை நிறுவியோ உற்பத்தியைப் பெருக்க முற்படும். இம் முயற்சியால் முதற் கருவிப் பொருட்களுக்கு ஏற்படும் தேவை மேலும் பத்து சதவிகிதம் அதிகரிக்குமாஞல் மொத்தத்தில் முதற்கருவிப் பொருட்களுக்கு ஏற்படும்தேவை இரட்டிக்கும் என்பது புலஞகும். அதாவது நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்படும் தேவை பத்து சதவிகிதம் உயர்ந்தால், அதன் வாயிலாக முதற்கருவிப் பொருட்களுக்கு ஏற்படும் தேவை நூறு சதவிகிதமாகப் பெருக வாய்ப்பு ஏற்படும். இதை உந்து வேகம் (Acceleration) என்று அழைக்கலாம்.

வருவாய்ப் பெருக்கமும் உந்து வேகமும் ஒன்ருேடொன்று கை கோர்த்துக்கொண்டு கூடி உறவாடுமாஞல் அத்தொடர்பு (Relation) உறங்கிக் கிடக்கும் பொருளாதாரத்துக்கு உத்வேகமூட்டி மந்தச் சேற்றிலிருந்து தூக்கிவிட முடியும். எனவே, வருவாய்ப் பெருக்கமும் உந்து

வேகமும் கணிசமாக இருக்கும் பொருளாதாரத்தில் அரசாங்கம் பற்றுக்குறை நிதியாக்க முறையால் நெடுங்காலம் தனது செலவைப் பெருக்க அவசியமில்லை. மாருக, வருவாய்ப் பெருக்கம் சிறுத்து உந்து வேகம் குன்றியுள்ள பொருளாதாரத்தில் (வளப்பமும் எச்சவல்லமையும் மிகுந்துள்ள) பற்றுக்குறை நிதியாக்கத்துக்கு நிரந்தரமான இடம் அளிக்க அவசியம் ஏற்படலாம்.

கீன்ஸ் பிரபுவின் கோட்பாடுகளின் அடியாக எழுந்த இக் கொள்கைகள் இன்றுவரை நின்று நிலவி வருவது கண்கூடு. பெரும் பொருளாதார மந்தத்திலிருந்து தன்னை முழுவதுமாக விடுவிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களை இரண்டாவது உலகப்போர் உன்னதமானதோர் பொருள் பெருக்கத்துக்கு இழுத்துச் சென்றது. பின்னர் கெடுபிடிப் போரின் பயனாக ஏற்பட்ட ஆயுதப் பெருக்கம் அவற்றைச் சருக்கி விழாமல் தற்காத்து வருகின்றது. கொரியாப் போரைப் போன்ற குட்டிச் சண்டைகளும் பொருளாதாரத்தை முட்டுக்கொடுத்து மேலே தூக்கி விட்டன. முற்போக்கு வரிமுறைகளும் பொதுநலச் சேவைகளும் முதலாளித்துவ அரசாங்கங்களின் வரவு—செலவில் நிலை பெற்றுவிட்டன.

இன்ன பல காரணங்களால் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாக முதலாளித்துவப் பொருளாதாரம் மந்த நோய் அணுகாமல் வாழ்ந்து வருகின்றது. உண்மையில் இக்காலத்தில், பணவீக்கத்தை எப்படி மட்டுப்படுத்துவது என்ற கவலையே பெரும்பாலான அரசாங்கங்களை வாட்டி வந்தது. இந்நிலையில் கீன்ஸ் கண்டுபிடித்த மருந்து 'சமயசஞ்சீவி' தான அல்லது 'காயகல்பமா' என்பதற்கு எதிர்கால வரலாறே ஏற்ற பதிலிறுக்க வல்லது.

❖❖❖❖❖❖❖❖

*"உறுதியான நட்பு என்பது இன்பத்திலெல்லாம் அருமையான இன்பமாகும். இது நம் கவலைகளையெல்லாம் குறைக்கும்; துன்பங்களையெல்லாம் அகற்றும். எதிலும் இறுதி நிலையில் இருக்கும்போது நமக்கு அறிவுரை கூறும் உண்மையான நண்பர்கள், ஒருவரிடம் மற்றவர் உலக இன்பத்தையே காண்கிறார். எவனொருவன் தன்னைத்தானே நேசிக்கிறானே அவன் மனித சமுதாயத்தை நேசிப்பவனாகிறான்."*

—செனிகா

* * *

*"அழகு, அறம், அறிவு-மூன்றும் சகோதரிகள். ஒருவருக்கொருவர் உழுவலன்புடையவர். மனிதர்க்கு உற்ற தோழர்கள். மூவரும் இணைபிரியாதவர். கண் கலங்காமல் இவர்களைப் பிரித்து வைக்க முடியாது."*

—டென்னிசன்

ஒரு மறுப்பு:

# மாணவரா? ஆசிரியரா?

புலவர் வி. பொ. பழனிவேலன் B. O. L.

*[கல்வித்தரம் இன்று பலவழிகளிலும் குறைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இதற்குக் காரணம் கண்டுபிடிப்பதில்தான் கருத்து வேற்றுமை. மாணவர்; ஆசிரியர்; அரசியல்வாதிகள்; அரசாங்கம்; பல்கலைக்கழகம்— இந்த் ஐந்து சாராரும் அவரவர் பங்கை ஏற்றுக் கொண்டு திருந்தியாக வேண்டும். பொறுப்புடன் கற்பிக்கும் ஆசிரியரும் வருந்திப் படிக்கின்ற மாணவர்களும் மிகச் சிலர் இன்றும் இருக்கலாம். ஆனால் பலர் இல்லை என்பதுமட்டும் உண்மை. ஆசிரியர் எந்த அளவுக்குப் பொறுப்பாளிகள் என்பதை ஆசிரியர் பழனிவேலன் ஆராய்ந்து கூறுகிறார். இம்மறுப்புக் கட்டுரையில்.]*

யான் ஆகஃச்ட்டு மாத இதழில் எழுதிய "ஆசிரியரா? மாணவரா?" என்ற தலைப்புள்ள கட்டுரைக்குத் திரு. பகீரதன் (கங்கை) அவர்கள் தீட்டிய மறுப்பே இதனை எழுதும் கடப்பாட்டை எனக்களித்தது.

பஞ்சாப் மாநில அரசு பல ஆசிரியர்களை, மாணவர் தேர்ச்சிக் குறைவுக்காக, அலுவலிலிருந்து நிரந்தரமாக நீக்கியும், பலரைச் சிலகால் தள்ளிவைத்தும், பலரை எச்சரித்தும் இருப்பதைச் செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்து அவ்வாறு ஆசிரியர்களைத் தண்டிப்பது தகுமா? என்ற கருத்தை ஆய்ந்து அதனைப் பொதுமக்கள் முன் கொணர்ந்தேன்.

அக்கட்டுரையில் ஆசிரியர் குறைகளையும் எடுத்துக்காட்டியுள்ளேன்; மாணவர் குறைகளையும் கூறியுள்ளேன். கட்டுரையை நன்கு படித்து உட்பொருளுணராமையாலோ அன்றி எந்த ஆசிரியர் மீதோ தமக்குள்ள வெறுப்பினாலோ, இங்ஙனம் ஆசிரியர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளார், கட்டுரையாளர்.

ஆசிரியர்களில் பல பிரிவினர் உளர்; தொடக்கப்பள்ளி ஆசிரியர், உயர்பள்ளி, ஆசிரியர்கல்லூரி ஆசிரியர், தொழிற் கல்விக்கூடங்களின் ஆசிரியர் முதலியோர். இவர் யாரைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றே தெரியவில்லை.

## பொறுப்பில்லையா?

ஆசிரியர்கட்கு மாணவர் (தேர்ச்சியில்) "சங்கதியில்" பொறுப்பில்லாத முறை என்கிறார். இஃது கல்வித் திட்டத்தைப் பற்றியதாயிருந்தால் அதற்கு ஆசிரியர் பொறுப்பாகார். யாரோ திட்டங்கள் வகுக்

கிறார், அரசினர் நடைமுறைக்குக் கொணர்கின்றனர்; ஆசிரியர் அதனைப் பின்பற்றிப் பாடம் கற்பிக்கின்றனர். தக்க பாடத்திட்டம் வகுக்காதது அரசின் குற்றம். அதற்கு அரசினரை அணுகி முறையை மாற்றவேண்டும், கட்டுரையாளர் போன்ற பொறுப்புள்ளவர்கள்.

இன்று பயிற்சிப் பள்ளிகளில் கற்பிக்கும் அடிப்படைக் கல்வித் திட்டம் 'மூளைக்கு வேலை'யளிக்காத ஒன்றே. இந்த முறையை உடனே மாற்றியமைக்க வேண்டியது யார் பொறுப்பு?

கல்வித் தணிக்கையாளர் பலரும் அடிக்கடி பள்ளிகட்குச் சென்று ஆசிரியர்களின் அலுவல் திறனைக் கண்காணிக்கின்றனர்; ஆசிரியர் சோம்பேறியாகப் பாடம் கற்பிக்காமல் இருந்தால் கல்வித் தணிக்கையாளர்களே பொறுப்பாவர். அஃது அவர்கள் மீது சாற்றவேண்டிய குறையாம்.

சில ஆசிரியர் நாளை எண்ணிக் கொண்டு ஊதியம் பெறும் மனப்பான்மையுடன் இருக்கிறார்கள் என்றால் அதற்குரிய காரணியங்கள் பல.

தனியார் பள்ளி தவிர்த்த ஏனைய பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை மேலாளர்கள், தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்பவும் தங்கட்கு வேண்டியவர்களையோ, தங்கட்குப் பரிந்துரைக்கப் பெற்றவரையோ; அவர்கள் வேண்டிய இடங்கட்கு மாற்றியுதவ, தம் ஊரிலேயோ, அன்றி, தம் ஊருக்கு அண்மையிலேயோ நன்கு பணியாற்றி வருகின்றவர்களை, அவர்கள் விரும்பாத ஊர்கட்கோ, வசிக்க வீடோ, உண்ண உண்டியோ இல்லாத ஊர்கட்கோ மாற்றி விடுகின்றனர்.

'ஒரு குதிரையை ஒருவன் நீர்த்துறைக்கு ஓட்டிக் கொண்டுதான் போகமுடியுமேயன்றி அக்குதிரை நீரருந்த மறுத்தால் அதனை நீர் குடிக்கச் செய்ய யாராலும் முடியாது' என்ற ஆங்கிலப் பழமொழியை நினைவுபடுத்துகின்றேன். 'மனமிருந்தால் வழியுண்டு' என்பதும் கருதற்பாலது.

தொல்லைக்குட்பட்ட ஆசிரியர் எங்கோ ஒரு சிலர் மனத்தில் பொறுப்பற்று இருக்கலாம்; செயலில் இருக்க தலைமையாசிரியரோ, கல்வி கண்காணிப்பாளர்களோ இடந்தரமாட்டார்கள் என்பதை அறுவுறுத்துகின்றேன். அங்ஙனம் குறைபாடு இருந்தால் அஃது அவர்களையே சாரும்.

### "முதலாளி வர்க்க முறை?"

கல்வி முறையில் உள்ள குறைபாடுகளைக் களையவேண்டியது கட்டுரையாளர் போன்றோர் பொறுப்பு. ஆசிரியர் கற்பிக்க வேண்டியவரே.

செல்வாக்கும், வசதியும், மேனிலையிலும் உள்ளோரின் பிள்ளைகட்கே ஆசிரியர்கள் பாடம் நன்கு கற்பிக்கிறார்கள்; மற்றவர்களைக் கவனிக்கவில்லை என்று கழறுவது இக்காலத்திற்கு ஏற்றதன்று.

ஆசிரியர்களைக் கண்காணிக்க எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பது தெரியாது போலும். மேல்தட்டு என்று எந்தத் தட்டைக் குறிக்கின்றார் என்பது புலப்படவில்லை. இன்று வேறுபாடு கருதும் மனப்பான்மை ஆசிரியர்களிடம் இல்லை; இருக்க வழியுமில்லை.

குறையுள்ள பள்ளிகள் பற்றி கல்வி நெறியாளருக்கு அறிவித்தால் தக்க நடவடிக்கை எடுப்

பார்கள். சீருடை வழங்குவதும், மதியஉணவு அளிப்பதும் எதற்காக் என்பது கட்டுரையாளருக்குத் தெரியாதோ?

பள்ளிகளின் சட்டதிட்டங்கள், நடைமுறைகள் முதலியவற்றை நன்கு படித்தும், பலபள்ளிகட்கு நேரில் சென்று பார்த்தும் இருந்தால் இந்தக் குற்றச்சாற்று இராது.

## மிகத் தெளிவாகத் தெரிவது:

"ஆசிரியர்கள் எல்லா வசதிகளுடன் வாழ்ந்து கொண்டு தங்கட்டு ஒரு பொறுப்பும் இல்லாமல் ஆண்டுக்கு 180; 200; 230 நாட்களுக்கு மேல் வேலை செய்யமாட்டார்கள். மாணவர் தேர்ச்சிக் குறைவிற்குப் பொறுப்பு என்ருல், இதை உடனே கண்டிக்க வேண்டும்; கண்டித்து விட்டுத் தான் மறுவேலை பார்க்க வேண்டும் என்று கூச்சலிடுவார்கள்," என்பது அவர் கூற்று.

இந்த நாட்டில் உள்ள ஆசிரியர்கள் எத்துணைபேர் வசதிகளுடன் வாழ்கிருர்கள் என்பதை கட்டுரையாளர் அறிவாரா? நகர்ப்புறங்களில், தனியார் பள்ளிகளில் பணிபுரிகின்றவர்களைத் தவிர்த்து ஏனைய ஆசிரியர்கள் படும் தொல்லைகள் தனியே எழுதத்தக்கன.

பொருள் முட்டுப்பாடு, பொருள் விலையேற்றம், வரிப்பளு, குடியிருக்க வீடின்மை, சில ஊர்களில் உணவு உண்ண வசதியின்மை முதலியவற்ருல் ஆசிரியர்கள் படும் அல்லல்கள் அளப்பரிது. நகரிலேயே இருப்பவர்களுக்கு நாட்டுப்புறங்களைப்பற்றி எப்படித் தெரியும்?

## பண்டைய பெருமை

பண்டைக் கால்ப் பாடம் பயிற்று முறை தமிழ்நாட்டில் இருந்த விதத்தைக்கூறி அதற்குக் காட்டாகக் குருகுல வாசத்தைக் கூறினேன். கட்டுரையாளர் அதனைப் பிறழவுணர்ந்து ஏதோ எழுதியுள்ளார். வேத கால குருகுல முறைக்கு நான் ஒருப்பட்டவனன்று.

மாணவர் நூற்றுக்கு நூறுபேர் தேறவேண்டுமென்றுசொன்ருல் ஆசிரியரும் மாணவரும் ஒரே இடத்தில் இருந்து பழகி, பயின்று வருதல் நன்று என்பதற்கே குறிப்பிட்டேன். இன்று, வாலாசாபாத் இந்துமத பாடசாலை, இராமகிருட்டிணர் விடுதி, கிறித்தவ விடுதிகள் முதலியவற்றில் பயின்றுவரும் மாணவர்கள் திறமைசாலிகளாக வெளிவருவதை அறியார் போலும். பண்டைப் பெருமையையே பேசித்

---

## பிறரை உயர்த்துதல்

"பிறருடைய குற்றங்களைப் பரப்பி (குற்றமில்லாதவர் யார் தான் இருக்கிருர்?) நம்முடைய செல்வாக்கிஞல் அவர்களைக் கீழே இழுத்துத் தள்ளுவது எளிதான வேலைதான். பிறருடைய சாதனைகளைக் குறைத்துக் கூறியும், பொய்ச் செய்திகளைப் பரப்பியும் அவர்கள் காலை வாரி விடுவது சுலபம். இப்படிச் செய்வதஞல் நாம் நம் மரியாதையைத் தான் குறைத்துக் கொள்கிரும்; இம்மாதிரி இழி செயலில் ஈடுபடாத பெரியார்களின் மதிப்பையும் இழந்து விடுகிரும்.

மற்றவர்களுக்குக் கை கொடுத்து, வளர்த்து, தூக்கி விடுவதன் மூலம்தான் நம்முடைய பண்பு ஓங்கும்; நம் புகழ் வளரும்; நமது தன்மானம் தழைக்கும்."

—David Dunin
("Psychologist")

திரியும் பகுத்தறிவற்றவன் யானன்று. பண்டையவற்றிலுள்ள நல்லன கொண்டும் இன்றையவற்றிலுள்ள தீயன தள்ளியும் பகுத்துணர் பண்பினன் என்பதைக் கட்டுரையாளர் உணர்வாராக.

இவர் கூறும் குருகுல முறை பண்டை ஆரிய முறையேயன்றி தமிழ் மரபுக்கு ஒத்ததன்று.

## உண்மைப் பொருள்

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற செய்யுளுக்கு அவர் கூறும் பொருள் ஆராய்ச்சிக்குரியது.

பண்டைக் காலத்தில் அறிவுடையவர்கள் மதிக்கப்படவில்லையாம். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்; அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்," என்ற தொடர்களை எடுத்துக் காட்டி நகுதல் செய்யும் திறனைப் பாராட்டுகிறேன். ஆனால், அவர் பொருளுணர்திறன் புலப்படாதவொன்று.

தானுணர்வுதிறன் இல்லாதவர்கள் தாம் பவணந்தி கண் கொண்டு பார்க்க வேண்டுமாம்; "சுயநலம் பிடித்த, சோம்பல் மனம் படைத்த, குறுகிய எண்ணமுள்ள கூட்டத்தார்தாம் பவணந்தியின் வாசகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்கிறார். என்னே, இவரது ஆராய்ச்சி!

இவர்காலம் இருண்ட காலமாம்! "மனிதகுலம் விவாதித்து ஏற்றுக்கொள்ள முடியாத" கல்வியாம். இராமாயணகாலம், மாபாரதகாலம், புராணகாலம் இவற்றிற்கு முற்பட்ட காலமா பவணந்தி காலம்? கி.பி. 1178 முதல் 1216 வரை. அதாவது, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். இஃது எங்ஙனம் இருண்ட காலமாயிற்றோ? பவணந்தியார் இலக்கண நூலே இன்று தமிழ்ப் புலவர்களால் பாராட்டப்படுவது.

ஆசிரியர் தகுதிபற்றியும், மாணவர் தகுதி பற்றியும், போதிக்கும் முறைபற்றியும், மாணவர் வகை பற்றியும் இன்று அவர் கூறியுள்ளவற்றை ஒப்புக்கொள்ளாதவர், திரு பகீரதன் தவிர வேறு யாரும் இரார். 'மனிதகுலம்' ஏற்றுக் கொள்ளாதவையாக அவர் என்ன கூறியிருக்கிறார்? ஆசிரியர், மாணவர், நூல் பாடம் கேட்கும் முறை, கற்பிக்கும் முறை முதலியன ஏற்றுக்கொள்ளாதனவா? எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஏற்றுக்கொள்ளத்தகாதவையா?

திருவள்ளுவர் காலம் கி. மு. 31. பவணந்தி காலம் கி.பி. 1216. வள்ளுவரையும், தொல்காப்பியரையும் குறைகூறாது பவணந்தி மீது பாய்வது ஏனோ? அவரும் ஒரு இலக்கண நூலாசிரியர் என்பதனால் போலும்.

## உயர்ந்தோர்க்கே கல்வி?

பண்டைக் காலத்தில் உயர் நிலையிலுள்ளவர்களே படித்தார்கள்; ஆசிரியர் நன்கு அவர்கட்குத்தான் கற்பித்தார்கள் என்று பகர்கின்றார். பண்டைக் காலத்தில் பல தொழில் புரிந்தவர்களும் சிறந்த புலமையாளராக் விளங்கினர் என்பது தமிழிலக்கியங்களைப் படித்தவர்கட்குப் புலனாகாது போகாது. இதோ, சில காட்டுகள்:—

1. இளம் பொன்வணிகனார்
2. மருத்துவன் தாமோதரனார்
3. அறுவை வாணிகன் இளவேட்டனார்
4. ஓர் ஏருழவர்
5. கணியன் பூங்குன்றனார்

6. காவற்பெண்டு
7. குறமகள் இளவெயினியார்
8. நெடும்பல்லியத்தனார்
9. கணக்காயனார் மகனார் நக்கீரனார்
10. கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
11. வெண்ணிக்குயத்தியார்
12. தங்கால் பொற்கொல்லனார்
13. இளங்கொற்றனார்

பண்டையாசிரியர்கள், மேல் தட்டில் இருப்பவர்கட்கே (கட்டுரையாளர் கூறியாங்கு) கல்வி கற்பித்திருந்தால் மேற்காட்டிய பல தொழிலாளிகளும், தாழ்நிலையோரும் எங்ஙனம் புலமையாளராக இருந்திருக்கமுடியும்?

வடவர் குலமுறைக் கல்வியைத்தான் கட்டுரையாளர் கூறுகிறார். தமிழர் கல்வி முறையை அறியார் போலும்! அரசர்கள் கல்வியையும், கற்றவரையும் நன்கு மதித்தனர் என்பதற்கும், உயர்வு தாழ்வின்றி யாவர்க்கும் சமவாய்ப்புஅளித்தனர்என்பதற்கும் தமிழ் இலக்கியங்களில் பல சான்றுகள் உள. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற அரசப் புலவன் பாடிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றைக் கீழே தருகிறேன். அறிஞர்கள் ஆய்ந்துணர்க:

உற்றுழி உதவியும்
  உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது
  கற்றல் நன்றே,
பிறப்போ ரன்ன
  உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால்
  தாயு மனந்திரியும்.
ஒரு குடிப்பிறந்த
  பல் லோருள்ளும்
மூத்தோன் வருக
  என்னா தவருள்
அறிவுடையோனாறு
  அரசுஞ் செல்லும்.
வேற்றுமை தெரிந்த
  நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும்
  அவன் கட்படுமே.

இதைக் கட்டுரையாளர் ஒப்புக் கொள்வாரோ, என்னவோ?

## முழுக்க முழுக்க பொறுப்பு:

இன்று மாணவர்கள் பள்ளியில் ஐந்து மணி நேரமே இருக்கின்றனர். இதில் பயிலும் நேரம் இதைவிடக்குறைவு. ஒரு நாளில் முக்கால் மணிக்கு ஒரு பாடம் வீதம் பல பாடங்கள் பயில்கின்றனர். பகலில் ஏழுமணி நேரமும், இரவில் பன்னிரண்டு மணியும் வீட்டில் கழிக்கின்றனர்; அல்லது வெளியில் கழிக்கின்றனர். இந்நிலையில் முழுக்க முழுக்க ஆசிரியர் பொறுப்பு என்பது பொருந்துமாற்றை அறிஞர்கள் பகுத்தறிவுக்கண் கொண்டு ஆராய்ந்தறிக.

எந்தவகையானும் ஒரு வகுப்பில் நூற்றுக்கு நூறு மாணவர்களைத் தேறச் செய்வது யாராலும் முடியாது. மாணவர்களில் பலவேறுபட்ட திறமையினர் உளர் என்பதைப் பகீரதன் ஒப்புக் கொள்ளமாட்டார் என்றே கருதுகிறேன். ஆனால் கல்வித் துறையில் ஈடுபாடுடையோர் உணர்வர்.

முன், பொறுக்குத் தேர்வு இருந்தபோது, தனியார் பள்ளிகளில் இறுதி வகுப்பில் நூற்றுக்கு நூறு பேர், சிலவற்றில் தேறினர் எனலாம். இப்போழ்து அதுவும் இயலாது.

## ஒரே வழி?

மாணவர் தேர்ச்சிக் குறைவுக்கு ஆசிரியர்கள் தாம்

பொறுப்பு என்றும், ஆசிரியர் உழைப்பின்மைதான் என்றும், அறிவு நிறைந்த பார்வை இல்லாமை என்றும், பவணந்திகால இருட்டு மனப்பான்மை என்றும் மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனவர் வழிகண்டு பிடித்து விட்டதாக விளம்பினார். ஏதோ நல்ல அருமையான வழியாக இருக்குமோ என்று மேலே படித்தேன்.

என்ன வழி தெரியுமா? ஆசிரியர்க்குத் தக்க தண்டனையளிக்க விதி செய்ய வேண்டும் என்பதே அவர் கண்டு பிடித்த உயர் வழி! ஒப்பற்ற வழி!

முடிவு

இக்கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் யான் ஆகஃச்டில் எழுதிய கட்டுரையையும், பகீரதன் செப்டெம்பர் "குத்தூசியில்" எழுதிய கட்டுரையையும் நன்கு கூர்ந்து படித்து உண்மையுணர்க.

ஆசிரியர்களைப் பற்றியும், அவர்க்குள்ள இடையூறுகள் பற்றியும், இன்றையக் கல்வித் திட்டம்பற்றியும், காலப் போக்குப் பற்றியும் கருதிப்பார்க்கும் கண்ணுள்ளார் யாவரும் மாணவர் தேர்ச்சிக் குறைவுக்கும், தரக் குறைவுக்கும் ஆசிரியர் மட்டும் தாம் பொறுப்பாவர் என்பது பொருத்தமின்றென்று உணராதிரார்.

உயர்திரு. பகீரதன் அவர்கள் எந்தப் பள்ளியிலாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பு மாணவர்கட்கு ஓராண்டு முழுவதும் பாடம் பயிற்றி, அரசினர் திட்டப்படி மதிப்பெண் பெற்று, நூற்றுக்கு நூறு பேரையும் தேற வைத்தாரானால் அங்ஙனம் செய்யாத ஆசிரியர்களை யாவரும் தண்டிக்கத் தக்கவர்களே. முன் வருவாரா?

ஆசிரியர்கள் தண்டிக்கப்படுவது மாணவர்க்கும் மற்றவர்க்கும் தெரிந்தால் பொதுமக்களின் முன்னும் மாணவரிடையும் ஆசிரியர் மதிப்பும் தன்மானமும் என்ன நிலையையடையும்? தேர்க.

"தங்கள் கருத்துக்களையும் முடிவுகளையும் என்றுமே நிலையாக வைத்துக் கொண்டு—மாற்றிக் கொள்ளாமல்—இருப்பவர்கள் மூடரும் மாண்டவர்களுமே."

—லவல்

* * *

"உன் திருமணத்துக்கு முன்பு கண்களைத் திறந்து கொண்டிரு; அதற்குப் பிறகு பாதி மூடிக்கொண்டிரு."

—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

**இலக்கியப் பகுதி:**

# சூர்ப்பநகை

—கவிஞர் முருகுசுந்தரம்—

*[இலக்கியத்தை இலக்கியமாகவே, குற்றங்குறைகளைக் காட்டி ஆராய்கின்ற இலக்கிய அறிவுப் பண்பு தமிழ் நாட்டில் மிகமிகக் குறைவு. எந்த இலக்கியத்தையும் கடவுளோடும் மதத்தோடும் பிணைத்து அதிலுள்ள குற்றங்குறைகளையும், அக் கதாபாத்திரங்களின் நற்பண்பு, தீப்பண்புகளையும் ஆராய்ந்து பார்க்க முடியாதபடி செய்வது பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வழக்கம். ஆனால் இன்று நல்ல மாற்றத்தைக் காண்கிறோம். இங்கிலீஷ் இலக்கியங்களை ஆராய்வது போலவே தமிழ் இலக்கியங்களையும் ஆராயக் கூடியவர் பலர் உளர். அவர்களில் ஒருவரான இக்கட்டுரையாளர், முழுதும் கட்டுக்கதையான இராமாயணத்திலுள்ள சூர்ப்பநகை என்ற பாத்திரத்தின் திறமையை ஆராய்ந்து காட்டுகிறார்.]*

இராமாயணத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான பாத்திரம் (character) சூர்ப்பநகை! ஏன், வியப்பாக இருக்கிறதா? காய்தல் உவத்தல் இன்றி இக்கட்டுரையைப் படித்துப்பாருங்கள்.

**முன்னுரை:**

முதன் முதலாக இராமாயணத்தை எழுதியவர் வடமொழிப் புலவரான வால்மீகி. அதைப் பின்பற்றி இந்திய மொழிகளில் அறுபதுக்கும் மேற்பட்ட இராமாயணங்கள் எழுதப்பட்டன. ஆனால் அவை யாவும் கதையமைப்பாலும், பாத்திரப் படைப்பாலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டும், முரண்பட்டும் காணப்படுகின்றன. சமண இராமாயணத்தில் இராமனுக்குப் பத்தாயிரம் மனைவியரும், அனுமனுக்கு ஆயிரம் மனைவியரும் இருந்தனர் என்று கூறப்படுகிறது. சாக்கிய ராமாயணமான தசரத காவியத்தில் இராமனும் சீதையும் உடன் பிறந்தவர்கள். அவர்கள் தென்னாடு வரவில்லை. கங்கைக்கரையோடு நின்றுவிடுகின்றனர். பின்னர் தமது நாடு திரும்பிச் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். சாக்கிய நாட்டில் உடன் பிறந்தாரை மணந்து கொள்ளும் பண்பாடு பண்டைக் காலத்தில் இருந்த காரணத்தால், அக் காவிய நிகழ்ச்சி அவ்வாறு புனையப்பட்டுள்ளது.

இராமாயணத்தை வரலாற்றின் அடிப்படையில் ஆராய்ந்த சிலர், "இக்கதை இந்திய நாட்டுக் கதையே அல்ல; பாரசீக நாட்டு ஆயிரத்தொரு இரவுகளைப்போல இருக்கிறது" என்று கூறுகின்றனர். வேறு சிலர் 'இது கிரேக்கக் காவியமான இலியாதை (Iliad) பெரிதும் ஒத்திருக்கிறது; அக் காவியமே திரிந்து இராமாயணமாக இந்திய நாட்டில் குடியேறி விட்டது' என்றும் கூறுகின்றனர்.

இராமாயணத்தைப் பூகோள ரீதியாய் ஆராய்ந்த சிலர், 'இக் காவியத்தில் கூறப்படும் இலங்கை வேறு; இந்திய நாட்டின் தெற்கில் உள்ள இலங்கைவேறு' என்று கூறுகின்றனர். இராமாயணத்தில் கூறப்படும் இலங்கை மலையின்மேல் அமைக்கப்பட்ட நகரம். இப்போதுள்ள இலங்கையோ ஒரு தீவு.

இவ்வாறு எண்ணற்ற குழப்பங்களுக்குத் தாயகமாக விளங்கும் இக்காவியத்தின் தலைவனை இராமன், சில இராமாயணத்தில் கடவுளாகவும், சில இராமாயணத்தில் மனிதனாகவும் சித்தரிக்கப்படுகின்றான். பாத்திரங்களின் உயர்வு தாழ்வும் ஒன்றுக்கொன்று முரண்பட்டும், மாறுபட்டும் காணப்படுகின்றன.

இராமாயணத்தில் இடம் பெறும் பெண்பாலரில் வியக்கத் தக்க நுண்ணறிவும். சொல்லாற்றலும் பெற்றோர் கைகேயியும் சூர்ப்பநகையுமே. இருவரும் தீக் குணப் பாத்திரங்களாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றனர். பொருத்தமில்லாததும், எல்லையற்றதுமான வீண்பழி இவர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளது.

இங்கு எனது ஆராய்ச்சிக்குச் சூர்ப்பநகையை எடுத்துக் கொண்டிருக்கிறேன். இவ்வாராய்ச்சியில் இராமனைக் கடவுளாகவோ அல்லது அவதாரமாகவோ நான் கொள்ளவில்லை. அதேபோல் சூர்ப்பநகையை ஓர் அரக்கியாகவும் நான் கொள்ளவில்லை. ஏனென்றால், கலாச்சார வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும் போது, இராமாயணக் காலத்தில் அரக்கரென்று ஓரினம் இந்திய நாட்டில் வாழ்ந்ததாக எந்த வரலாற்றாசிரியனும் நிரூபித்துவிட முடியாது. இராமனை ஓர் ஆண் மகன் என்ற அளவிலும், சூர்ப்பநகையை ஒரு பெண் என்ற அளவிலும் இருவர்பாலும் ஏற்பட்ட தொடர்பை ஒருதலைக் காமம் என்ற அளவிலும் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

பாத்திரப் படைப்பு:

இராமன் வட இந்தியாவிலிருந்த அயோத்தி என்ற சிறு நாட்டின் இளவரசன். மனைவியை இழந்து குழந்தையைப் போல் தேம்பியழுதவன். பிறகு குரங்குகளின் தயவால் மனைவியின் இருப்பிடமறிந்து, அவைகளின் துணையாலும், அண்ணனைக் காட்டிக் கொடுக்க முன் வந்த வீடணனின் துணையாலும் இழந்த தன் மனைவியை மீட்டுக் கொண்டவன். வாலியை மறைந்திருந்து கொன்ற கோழை.

சூர்ப்பநகை, திருலோக சக்ராதிபதி (பேரரசன்) யான இலங்கேசுவரனின் தங்கை. புலத்தியன் வழிவந்த அந்தணப்பெண். இதை இராமனே "அந்தணர் பாவை நீ; நான் அரசரில் வந்தோன்" (சூர். படலம்: பாடல் 42) என்று சூர்ப்பநகையிடம் கூறுகிறான். சூர்ப்பநகையும் இராமனிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டபோது, "பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி" (சூர். படலம்: பாடல் 32) என்று குறிப்பிடுகிறாள். மூன்று ஆண் மக்களுக்குப் பிறகு இவள் தவத்தால் பிறந்து, செல்வமாக வளர்க்கப்பட்டவள். கொடி போன்ற அழகி. இதைப் "பெய் தவத்தின் ஓர் பெண்கொடி எம் முழைப் பிறந்தாள்" (கும்பகருணவதைப் படலம். பாடல்: 230) என்று கும்பகருணன் குறிப்பிடுகிறான்.

சூர்ப்பநகை கல்வி கேள்விகளில் மிக்கவள். இவ்வுண்மையை, அவள் வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் எழுத்துக்கு எழுத்து புலப்படுத்துகின்றன.

இவள் கணவனை இழந்த கைம்பெண். ஆனால் இளமை மாறாத ஏந்திழை.

கதை

பஞ்சவடி என்னும் பருவச் சோலையில், பர்ணசாலையின் முன் இராமன் நின்று கொண்டிருக்கிறான். அவன் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த சூர்ப்பநகை தன் காதலை அவன்பால் வெளியிடுகிறாள். தான் திருமணம் ஆனவன் என்பதை எடுத்துக்கூறி இராமன் மறுக்கிறான். சூர்ப்பநகை மீண்டும் தன் காதலை வற்புறுத்துகிறாள். விளைவு, இலக்குவனால் மூக்கு, செவி முதலிய உறுப்புக்கள் அறுபட்டு ஓடுகிறாள். தன் அண்ணனாகிய இராவணனிடம் சென்று முறையிட்டுத் தன் அவமானத்துக்குப் பழிவாங்க முயல்கிறாள்.

திறன் ஆய்வு

சூர்ப்பநகை இராமன்பால் கொண்டது ஒருதலைக் காமம். சூர்ப்பநகை இராமனைக் காதலிக்கத் தகுதியுண்டா? ஆம்! மிகச் சிறந்த தகுதிகள் உண்டு. இராமன் சிற்றரசன். இவளோ திரிலோக சக்ராதிபதியின் தங்கை. இராமன் இரண்டாம் வருணமாகிய அரசகுடியில் பிறந்தவன். இவளோ, முதல்வருணமான அந்தணக் குடியில் பிறந்தவள்; ஓர்படி பிறப்பால் உயர்ந்தவள். இராமன் அழகன்; இவளும் அழகி. இராமன் சூர்ப்பநகையை அரக்கி என்று கூறி ஒதுக்கப் பார்க்கிறான். ஏன், அரக்கியரை மானிடர் மணந்ததில்லையா? பீமன், அருச்சுனன் முதலிய இதிகாசத் தலைவர்கள் அரக்கியரை மணந்து வாழ்க்கை நடத்தியிருக்கின்றனரே! இராமன் தனக்கு மணமாகிவிட்டது என்று கூறுகிறான். அரசர்கள் பல மனைவியரை மணந்து வாழும் பண்பாடு இந்திய நாட்டில் பெரு வழக்காகக் காணப்படுகிறதே! இவனுடைய தந்தையான தசரதன் அறுபதாயிரத்து

## ஆயுள் நீடிப்பு

மனிதனின் ஆயுட்காலம் அவனவன் "தலைவிதி"யைப் பொறுத்ததல்ல என்பதை விஞ்ஞானம் மெய்ப்பித்து விட்டது. அய்ரோப்பாவில் சராசரிஆயுட்காலம், 16-ஆவது நூற்றாண்டில் 21 வயதாகவும், 18-ஆவது நூற்றாண்டில் 26 வயதாகவும், 19-ஆவது நூற்றாண்டில் 34 வயதாகவும் இருந்தது. ருஷ்யாவில் புரட்சிக்கு முன்பு 33-ஆக இருந்தது, இன்று 70 வயதாக உயர்ந்திருக்கிறதாம். நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்நாட்டில் 40,000 பேர் இருக்கிறார்களாம்.

முதுமையையொருநோயாகவே விஞ்ஞானம் கருதுகிறது. புளித்த பாலில் உள்ளது போன்ற சிதைவு நுண்ணங்கள் மனிதனின் பெருங்குடலில் இருக்கின்றன; இவை தாம் மூப்புக்கும் மரணத்துக்கும்காரணம். இந்நுணுக்கங்களைத் தடுக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்படுவதும், அளவுக்கு மீறி உண்பதும் ஆயுளைக் குறைக்கின்றன. உற்சாகமான, உபயோகமான, எந்த வேலையும் ஆயுளை நீடிக்கச் செய்யும். பகுத்தறிவுக்கேற்ற பொழுது போக்கும் மனித ஆயுளை நீடிக்கச் செய்கிறது.

ஆகவே, ஆயுட்காலம் என்பது உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி உள்ள நிலை, கலாசாரம், சமூக—பொருளாதார நிலைமை • ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

மூன்று மனைவியரைக் கட்டி ஆண்டபோது, இவன் தன்னையும் மணந்து கொள்வான் என்று சூர்ப்பநகை எதிர்பார்த்ததில் என்ன தவறு?

சூர்ப்பநகையைப் பிடிக்க வில்லையென்றால் முதலிலேயே இராமன் மறுத்துரைத்திருக்கலாம். அவளுடைய குலநலத்தை விசாரித்துவிட்டு, "உடன் பிறந்தவர்கள் அன்னார், தருவரேல் கொள்வேன்" (சூர். படலம்; பாடல்: 46) என்று ஆசை மொழி பேசி அவள் காதலைத் தூண்டி விடுகிறான், ராமன்.

இவளுடைய அறிவழகைக் காணும்போது, ஆண்மையுள்ள எந்த ஆடவனும் சூர்ப்பநகையை மனைவியாக ஏற்றுக்கொள்ள மறுக்கமாட்டான். அவள் எவ்வளவு சொற்சாதுரியமும், கலையுணர்ச்சியும், நுண்ணறிவும் மிக்கவள் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு:

இலக்குவன் சூர்ப்பநகையின் உறுப்புக்களைச் சிதைத்து விடுகிறான். இவ்வாறு உறுப்பு நலன் அழிந்த நிலையிலும் அவள் காதல் உணர்வு மாறவில்லை. கைம் பெண்ணாக இருந்து துன்புறுவதைவிடத் தகுதிவாய்ந்த ஒருவரைமணந்து இல்வாழ்க்கையில் ஈடுபட அவள் உள்ளம் பெரிதும் விரும்புகிறது. இலக்குவனுக்காவது தன்னைத் திருமணம் செய்து வைக்குமாறு இராமனை வேண்டுகிறாள். அப்போது தன் மூக்கறுந்த நிலை அவள் உள்ளத்தில் பளிச்சிடுகிறது. இராமனை நோக்கி, 'மூக்கறுந்த என்னை உன் தம்பி வைத்து வாழ்வானா, என்று சிந்திக்கிறாயா? இடையே இல்லாத சீதையோடு நீ இவ்வளவு நாளாக வாழும் போது, மூக்கில்லாத என்னோடு அவன் வாழ்ந்தால் என்ன?

'இளையவன்தான், அரிந்த
நாசி
ஒருங்கிலா இவளோடும்
உறைவேனோ?
என்பானேல் இறைவ!
ஒன்றும்
மருங்கிலா தவளோடும்
அன்றோ நீ
நெடுங்காலம் வாழ்ந்தது?
(சூர். படலம்: பாடல் 133)

என்று கேட்கிறாள். மேலும், அதிக அழகு என்றைக்கும் ஆபத்தானது என்பதைக் 'கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடமன்றோ?' என்று கூறி விளக்குகிறாள். என்னே அறிவு நலம்? இவ்வளவு அறிவு நுட்பத்தோடு கூடிய மங்கையை மனைவியாகப் பெற இராமன் தவம் செய்ய வேண்டும்.

## அறிவிழந்த இலக்குவன்

இலக்குவன் சூர்ப்பநகையின் உறுப்புக்களைச் சிதைத்தற்குக் கூறப்படும் காரணம், அவள் சீதையைக் கவர்ந்து செல்ல முயன்றாள் என்பது. காதல் போட்டியில் இதெல்லாம் இயற்கை. தன் காதலுக்குக் குறுக்கே தடைக்கல்லாக இருந்த சீதையை அப்புறப்படுத்த முயன்றாள். பொறாமையில் மூழ்கிய பெண்களிடத்தில் சாதாரணமாகக் காணப்படும் பண்புதானே இது? சூர்ப்பநகையின் இச்செயல் சற்று எல்லை மீறியதென்றே வைத்துக் கொள்வோம். அக்குற்றத்துக்கு இலக்குவன் கொடுத்த தண்டனை பொருத்தம் தானா?

சூர்ப்பநகை செய்த குற்றத்துக்காக அவளை மருட்டி அனுப்பியிருக்கலாம். அல்லது அடித்தும் விரட்டியிருக்கலாம். ஒரு பெண்ணுக்கு இன்றியமையாத உறுப்புக்களை அறுத்து விரட்டுவது

த்தான் நீதியர்? சூர்ப்பநகை செய்தது அளவு மீறிய செயல் என்றால், இலக்குவன் செயலை என்னவென்று சொல்லுவது? சரி! இலக்குவன் சிறியவன். ஆத்திரத்தில் அறிவிழந்து செய்திருக்கலாம். ஆனால் இராமன் அதற்காகக் கிஞ்சித்தும் வருந்தியதாகவோ, இரக்கப்பட்டதாகவோ காணோம். இவர்களைப் பண்பாடுடையவர்கள் என்று சொல்வதா? பத்துமாதம் தன்வசத்தில் சீதை இருந்தும், அவள் விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்யக் கூடாது என்று பொறுமையோடு இருந்த இராவணனைப் பண்பாடுடையவன் என்று சொல்வதா? இவர்களில் யார் இரக்கமில்லாத அரக்கன்?

தனக்கு நேர்ந்த அவமானத்தால் குன்றிப்போன சூர்ப்பநகை. குத்துண்ட வேங்கையாக மாறுகிறாள். அவள் உள்ளத்தில் பழிவாங்கும் எண்ணம் தலைதூக்குகிறது. காதல் முயற்சியில் தோல்வியும், அவமானமும் அடையும் எந்தப் பெண்ணுக்கும் இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியே இது. உடனே கரதூடணரைத் துணைக்கழைக்கிறாள். அவர்கள் இராம இலக்குவரால் கொலை செய்யப்படுகிறார்கள்.

இறுதியாக ஆற்றல் மிக்க தன் அண்ணன் இலங்கேசுவரனை அடைகிறாள். அருமைத் தங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கண்ணுற்றபோது, குமுறும் எரிமலையாக மாறுகிறான் இராவணன். பழிவாங்கும் உணர்ச்சியே அவன் உள்ளத்தில் தலைதூக்கி நின்ற காரணத்தால், கிளர்ந்தெழுந்த தன் அண்ணனின் சினத்தீயைப் பஞ்சவடியின் பக்கம் மிக வேகமாகத் திருப்பி விடுகிறாள்.

## சூர்ப்பநகையின் திறன்

இராவணனின் உள்ளத்தை மிக நுட்பமாக ஆராய்ந்து உணர்ந்தவள் சூர்ப்பநகை. அவன் அழகுக்கு அடிமை என்பதை நன்கு அறிவாள். தனக்கு நேர்ந்த அவமானத்தைப் பற்றிக் கூட அதிகம் பேசாமல், சீதையின் அழகைப் பற்றியும், அவளைக் கைப்பற்றி அவனுக்குக் காணிக்கையாகத் தான் மேற்கொண்ட முயற்சியைப் பற்றியுமே பேசுகிறாள். சீதையின் அழகைப் பற்றிக் கூறும் போது 'தாமரை இருந்த தையல் சேடியாம் தரமும் அல்லள்' என்றும், 'அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள்; வதனம் மைதீர் கஞ்சத்தின் அளவிற்றே

---

## தென்மொழி-வடமொழி

"பண்டைக் காலத்தில், ஆரியர் வருமுன், இந்தியா முழுதும் பல மொழி வழக்குகளாகவேறுபட்ட ஒரே மொழி (தமிழ்) வழங்கினதாகச் சில தொல்காப்பியக் குறிப்புகளாலும், மொழிநூல் ஆராய்ச்சியாலும் அறியக் கிடக்கின்றது. ஆரியர் வந்த பிறகுங்கூட, உண்மையான மொழிகளாக ஒப்புக் கொள்ளப்பட்டவை, வடக்கில் சமஸ்கிருதமும், தெற்கில் தமிழுமாக இரண்டேயென்பது, "வடமொழி", "தென்மொழி"–என்னும் அவற்றின் பெயர்களாலேயே அறியப்படும். இன்றும், தென்னாட்டு மொழிகளையெல்லாம் தமிழுக்குள்ளும், வடநாட்டு மொழிகளையெல்லாம் சமஸ்கிருதத்திற்குள்ளும் அடக்கி விடலாம்."

—ஞா. தேவநேயப்பாவாணர்

(ஒப்பியன் மொழி நூல்–பக்கம் 27)

னும் கடலினும் பெரிய கண்கள்' என்றும் பாராட்டிப் பேசுகிருள்.

இராவணன் உலகையே மறந்தான். அவன் கண்ணிலும் கருத்திலும் சீதை குடியேறி விட்டாள். ஆற்ருமை அவன் உள்ளத்தில் கால் கொள்கிறது. பாலில் பரவும் பிரைமோர் போல், அவன் உள்ளத்திலும் உடலிலும் பரவிய காமத்தைக் குறிப்பால் உணர்ந்த சூர்ப்பநகை சாட்டையின் வீச்சைப் போன்ற சொற்களால் அவனைக் கிளர்ந்தெழச் செய்கிருள்.

''இந்திரன் சசியைப் பெற்ருன்; சிவன் உமையைப் பெற்ருன்; திருமால் செந்திருமகளைப் பெற்ருன்; சீதையைப் பெற்ருய் நீயும்!'' (சூர். படலம்: பாடல் 75)

''சிவன் உமையைத்தன் இடது பாகத்தில் வைத்தான்; திருமால் இலக்குமியை மார்பில் வைத்தான்; பிரமன் கலைமகளை நாவில் வைத்தான். நீ சீதையைப் பெற்ருல் எங்குவைத்து வாழ்வாய்?'' (சூர். படலம்: பாடல் 76) என்று சாதுரியமாகப் பேசுகிருள் சூர்ப்பநகை.

சீதையைக் காண்பதற்கு முன்பாகவே, இராவணன் அவளைப் பெற்று விட்டதாகக் கூறுகிருள்!

''அண்ணு! உன்னுல் முடியாதது என்ன இருக்கிறது? நீ நினைத்தால் சீதையை அரை நொடியில் பெறமுடியும். இன்னும் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிருயே! போ!போ!'' என்று நேரடியாகச் சொல்ல வேண்டியதைக் குறிப்பாக, ஆனல் ஆற்றலோடு, சொல்லுகிருள் சூர்ப்பநகை. சீதை எனும் நெருப்பு இராவணன் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி விட்டது. அவனும் சீதையைத் தேடிப் புறப்பட்டு விட்டான். சூர்ப்பநகையின் பழியுணர்ச்சியும் தீர்ந்துவிட்டது. எப்படியும் தன் அண்ணன் தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்குப் பழிவாங்கி விடுவான் என்ற திருப்தியோடு அவள் பெண்மையுள்ளம் அமைதியுற்றது.

## முடிவுரை

சூர்ப்பநகையின் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சிகளும், அவ்வுணர்ச்சிகளின் காரணமாக அவள் வழி நடந்த நிகழ்ச்சிகளும், காதல் வயப்பட்டோரின் வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழக் கூடியவையே. சூர்ப்பநகையின் இடத்தில் வேறு எந்தப் பெண் இருந்திருந்தாலும், அவளுடைய செயல்களும் இவ்வாறே இருந்திருக்கும். ஆனல் இராமாயணத்தை உருவாக்கிய கவிஞர்கள் அவள்மேல் எல்லையற்ற வீண்பழிகளை ஏற்றி, 'அவளும் ஒரு பெண்தான்! பெண்டிருக்கு இயல்பாக அமைந்திருக்கும் உணர்ச்சிகள் அவளுக்கும் உண்டு' என்ற எண்ணமே படிப்போரின் உள்ளத்தில் தோன்ருதவாறு செய்து விட்டனர்.

*''தீய ஒழுக்கமுள்ள ஒருவனை நல்லவன் என்று அடிக்கடி அவன் முன்பு சொல்வதனுல் காலப்போக்கில் அவன் உண்மையிலேயே நல்லவனுகிவிடுகிருன். நல்ல நடத்தை உடையவனைக் கெட்டவன் என்று பன்முறை சொல்வதனுல், அவன் நாளடைவில் கெட்டவனுகிவிடுகிருன்.''*

—ராமகிருஷ்ண பரமஹம்சர்.

தனைசை ப. கீரன் பி. ஏ.

# வானியலின் வரலாறு

*[வானியலைப்பற்றி மதத் தலைவர்களும், மதவாதிகளும் நம்பியிருந்த மடமைக் கருத்துக்களைத் தவிடுபொடியாக்கிய வானிலை ஆராய்ச்சிக்காரர்களின் வரலாறு மனித வரலாற்றிலேயே தனிச்சிறப்புக் கொண்டது. இந்த ஆராய்ச்சிக்கு உறு துணையாக நின்றது, தொலைநோக்கிக் கண்டுபிடிப்பு. இவ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட முதல் பெரியார்களைப்பற்றிய சிறு குறிப்புக்கள் இங்கு தரப்பட்டுள்ளன.]*

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் பிதகோரசும், பிலலாசும் நிலமானது நிலையாக இல்லாமல் தன் மையக் கோட்டின் மீது ஒவ்வொரு இருபத்து நான்கு மணிநேரத்துக்கும் ஒரு முறை சுற்றுவதாலேயே இரவும் பகலும் தோன்றுகின்றன என்று கூறியுள்ளார்கள். அவர்களினும் சிறப்பாகக் கிரேக்கக் கணக்கராகிய, சாமசைச் சேர்ந்த அரிச்டார்க்கசு, நிலம் தன் மையக் கோட்டின்மீது சுற்றுவது மட்டுமல்லாமல் பகலவனைச் சுற்றியும் ஓர் ஆண்டில் ஒருமுறை சுற்றி வருவதாலேயே பருவ மாற்றங்களும் தொடர்ந்து நிகழ்கின்றன என்பதை நிலை நாட்டினார். பின்னாட்களில் இக் கொள்கைகள் வெறுத்து ஒதுக்கப்பட்டன.

அரிச்டாட்டில் மேற்கண்ட கொள்கைகளை எதிர்த்து நிலமே அண்டத்தின் மையமாகும் என்று கூறினார். அவரைத் தொடர்ந்து தாலமி வானத்தில் கோள்களின் இயக்கங்களை வட்டம், மேல்வட்டம் (Epicycles) ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறையால் விளக்கினார். அவரது கருத்தின்படி நிலையாகவே நிலம் நின்றது; அதுவே அண்டத்தின் அசையாத மையப்புள்ளியாகும்; அவர், 'அந்த நிலைப்புள்ளியைச் சுற்றிக்கோள்கள் வட்டப் பாதையில் இயங்கின; அவ்வட்டப் பாதையின் அசையும் புள்ளிகளைச் சுற்றிப் பற்பல கோள்களும் இயங்கின' என்று கண்டார்.

கிறித்தவ சமயமும் அரிச்டாட்டில் — தாலமியின் கருத்துக்களுக்கு ஆதரவு தந்தது. கடவுளும் கடவுளின் மைந்தரும் கலந்து கொண்ட மனிதனின் வீழ்ச்சி — மீட்சிப் பெருங்கூத்தில் நம்பிக்கை கொண்டதே கிறித்தவ சமயம் அல்லவா? அத்தகைய சிறப்புமிக்க பெருங்கூத்து அண்டத்தின் மையப் புள்ளியிலேயே நடந்தது என்னுமல் சற்றுத் தாழ்ந்த, ஒதுங்கிய இடத்தில் நிகழ்ந்ததாகக் கருதுவதும் நாத்திகம் என்றே கிறித்தவம் கருதியது. ஆகவே, அப்பெருங் கூத்தின் நிகழ்விடமாகக் கருதப்படும் 'நிலம் அண்டத்தின் மையமாகும்; அது அசையாதது; நிலையானது!' என்ற கருத்திற்குக் கிறித்தவம் முழு ஆதரவைத் தந்ததில் வியப்பில்லை.

எனினும், கிறித்தவத்திலும் இக்கொள்கை முழு இசைவினைப் பெறவில்லை. இலீசியப் பாதிரி

யார் ஆரிசம் அவர்களும் கியூசாவைச் சேர்ந்த கார்டினல் நிகோலாசும் இக்கொள்கையை மறுத்தனர். நிகோலாசு 1440–ல் "இந்நிலம் நிலையின்றி மற்றைய விண்மீன்களைப் போலவே இயங்கி வருகின்றது என்பதனை நான் நெடு நாட்களாகவே உணர்கின்றேன். அதன்படி, நிலம் ஒவ்வொரு இரவு–பகலும் தன் மைய அச்சின்மீது ஒரு முறை சுற்றி விடுவதையும் அறி கின்றேன்,'' என்றார்.

பின்னாளில், 1600–இல் கியார் தனோ புருனோ என்பவர், ''ஓர் உலகத்திற்கு எல்லை கற்பித்தால் அவ்வெல்லையை அடுத்து மற்றவைகளைக் கொள்வதால் அண்டம் எல்லை யில்லாததாக ஆக்கி விடுவது இயல்கின்றது. ஆகவே, அண்டத்தினை ஓர் எல்லைக்கு உட்பட்டதாகக் கற்பித்தல் பேருண்மைக்கும் அறிவு ஆற்றலுக்கும் தகாததாகவே படுகின்றது. ஆகவேதான் நிலத்தைச்சார்ந்த கோள்களால் ஆகிய உலகத்தைப் போலவே எண்ணற்ற முடிவில்லாத வெவ்வேறு உலகங்கள் நிலவுகின்றன எனக் கூறியுள்ளேன். பிதகோரசைப் போலவே நானும் நிலத்தை ஒரு விண்மீனாகவே கருதுகின்றேன். நிலத்தைப் போலவே நிலாவும், கோள்களும், மற்றைய கணக்கற்ற விண்மீன்களும் உள்ளன. இவை யாவும் உலகங்களே!'' என்று தெளிவாகச் சொல்லியுள்ளார். ஆனால், இவர் தம் கருத்துக்கள் வைதீகக் கொள்கைகளுக்கு மாறுபட்டவையாய் அமைந்துவிட்டதால் தீய்க்கு இரையாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்!

## தொலை நோக்கி முயற்சி

இவ் வைதிகக் கொள்கையின் மீது மறுத்துரைக்க முடியாத வன்மையான தாக்குதல் சமய வாதிகளோ அன்றித் தத்துவ அறிஞர்களோ செய்யத் துணிய வில்லை. நிகோலசு காப்பர்நிகசு (1473—1543) என்னும் போலந்து நாட்டு வானியல் அறிஞரே துணிந்து மறுத்துக் கூறினார். அவர் தம் நூலில் தாலமியின் வட்ட—மேல்வட்ட அமைப்புக்களின் பயனின்மையைத்தெளிவு படுத்தி யிருந்தார். அவர் நிலமும் பிறகோள்களும் ஒரு நிலையான பகலவனை மையமாகக் கொண்டு சுற்றி வருவதாய் எண்ணினார். அப்புத்தகம் பதிப்பிக்கப்பட்டு சுமார் எழுபதாண்டுகள், கலிலியோ தொலைநோக்கியை அமைத்து ஆராய்ச்சியைத் தொடங்கியவரை, காபர்நிகசின் கொள்கைகள் காரசாரமாக வாதிக்கப்பட்டன. ஆயினும் அக் கொள்கைகள் அவ்வளவு காலமும் மெய்ப்பிக்கப்படவுமில்லை; பொய்ப்பிக்கப் படவுமில்லை.

இங்கே, கலிலியோ தொலைநோக்கி வழியே ஆராயத் தொடங்கியதை அறிய முற்படு முன்னர் தொலை நோக்கியை அமைத்த வரலாற்றையும அக் கருவி தோற்றிய அறிவுப் புரட்சியையும் அறிவது நலம் பயக்கும்: மூக்குக் கண்ணாடியைக் கண்டு பிடித்த உரோசர்பேகன் என்பவர் விண்மீன்களை நாம் விரும்பும் அளவிற்கு அண்மையில் இருப்பதுபோலத் தென்படச் செய்ய ஒரு தொலை நோக்கியை எப்படி அமைக்க முடியும் என்று விளக்கி யிருந்தார். கேட்கும் கருவியானது அதன்மேல் விழுகிற எல்லா ஒலியலைகளையும் தொகுத்துச் செவித் துளை வழியாகச் செவிப்பறையின்மேல் படச் செய்து செவியின் கேள்வித் திறனை மிகுதியாக்குகின்றது. அதைப்போலவே, தொலைவில் உள்ள ஒரு பொருளிலிருந்து

வருகின்ற ஒளிக்கதிர்களை யெல்லாம் தக்கபடி தொகுத்துக் கண்ணின்மணி வழியே விழித்திரையின்மேல் விழச்செய்யுமாறு ஒரு கோளக ஆடியை (Lens) அமைத்தலால் விழியின் திறமையை மிகுதிப்படுத்தலாம் என்பதைக் குறிப்பிட்டிருந்தார்.

முதல் தொலைநோக்கி 1608-இல் இலிப்பெர்சி என்பவரால் தான் செய்யப்பட்டது. இக்கருவியைப்பற்றிக் கேள்விப்பட்ட படூவாப் பல்கலைக் கழகக் கணக்குப் பேராசிரியர் கலீலியோ கலிலீ தொலை நோக்கியின் அடிப்படை உண்மைகளை அறிய முற்பட்டு மிகச் சிறந்த முறையில் 1610-ஆம் ஆண்டில் அருமையான தொலை நோக்கியை அமைத்தார்.

கலீலியோவின் தொலைநோக்கி இத்தாலியில் பெரு வியப்பை விளைவித்தது. அறக்காவலரும், சட்டமன்ற உறுப்பினரும் கலீலியோவின் தொலை நோக்கியை வெனிசிற்குக் கொண்டுபோய் அவர்கட்குக் காட்டுமாறு கேட்டுக்கொள்ளும் அளவிற்கு அக் கருவியைப் பற்றி நம்பத்தகாத கதைகளும் பரவின. வெறும் கண்களுக்குத் தென்படாத தொலைவில் கடலில் மிதந்து வந்த கப்பல்களைத் தொலை நோக்கியில் காண்பதற்காக அது வைக்கப்பட்டிருந்த மிகவுயர்ந்த மணிக்கூண்டுகளின் உச்சிக்குத் தம் சட்டமன்ற உறுப்பினரில் மிக்க வயதானவரும் ஏறுவதை வெனிசு நகரக் குடிமக்கள் அப்போது பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் அந்நாட்களில் அக்கருவிபெற்ற சிறப்பைக் கூறுதல் வேண்டா. கலீலியோவே சொன்னது போல, வெறும் கண்ணால் காணும் ஒளியைப் போல் தொலை நோக்கி நூறு மடங்கு ஒளியினைச் சேர்த்தது; மேலும், ஐம்பதுகல் தொலைவில் இருந்த ஒரு பொருளை ஐந்து கல் தொலைவில் இருப்பது போன்றே தெளிவாகக் காட்டியது.

கலீலியோ தம் கைகளாலேயே செய்த தொலை நோக்கியின் முன்னால் அமர்ந்த முதல் நாளாகிய 7 சனவரி 1610 மனிதனின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு திருநாளாகும். அன்று தான் உண்மையான வானியல் ஆராய்ச்சி வளர்ச்சிகளுக்கு வழி பிறந்தது என்றும் சொல்லலாம்.

## சுருட்டு, சிகரெட், பீடி!

"சுருட்டு, சிகரெட், பீடி முதலியவற்றின் மீது எனக்குள்ள வெறுப்பை எச் சொல்லால் வெளியிட வல்லேன்? அவைகளின் புகையை என்னென்று சொல்வேன்? உயிர்களை விரைந்து கொல்லும் நச்சுப் புகை என்று சொன்னால் என் உள்ளம் நிறை வெய்தும். காங்கிரஸ் ஆட்சி கள்ளுக்கடையை ஒழிக்க முயன்றது போற்றற்குரியதே. அது, சுருட்டு, சிகரெட், பீடிக் கடையையும், காப்பிக் கடையையும், இன்ன பிறவற்றையும் தொலைக்க ஏன் முயலுவதில்லை?—என்று யான் நினைப்பதுண்டு. குளிர் நாட்டவரைப் பார்த்து வெம்மை நாட்டார் ஏன் நடித்தல் வேண்டும்? க்ஷயம் முதலிய கொடிய நோய்களுக்கு இரையாகி என்புக் கூடுகளாய் ஏன் அகாலத்தில் சாதல் வேண்டும்?"

—திரு. வி. க.
வாழ்க்கைக் குறிப்புக்கள்
(பக்கம்—871)

## பழமை பொய்த்தது

அவர்தம் தொலை நோக்கியின் வழியே பால்வெளி (Milkway) யைப் பார்த்தார். அங்கே தெரிந்தவை வானத்தின் கரும் பின்னணியின்மீது செம்பொற்பொடி போன்று சிதறியுள்ள மங்கிய விண்மீன்களின் திரளேயாகும் என்றறிந்தார். அக்காட்சியிலிருந்து வானியற் பொருள்களைப்பற்றி வழங்கிவந்த புராணங்களும் புனைகதைகளும் மங்கி மறைவதை உணர்ந்தார். அடுத்தபடியாகத் தொலைநோக்கியை நிலாவை நோக்கித் திருப்பினார். நிலா தன் பரப்பில் நிழலிடும் மலைகளைப் பெற்றுள்ளதைக் கண்டார். கியார்தனோ புருனோ முன்பே கூறியிருந்தவாறு நிலாவும் நம் நிலவுலகைப் போன்ற ஓர் உலகமாய் இருப்பது மெய்யாவதை அறிந்தார்.

மேலும் கலீலியோ தொலைநோக்கியின் வழியே வியாழனைப் பார்த்தார். ஒரு மெழுகுவத்திச் சுடரைச் சுற்றுகின்ற விட்டில் பூச்சிகளைப் போன்ற நான்கு சிறுகோள்கள் வியாழனின் பேருருவினைச் சுற்றி வட்டமிடுவதைப் பார்க்கின்றார். அக்காட்சி காபர்நிகசு கற்பனை செய்த பகலவனது அமைப்பின் முழுமையான ஓர் உண்மைப்படியாக அமைந்துள்ளதைக் கலீலியோ உணர்கின்றார்.

இவ்வாறே கலீலியோ புதன், வெள்ளி முதலிய கோள்களையும் நோக்கி ஆராய்ந்தார். அதிலிருந்து புதனும் வெள்ளியும் பிற எல்லாக் கோள்களைப் போலவே பகலவனைச் சுற்றித்தான் சுழல்கின்றன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டார். ஆகவே, நிலம் அண்டத்தின் மையமாக அமைந்தது என்ற வைதிகக் கொள்கை, ஒரு மெழுகுவத்தியின் சுடரைச் சுற்றும் விட்டில் பூச்சிகளைப்போன்று பகலவனைச்சுற்றி வட்டமிடும் பல கோள்களில் ஒன்றே நிலமும் என்ற புதுக் கொள்கை, ஆகிய இரண்டின் உண்மைகளைத் தெரிந்து கொள்ளத் தொலைநோக்கி வழிகோலியது. கலீலியோவின் கண்டு பிடிப்புக்களால் அரிச்டாட்டிலும், தாலமியும் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக விண்கோள்களைப்பற்றி நினைத்திருந்தவர்களிற் பெரும்பாலோரும் முழுக்க முழுக்க எதிர்பாராத அளவிற்குத் தவருக இருந்தார்கள் என்பது தெளிவாக்கப்பட்டது.

சுருங்கச் சொன்னல், 'அண்டத்தில் மனிதன் எங்கே நிற்கின்ருன்?' என்ற கேள்விக்குத் தாலமி, 'அண்டத்தின் மையப் புள்ளியில்!' என்ருர்; கலீலியோவோ, 'மிகப் பெரிய மையப் பகலவனைச் சுற்றி வட்டமிடும் பல சிறு பொருட்களில் ஒன்றே அண்டத்தில் மனிதனின் இல்லமாகும்!' என்ருர். இவ்வாருகக் கலீலியோ முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மனிதனின் இருப்பிடத்தை உணர்த்திய தொலைநோக்கிக் காலத்தின் தொடக்கத்திலிருந்தே அண்டத்தில் பற்பல கோள்களின் அமைப்புச் சிறப்புக்களை ஆய்ந்து அறிந்துணர வானியல் தக்க வழியில் வளர்ந்து வருகிறது எனலாம்.

# ஒற்றுமையும் வேற்றுமையும்

இந்தி மூலம் :
சந்த்ராம்

தமிழில் :
ப. திருவேங்கடம்

*[சாதியை ஒழிக்க முடியுமா? முடியாதா? ஒழிக்க வேண்டுமா? வேண்டாமா? பழைய முயற்சிகள் யாவும் பலன் தராமல் போனதற்குக் காரணமென்ன? சாதி உள்ளவரையில் நாட்டின் ஒருமைப்பாடு ஏற்படுமா? இவை பற்றி சாதி ஒழிப்பு மன்றத் தலைவரான* **சந்த்ராம்** *என்பவர் இந்தியில் எழுதியுள்ள நூலின் சாரத்தைத் தமிழில் தருகிறார், இக்கட்டுரையாளர். இந்நாட்டைப் பீடித்துள்ள பெரு நோயான சாதிபற்றித் தொடர்ந்து பல கட்டுரைகள் இவரால் எழுதப்படும்.]*

"இந்தியாவில் 26 ஜனவ்ரி 1950 இல் குடியரசு ஆட்சி துவங்கிற்று. கிடைத்த சுதந்திரம் நிலையாக இருக்குமா? அது ஓங்கி வளருமா? அதை இழக்கவேண்டி வந்தால் இழந்தே விடுவோமா? நமது வரலாற்றில் ஒளி வீசி நிற்கும் இச்சுதந்திரத்தைப் பற்றி இவ்விதமான எண்ணங்களால் கவலையுற்றிருக்கிறேன்.

அன்று இந்தியாவில் வாழ்ந்த மக்கள் ஒருவருக்கொருவர் ஒட்டாமல் தனித்து வாழ்ந்ததினால் தான் இந்தியா தன்னுடைய சுதந்திரத்தைஇழந்து அன்னியனுக்கு அடிமையாயிற்று. அந்த நிலை மீண்டும் வரவேண்டுமா? சாதியின் பெயராலும், சம்பிரதாயத்தின் பெயராலும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு, சண்டையிட்டு சிதறுண்டதின் காரணமாக, நமது பழைய எதிரிகள் இன்றும் நம்மிடையே ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தவிரவும், புதுப் புது அரசியல் கட்சிகள், புதுப் புது கொள்கைகள், கோட்பாடுகள், புதுப்புது தோற்றங்களோடு முளைத்த வண்ணமாகவே இருக்கின்றன.

நம்முடைய மக்கள், சாதியைவிட, சிறுசிறு கட்சிகளைவிட, இன உறவு உணர்ச்சிகளைவிட, தேசப்பற்றே பெரிதென மதிக்க வேண்டும். உள்ளங்களைப் பாழ்படுத்தும் இத்தகு உணர்வு பேதங்கள் நம்மைவிட்டு நீங்கவில்லையானால் மீண்டும் நம் இந்தியா அடிமை நாடாகவே மாறிவிடுமோ என்னவோ, என்று நினைக்கக் கூட அஞ்சுகின்றேன்.

குடியரசு என்பது ஆட்சி முறைகளில் ஒரு ஏற்பாடு மட்டுமன்று. அது ஒரு வாழ்க்கை முறை என்று கூடக் கூறலாம். அதில், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளின் சாயல் மண்டிக் கிடக்கிறது. ஆனால் நம்முடைய சமூக வாழ்க்கையில் சமத்துவமும், சகோதரத்துவமும் கொஞ்சங் கூடக் காணக் கிடைக்கவில்லை. மாறாக, நான் உயர்ந்தவன்; அவன் தாழ்ந்தவன்; நான் தீண்டத்தகுந்தவன்; அவன்

தீண்டப்படாதவன் என்பன போன்ற மனத் திகிலால் பீடிக்கப்பட்ட நாடாக இருக்கிறது; இன்றைய இந்தியா, சகோதரத் துவத்தினுடைய மேன்மையான தோற்றம் என்ன? இந்தியாவில் நாலா பக்கங்களிலும் வாழும் மக்கள் ஒரே தாய் வயிற்று பக்கள் என்ற எண்ண எழுச்சி தானே? அந்த எண்ணத்தில் எழுவது தானே தேச ஒற்றுமை? அந்த ஒற்றுமைதானே பரந்து கிடக்கும் தேசத்திற்கு பொருத்தமான அம்சமாகும்? மாறாக, நாம் நூற்றுக்கணக்கான சாதிக்காரர்களாகவும், சாதிக்குள் பற்பல சாதிக்காரர்களாகவும், நவகிரகங்களைப்போல் ஒருவரை ஒருவர் பார்க்காமல் திரும்பிக் கொண்டே இருந்தால் ஐக்கிய இந்தியாவை எங்கே சமைத்தெடுக்க முடியும்?

## நாட்டின் கேடு

நாமெல்லோரும் ஒன்று அல்ல தான். ஆனால் நம்முள் ஒற்றுமைப் பாங்கு திகழவேண்டும். இதை யாரும் மறந்துவிடக் கூடாது. சாதி வேற்றுமைப் போக்கு, தேச ஒற்றுமைக்கு முரண்பட்டது. நாம் அவ்விரண்டையும் ஒரே காலத்தில் காக்க முடியாது; காக்க. முற்படவுங் கூடாது.

> "நம்முள் மண்டிக் கிடக்கும் அத்தனை வலிமையையுங் கொண்டு நாட்டு ஒற்றுமைக்காகவே அர்ப்பணித்து கடுஞ்சேவை புரிய முன்வரல் வேண்டும்."

மேலே கூறியது வரும் பொருள் உரைக்கும் வல்லுநர் ஒருவரின் சிந்தனையில் தோன்றியதாகும். இந்தியாவின் அரசியல் சட்டங்களை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்காரி னுடையதேயாகும். அவர் ஓர் உத்தமர். இந்தியாவின் நலத்தில் தூய்மையான எண்ணங் கொண்டவர். ஆகவே அவர் இந்தியாவில் மண்டிக் கிடக்கும் சாதி வேற்றுமை, உயர்வு, தாழ்வு போன்ற எண்ண நோய்களுக்கு நல்ல நல்ல மருத்துவ முறைகளைக் கண்டு சொல்லிச் சென்றார்.

உலகிலே வகை வகையான பண்பாடு கொண்ட நாடுகள் இருக்கின்றன. அவைகளில் 21க்கு 19 என்ற ரீதியில் நாடுகள் அன்னியர் ஆக்கிரமிப்பிற்கு ஆளாயின. அத்துணை அளவு அன்னியர்கள் பலம் வாய்ந்தவர்களா என்றால் இல்லை! பின்? அந்தந்த நாடுகளுக்குள்ளேயே நிலவி வந்த உட்பூசல், ஒற்றுமையின்மை, பிளவு மனப்பான்மை ஆகியவைகளால், வந்தோருக்கு வழி வகுத்துத்தான் அடிமையானார்கள். எந்த ஒரு நாடு தம்முள் ஐக்கியத்துடனும், வலுவுடனும் செயலாற்றுகிறதோ அத்தகு நாட்டை எந்த ஒரு அன்னிய சக்தியும் அதன் அணுவைக்கூட அசைக்க முடியாது. அதற்கு மாறாக, உள்ளுக்குள்ளே புகைச்சலும், தனித்தனியே சிதறிக் கிடக்கும் தன்மையும், மண்டியுள்ள நாடானால், அது எத்துணை அளவு இராணுவ வலுக்கொண்டிருந்த போதிலும், அன்னிய தாக்குதலினின்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே முடியாது.

நமது வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்ப்போமானால், நம்முடைய க்ஷத்திரிய வீரப் பரம்பரையினரின் போர் வீரம், எந்த வகையிலும் முஸ்லீம்களின் வீரத்துக்குக் குறைந்ததே கிடையாது. நமது கலைகளும், ஞானங்களும் எந்த வகையிலும் பின்னடைந்ததே கிடையாது. இருந்தும் அன்னியனுக்கு அடிமைப்பட்டோம் என்றால் என்ன காரணம்? அன்னியன் படையெடுத்தான்! எந்தத் தருணத்தில்? நமக்

குள்ளே சாதிச் சண்டை வலுத்து நின்ற நேரத்தில். உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற வேற்றுமையில் திளைத்து உழன்ற நேரத்தில்! ஆச்சாரம் என்றும், அனுச்சாரம் என்றும் ஒருவரை ஒருவர் வஞ்சித்து நின்ற சமயத்தில்! எவ்வளவு எளிதாக அன்னியனுக்குப் பாதை வகுத்துத் தரப்பட்டது?

சீனர்கள் நன்றி கெட்ட தனமாகவும், வஞ்சகத் தன்மையோடும் நம் தாய்நாட்டின் மீது படையெடுத்தார்கள். அந்தப் படையெடுப்பு நம் நாட்டை ஒரு குலுக்குக் குலுக்கியே விட்டது. இதிலிருந்து நாம் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், நம்மிடையே மண்டிக்கிடக்கும் சில பல தகாத முறைகளை விட்டொழிக்க முற்பட வேண்டும். அதாவது சாதி வேற்றுமை, மாகாணப்பாகுபாடு, மதப்பூசல், மொழிக்கசப்பு இத்தனையையும் ஒதுக்கித்தள்ளியாக வேண்டும். சீனப் படையெடுப்பின் விளைவாகவேனும் நம் நாட்டிற்கு வந்துற்ற மேற்கூறிய அவக் கேடுகளையாவது அகற்றி ஒழிக்க வேண்டும். இச்சமயம் இந்தியாவெங்கும் ஒருமித்த ஒற்றுமை நிலவி வருவது கண்கூடு. மக்கள் மனதிலும் இந்தியா ஒன்று என்ற எண்ணம் பரவி வருவதும் கண்கூடு. ஆனால் உள்ளுக்குள் மதப்பூசல்களும், சாதிச் சண்டைகளும் நீறுபூத்த நெருப்புப் போல் மறைந்து கிடக்கின்றன. இது பயங்கரமான நிலை!

## சிவாஜியின் தோல்வி

கவி ரவீந்தரநாத் டாகூர் சிவாஜியைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

"சிவாஜியின் முயற்சியால் நாடு முழுதும் ஒருவித எழுச்சி காணப் பெற்றது. ஆனால் அது வேரற்ற எழுச்சியாகும். நாடு ஒற்றுமைக் கோணத்தில் திரும்பி விட்டதாக உணர்ந்தோம். ஆனால் சமூகத்திலே புரையோடிக்கிடந்த பிளவு மனப்பான்மை, குற்றங்குறைகள், திரைமறைவில் தத்தம் வேலைகளைக் காட்ட முற்பட்டன அதனால் ஒற்றுமையெனும் சிறந்த காட்சியை நீண்ட நாட்கள் நீடித்துக் காண இயலாமற் போய்விட்டது. சிவாஜிகூட "சாதிப் பூசல்கள், சமூக ஏற்றத் தாழ்வுகள் அப்படி அப்படியே இருந்து தொலையட்டும்; ஒற்றுமை மட்டும் நிலவட்டும் என்று தான்", கூறினார்.

அப்படிக்கூற வேண்டிய கட்டாயம் சிவாஜிக்கு ஏன் ஏற்பட்டது? மகம்மதியர்களின் படையெடுப்பு தாங்கொணு முறையில் போய்க் கொண்டிருந்தது. அழிந்தொழிந்து கொண்டிருந்த இந்து மதத்தார்களைக் காப்பாற்றத் துடித்தார். ஆகவே சாதிப் பிரிவுகள், சாதியால் தனித்துத் தனித்து

### நாத்திகக் கொள்கை

மதவாதிகளால் மிகவும் வெறுக்கப்படுகின்ற நாத்திகனின் பக்கமும் சில நல்ல பண்புகள் உண்டு. கற்பனையுலகில் காணப்படும் பொருள்களை உண்மை என்று நம்புகின்ற மதவாதியின் உறுதியான கொள்கைகளைக் காட்டிலும், கடவுள் நம்பிக்கையற்றவனது அய்யப்பாடு பன்மடங்கு மேலானது என்றே கூறலாம்.

—சார்லஸ் டி. கோர்ஹாம்.

"மதம் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை"

நின்று அவரவர் ஆச்சாரங்களை ஒழுகுதல் போன்ற நஞ்சு நிறைந்த முறைகளில் சீர்திருத்தம் காணமுடியாமல், அன்று இந்துமதம் எப்படிப்போற்றப் பட்டதோ அதே இந்துமதத்தை அப்படியே வைத்துக்காப்பாற்றத் தான் முடிந்தது. இது புரியாமல் அத்துணை இந்துக்களையும் தமது ஆட்சியின் கீழ் கொணர்ந்து இந்து சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்தப் பாடுபட்டார். இது மணலைக் கயிருகத் திரித்திடும் முயற்சியாகி விட்டது! சாதி பேதத்தில் மூழ்கிப் பிளவுண்டு நிற்கும், நெல்லிக்காய்களாக சிதறுண்டு கிடக்கும், இந்து சமூகத்தை வைத்துக் கொண்டு இந்த அகண்ட பாரத பூமியில் சுதந்தரத்தைக் காப்பாற்றவா முடியும்? அது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகவும், இயற்கைக்கே மாறுபட்டதாகவுமல்லவோ காட்சியளிக்கிறது!" -("சிவாஜியும் அவரது காலமும்") பக்கம் 430—431

சிலர், "இப்போது எங்கே சாதியிருக்கிறது? எல்லாம் போய்விட்டதே! இப்போது எல்லாம் ஒன்றுதானே," என்கிருர்கள். இவர்கள் ஒன்றை மறந்து விடுகிருர்கள். சாதியைத் தெருக் கதவின் வழியாக விரட்டிவிட்டால் அது கொல்லைப்புற வழியாக உள்ளே நுழைந்திடும் சக்தி வாய்ந்த தன்ருே? சாதி பலவகையிலும் ஒளிந்து நெளிந்து தக்க தருணம் கிட்டும்போதெல்லாம் சமூகத்தினூடே நுழைந்து பற்பல குறும்புகளைப் புரிந்திடும் தன்மை வாய்ந்ததல்லவா?

திரு. ஏமரி. டி. கூர் என்பவர் "கோல் ஆஃப் இந்தியா" என்னும் தம் நூலில் கூறுகிருர்:—

"இயந்திரத் தொழிற் சாதனைகளால் சாதி அழிந்தொழிந்து வருகிறது என்பது தப்பான கருத்தாகும். காலம் மாற மாற காலத்திற் கேற்றவாறு சாதியும் புதுப்புது உருவங்கள் எடுத்து அது தன் சாகாவரத்தை நிலைநாட்டிக் கொண்டே வருகிறது. ஆகவே சாதி சாகாது. தற்போது, சாதியினுடைய வலிமை நிறைந்த கொடுமைகள் குறைந்திருக்கலாம். ஆனல் சாதி மனப்பான்மை குறைவதற்குப் பதிலாக நிறைந்து பரவியிருப்பது கண்கூடு. இதை யாரும் மறுக்க வியலாது"

## நடத்தையில் பகுத்தறிவு

"நமது நியாயமான, பொருத்தமான ஆசைகளை நினைவில் வைக்கப் பழகுவதுதான் பகுத்தறிவோடு கூடிய வாழ்க்கை; குறிப்பிட்ட சமயத்தில் நிகழ்வதை மட்டும் மிக்க வலுவானதாகக் கொள்வது போதாது. கருத்தில் பகுத்தறிவு, மாதிரியே காரியத்தில் பகுத்தறிவும், அளவைப் பொறுத்த சங்கதியாகும். முழு மூச்சான பகுத்தறிவு வாழ்க்கை என்பது சாதிக்க முடியாத லட்சியம். ஆனல் சில மனிதரையாவது பைத்தியக்காரர்கள்என்று பிரிப்பதுபோல், சிலரை மற்றவர்களைவிடப் பகுத்தறிவாளர்கள் என்று பிரித்துக் கூற முடியும். உலக வளர்ச்சிக்கே முழுக் காரணமாயிருப்பது, இந்தப் பகுத்தறிவு வளர்ச்சிதான்."

—பர்ட்ராண்டு ரஸ்ஸல்
("Sceptical Essays")

**மதிப்புரை:**

# "இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்: சங்க காலம்"

*[ஆசிரியர்; சி. இலக்குவனார், எம்.எ; எம். ஓ. எல். வெளியிடுபவர்: வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராஜ வீதி, புதுக்கோட்டை. விலை ரூ. 2–50.]*

பண்டைத் தமிழ் இலக்கியக் குறிப்புக்களைக் கொண்டு தமிழர் வாழ்வை விவரித்துள்ள பல நூல்கள் சென்ற நாற்பது ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இதுவரை வெளிவராத செய்திகள், விளக்கங்கள் பல இந்த நூலில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

கி. மு. 1000 முதல் கி. பி. 100 வரை வாழ்ந்த புலவர்களுள் 473 புலவர்கள் பாடிய 2279 பாடல்களும், இன்னார் பாடியன என்று கூற இயலாத 102 பாடல்களும், ஆக 2381 பாடல்களைத் துருவி ஆராய்ந்து, பண்டைத் தமிழருடைய வாழ்வியலை ஆசிரியர் இலக்குவனார் இந்நூலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இந்நூலில் காணப்பெறும் செய்திகளிலும் விளக்கங்களிலும் குறிப்பிடத்தக்கனவற்றில் சில வருமாறு:

இலக்கியம் எனும் தூய தமிழ்ச் சொல் குறிக்கோளை—இயம்புவது (இலக்கு+இயம்) எனப்பொருள் தரும். இந்தப் பொருளுக்கு ஏற்ப தமிழ் இலக்கியம் தமிழர் தம் வாழ்வில் பலதுறைகளில் கொண்டிருந்த குறிக்கோள்களை இயம்புகின்றது. வள்ளுவர் தமது குறளில் ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்று கூறும் இலக்கணத்திற்குப் பொருத்தமுடையதாகவே பண்டை இலக்கியத்தில் தமிழ்நாடு காட்சி அளிப்பது நாம் உணரவேண்டிய தொன்று. நகரங்களைப் பற்றிப் பேசுங்கால் மகளிர் அழகை நகரத்தோடு ஒப்பிட்டுக் கூறுவது பண்டைத் தமிழ்ப் புலவர்களின் தனிப்பெருமையாகும். இப்புதுமைமிகு மரபு வேறு மொழிப் புலவரிடம் இல்லை. மக்கள் தொழில் வகையில் பிரிந்து இருந்தனர். பிறப்பு வகையில் பிரிவது ஆதியில் தமிழ் நாட்டில் இல்லை. ஆயினும் பிறப்பால் உயர்வு தாழ்வு பின்னர் ஏற்பட்டது. வடநாட்டில் இராசனுக்கு உரியது இராஜ்யம் எனக் கருதப்பட தென்னாட்டில் அரசாள்வோர் அரசரெனக் கூறப்பட்டனர். அரச மரபு என்ற ஓர் மரபு இல்லாதது குறிப்பிடத்தக்கது. அரசர்கள் நாட்டை கோட்டம், கூற்றம், பேரூர், ஊர் எனப் பகுத்து ஆண்டனர். பண்டைத் தமிழர் அறிவியலையும் கலை இயலையும் முறையே எண்ணும் எழுத்தும் எனக் குறித்தனர். அக்காலக் கல்வித் திட்டத்தில் பொதுக்கல்வி, சிறப்புக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி ஆகிய மூவகைக் கல்வியும் பொருந்தியிருந்தது. ஏழாண்டு பொதுக்

# கடிதங்கள்

## தன்னேரில்லாத ஏடு

இரண்டாண்டுகளாகவே தொடர்ந்து ஊன்றிப் படிக்கின்றேன். வாழ்வில் இணைந்ததுறைகள் அனைத்தையும் தேர்ந்த அறிவறிந்த அறிஞர்களைக் கொண்டு தெளிவுபடுத்துகிறது, குத்தூசி. தலையங்கங்கள் தமிழகத்தின் தேர்ந்த பேனு என்பதை திங்கள்தோறும் வீரிட்டுக் கூறுகின்றன. சமதர்ம நாடுகளில் வரிமுறைகளைக் கூறி நம் நாட்டில் (சமதர்ம கட்சி ஆட்சியில்) பட்ஜெட்டில் உள்ளகுறைபாடுகளை சிறப்பாக "குத்தூசி"யில் வெளியிட்டார்பொருளாதார நிபுணர்-தமிழர் டாக்டர் ப. நடராசன் எம். ஏ, எம் லிட்., சாதி ஒழிப்பு கடமைகளைக் கூறினர், திரு எஸ். ராமநாதன், திரு வி. பொ. பழனிவேலன் போன்ருேர். சமூக அமைப்பைப் பற்றி திரு. லட்சுமிரதன் பாரதி கட்டுரைகள்; மற்ற மொழியினரோடு தமிழர் உயர்வுபற்றி இளந்திரையன் கட்டுரைகள் மிகவும் கருத்தாழம் கொண்டனவாகும். தொழிலாளர்—தொழிலதிபர் உறவுகளை, கடமைகளை முறையாகக் கூறினர் ப. சீரன் பீ. ஏ., ஆங்காங்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கல்வி நிபுணர் குஞ்சிதம் அம்மையார், டாக்டர். ரஷ்யா எம். பி., பி. எஸ். ஆகியோரின் கருத்துக்கள் வழிகாட்டுகின்றன. திரு முருகு. சுந்தரத்தின் "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்"விமரிசனம், அந்தத்துறையில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய தரம் உள்ளது. தமிழரசர் கால நாணயங்கள் பற்றி திரு எஸ். ஆறுமுகம் கட்டுரைகள் தமிழர்க்குப் பெருமை சேர்ப்பன. பலமொழிகளில் தமிழ்ச் சொற்கள் என்ற திரு. இராமச்சந்திரன் எம். ஏ., யின் தொடர் கட்டுரைகள் தமிழின் தகுதியை கூட்டிடும் செயல். ஆசிரியர் தரும் உலகப் பெரியார்கள் வரலாறுகள், தமிழர்க்கு அறிவூட்டவல்ல நல்லனவாகும். காதல் பற்றிய குறள் கூறும் குறிப்புக்கள் தெம்பூட்டுவன. வாழ்க்கையில் எழும் சிக்கல்களை தீர்க்கத் தகுந்த வழிகளைக் கூறும் பல உயர் பத்திரிகைகளின் மொழி பெயர்ப்புகள் எனக்கே பலமுறை உதவியுள்ளன. கவிதைப் பகுதி அறிவுப்பாதையைப் நோக்கி அழைப்பதாகும்.

பொதுவில் இது சிறந்த மாத வெளியீடு; சிறப்பில் தன்னேரில்லாத புத்தகம், "ரீடர்ஸ் டைஜக்ட்" போன்று! இரண்டாவது ஆண்டு தாண்டி மூன்ருவது ஆண்டில் நுழைந்துள்ள 'குத்தூசி' கூறுவது இதுதான்:

கோடீசுவரர், பண முதலைகள் தமிழர் பகைவர்கள் மட்டுமே ஏட்டை நடத்த முடியும் என்பதைப் பொய்யாக்கி, கொள்கைப் பிடிப்பும், தன்மான நோக்கும் உள்ள பிச்சாண்டியாலும் மிகச் சிறந்த ஏட்டை நடத்திக்கொண்டிருக்க முடியும்.

தமிழர்கள் அனைவரும் கட்சி வெறியைத் தாண்டி சீரிய ஏடான "குத்தூசி" தங்கள் நல்வாழ்வு ஏடு என்பதால், வாங்கி வாழ்விப்பார்களாக.

—ப. சீரன்
(மன்சுராபாத்)

* * *

## சமுதாயப் போக்கு

நம் மக்கள், நண்பர்கள், பலரிடையில், கொள்கையில் உறுதி, பகுத்தறிவில் நாட்டம் என்பது இல்லை. பத்திரிகை படிப்பதிலும் ஆர்வமில்லை. ஓய்வில்லாத உழைப்பு, காலமெல்லாம் பொருளீட்டல், பல்வேறு மனக் கவலைகள், ஓயாத போட்டிகள்; பதவி-புகழ் தேடும் சுயநல ஆசைகள்,

வளர்வதையும்; பிறர் கட்டாயத்துக்கு எதையும்வேண்டாவெறுப்புடன் பின்பற்றும் போக்கு மலிந்திருப்பதையும் வாழ்க்கை நடைமுறையில் காண்கிறோம். கடவுள், மதப் பண்டிகைகள், தேர்–திருவிழாக்களுக்கும், ஆலயத் திருப்பணிகளுக்கும், புராண காலட்சேப காரியங்களுக்கும்; மூடநம்பிக்கை அடிப்படையில் பொருளைக் கோடிக் கணக்கில் மக்கள் கொட்டி உண்டியல் குவிகின்றது. திருப்பதி உண்டியல் கணக்கில் மாதம் ஒன்றுக்கு 3 லட்சம், 5 லட்சம், 9 லட்சம் ரூபாய்; நகைகள், பக்தர்கள் போட்ட காணிக்கைப் பொருள் என்று அறிக்கை வருகிறது. அரசியல் பெயரால் தேர்தல் காரியங்களுக்கும் பிற நிகழ்ச்சிகளுக்கும் பெரும் பொருள் வீணாகிறது. சமூகத்தில் பிறந்தது முதல், திருமணம், மரணம், வீடு கட்டிக் குடிபுகும் நிகழ்ச்சிகள்—பல்வேறு சடங்குகட்கும் பொருள்கள் செலவுகள் எத்தனையோ கோடிக்கணக்கில் பாழாகிறது.

மக்கள் வாழ்க்கை இன்பத்துக்கு என்ற பெயரால் பஞ்சமாபாதகங்களைச்செய்திட பல்வேறு வகைகளில் பொருள் இழப்பதைக் காண்கிறோம். பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பெருந்தலைவர்களிடம் கொடுத்த நிதிகள், பொருள்கள், யாவும் மண்ணில் புதைக்கப்பட்டதைப் போல் ஆகிவிட்டன.

இதெல்லாம் அறிந்தும் பகுத்தறிவுப் பணிக்காக நீங்கள் முனைந்து நிற்பது வியப்பாயிருக்கிறது!

—அ. பொன்னம்பலனார்.
(பூவாளூர்)

* * *

## காஷ்மீர் வாழ்க்கை

14700 அடி உயரமுள்ள மகாகுணஸ் கணவாய் வழியாக 13000 அடி உயரத்தில் உள்ள அமர்நாத் குகைக்குப் போனோம். வழியில் சேஷநாக் ஏரி, பஞ்சதர்ணி என்ற ஐயாறு பள்ளத்தாக்குகள், பனிமலைகள், உறைந்த ஆறுகள் யாவும் கண்டோம். ஒருமைலுக்குமேல் உறைபனியின்மீது நடந்தோம். உடல் வருத்தம் தவிர உள்ள எழுச்சி உண்டாகவில்லை.

காஷ்மீரத்தின் அழகை அங்குள்ள மக்களுடைய வறுமை, பிணி, அறியாமை, அழுக்கு போன்றவை மறைத்தன. அந்நாட்டுக்கே மனம் இரங்குகிறது. (நேபாளம் அதனினும் பிற்போக்கான நாடு என அறிகிறேன்.) செல்வக் கொழுப்பு ஒருபால். வறுமைக் குவியல் மற்றொரு சார். இருபதாம் நூற்றாண்டில் அந்நாட்டு மக்களுள் 90 சதவிகிதம் இன்னமும் பத்தாம் நூற்றாண்டில் உள்ளனர். நாம் காணும் அருமையான நூற்பு வேலை, தையல் வேலை, யாவும் தம் வீட்டைவிட்டுக் கிளம்பி அறியாத பெண்கள் பனிக் காலத்தில், நீண்ட இருட்டில், வீட்டில் அடைபட்டுச் செய்யும் அடிமை வேலை என்பதை உணர மனம் வேகின்றது.

—கோவை இராமசாமி.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

Regd. No. M. 7629 KUTHOOSI November 1963

# குத்தூசி

[ஆசிரியர் : சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.
விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

## விற்பனையாளர் :

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவையான இதழ்களுக்கு, இதழ் ஒன்றுக்கு 40 காசு வீதம் 15-ந் தேதிக்குள் தெரிவித்து விடுவது நல்லது. 100 இதழ்களுக்குமேல் பெறுபவர்களுக்கு 25% கழிவு தரப்படும்.

## விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய் ; அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய் ; இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.
(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை - 30.

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அநுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.